பக்கங்கள்: இருபத்தெட்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 16 திங்கட்கிழமை (03.10.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 311



03
நிபுணர் குழு அறிக்கையை எப்படி நம்ப முடியும்




14
மகிந்தவின் கைப் பொம்மையா வீரவன்ச...?



23
மூன்று கண்கள் கொண்ட பூனை



25
மும்பையின் தொடர் வெற்றிக்கு முற்றுப்புள்ளி

## போர்க்குற்ற விசாரணையை ஆதரியுங்கள்

### அமெரிக்காவிடம் வலியுறுத்து

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைக்கு அமெரிக்கா ஆதரவு வழங்கவேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கு மனு ஒன்றை அனுப்பி வைத்துள்ளது சர்வதேச மன்னிப்புச் சபை.

மன்னிப்புச் சபையின் இலங்கை விவகாரங்களுக்குப் பொறுப்பு வகிக்கும் நிபுணரான ஜிம் மக் டொனால்ட் இந்த மனுவை வெள்ளை மாளிகைக்கு அனுப்பிவைத்துள்ளார்.

போரின்போது விடுதலைப் புலிகளும், அரச படையினரும் போர்க்குற்றங்களையும், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களையும் புரிந்திருந்தனர் எனவும் மனுவில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளர் பான் கீ-மூன் நியமித்த மூவர் கொண்ட நிபுணர் குழுவின் அறிக்கையில் இந்தக் குற்றச்சாட்டுக்களை நம்புவதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன என்று கூறப்பட்டுள்ளது.

தமது படைகளால் மேற்கொள்ளப்பட்ட மீறல்கள் தொடர்பாக இலங்கை அரசு காத்திரமான விசாரணைகளை மேற்கொள்ளத் தவறியுள்ளது எனவும் இந்த மனுவில் அவர் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்குவதற்கு போரின்போது இருதரப்பினரும் மேற்கொண்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அனைத்துலக விசாரணைகள்

பக் 27

# மன்னார் படுகையில் எரிவாயு கண்டுபிடிப்பு




மன்னாரில் எண்ணெய் அகழ்வுப் பணிகள் நடைபெறவுள்ள 8 பிரிவுகளும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளன.

## இலங்கை செல்வந்த நாடாகும் என்கிறார் ஜனாதிபதி மஹிந்த

கொழும்பு, ஒக்ரோபர் 3

இலங்கையின் வடமேற்கே மன்னார் கடற்பரப்பில் எரிவாயு வளம் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று அறிவித்தார். வரலாற்றில் எரிபொருள் வளம் இருப்பதாக உறுதியாகக் கண்டறியப்பட்டிருப்பது இதுவே முதல் தடவை. கண்டியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய ஜனாதிபதி எரிவாயு இருப்பதை உறுதிப்படுத்திய அறிவிப்பை நாட்டுக்கு விடுத்தார். 4,442 அடி ஆழத்தில் எரிவாயுப் படுகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இலங்கையும் எதிர்காலத்தில் செல்வந்த நாடாகலாம் என்று ஜனாதிபதி கண்டியில் மேலும் குறிப்பிட்டார்.

மன்னார் கடற்பரப்பில் எரிபொருள் கிணறு தோண்டும் பணியில் ஈடுபட்டுள்ள தனியார் நிறுவனத்திடமிருந்து இந்தத் தகவல் ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டதாக அரச தகவல் திணைக்களம் நேற்றுத் தெரிவித்தது.

''மன்னார் கடல்படுகையில் எரிவாயு இருப்பது அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ள அணிகளால் உறுதி செய்யப்பட்டிருக்கின்றது என்று கண்டியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய ஜனாதிபதி அறிவித்தார். நாட்டில் எரிவாயு வளம் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருப்பது இதுவே முதல் தடவை'' என்று தகவல் திணைக்களம் வெளியிட்ட செய்திக் குறிப்புத் தெரிவித்தது.

இதேவேளை, புத்தளத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் ஜனாதிபதியின் சகோதரருமான பஸில் ராஜபக்ஷ, மன்னார் கடல் படுகையில் எண்ணெய் அகழும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

இந்த முயற்சி சாதகமாக அமையுமானால், எதிர்காலத்தில் எரிபொருள் தேவைக்காக இலங்கை ஏனைய நாடுகளில் தங்கியிருக்க வேண்டி இருக்காது என்றும் அவர் தெரிவித்தார்.

மன்னார் கடல்படுகையில் 33 ஆயிரம் கிலோ மீற்றர் பரப்பளவான இடத்தில் ஒரு பில்லியன் பீப்பாய்கள் எரிபொருள் வளம் காணப்படுவதாகக் கடலுக்கடியில் நடத்தப்பட்ட முதல்கட்ட ஆய்வுத் தகவல்களில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனை அடுத்து அந்தப் பகுதிகள் 8 துண்டுகளாக்கப்பட்டன. அதில் எண்ணெய் அகழ்வதற்கான ஒப்

பக் 27

## ஊடகங்கள் ஊடாக மஹிந்தவுக்கு அழைப்பாணை

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அடங்கிய 30 பக்க அழைப்பாணையை இலங்கையில் உள்ள ஊடகங்கள் உட்பட 100 ஊடகங்களில் வெளியிட உள்ளதாக அமெரிக்காவின் அரசமைப்பு சட்டத்தரணி புரூஸ் பெய்ன் அறிவித்துள்ளார். இதன் மூலம் அந்த அழைப்பாணை ஜனாதிபதியைச் சென்றடைந்தமை உறுதிப்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

செப்ரெம்பர் 30ஆம் திகதி குறித்த நீதிமன்ற ஆவணம் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகச் சட்டத்தரணி புரூஸ் பெய்ன் தெரிவித்துள்ளார்.

சட்டத்துக்குப் புறம்பான படுகொலைகளுக்குப் பொறுப்பானவர் என்று கூறி ஜனாதிபதி மீது அமெரிக்காவில் சித்திரவதைக்கு உள்ளானோரைப் பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

படையினரால் படுகொலை செய்யப்பட்ட மூவரின் சார்பில்

பக் 27

### கடந்த ஆண்டு மதிப்பீட்டின்போது

## வாக்காளராகப் பதிவு செய்யாதோருக்கு அதற்கான வாய்ப்பு - 15ஆம் திகதி வரை

யாழ்ப்பாணம், ஒக். 03

யுத்தம் மற்றும் அசாதாரண சூழ்நிலைகளால் தமது சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து வெளிநாடுகளிலும், வெளி மாவட்டங்களிலும் வாழ்பவர்கள் தம்மை தமது சொந்த இடங்களில் வாக்காளர்களாகப் பதிவு செய்துகொள்ளும் வாய்ப்புக் கிட்டி உள்ளது.

கடந்த ஜூன் மாதம் மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பதிவின் போது தமது பெயர்களைப் பதிவு செய்யத் தவறியவர்கள் இம்மாதம் (ஒக்ரோபர்) 15ஆம் திகதிவரை தமது பெயர்களைப் பதிந்துகொள்ள முடியும். இதற்கென விசேடமான விண்ணப்பப் படிவங்களும் தயாரித்து விநியோகிக்கப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்த 30 வருடங்களுக்கு மேல் இடம்பெற்ற யுத்தம் மற்றும் அசாதாரண சூழ்நிலை காரணமாகப் பல லட்சம் பேர் சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து வெளி மாவட்டங்களிலும், வெளிநாடுகளிலும் தங்கி உள்ளனர்.

**சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்**

2010ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பதிவின் போது ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் ஏற்பட்ட பாதிப்பை நிவர்த்தி செய்து கொள்ளும் வகையில் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

2010ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வாக்கெடுப்பின் போது இடம்பெயர்ந்தவர்கள் மட்டுமன்றி, அகதி முகாம்களிலும் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் போராளிகளும் வாக்காளர் இடாப்பில் தமது பெயர்களைப் பதிந்து கொள்ள முடியவில்லை.

இந்த விசேட திட்டத்

பக் 27

## ஐ.தே.கவுக்குப் பாதகமாக கூட்டமைப்பு செயற்படாது

### ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை

கொழும்பு, ஒக். 3

ஐக்கியதேசியக் கட்சிக்கு பாதகம் ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு தீர்மானத்தையும் தமிழ் தேசிய கூட்டமைப்பு எடுக்காது என்று அடித்துக் கூறுகிறார் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.


கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மனோ கணேசனின் ஜனநாயக மக்கள் முன்னணியை ஆதரிப்பதாக வெளிவந்த செய்திகள் குறித்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

''யார் எந்த தீர்மானத்தை எடுத்தாலும் கொழும்பில் மூவின மக்களும் எமது கட்சியையே ஆதரிக்கின்றனர். இதை எவரது தீர்மானத்தாலும் மாற்றமுடியாது'' என்றும் ரணில் கூறினார்.

''இருதரப்பினருக்கும் இடையில் மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டமை தொடர்பில் நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசியல் தீர்வு யோசனையை அரசிடம் முன்வைத்துள்ளது. அதேபோல், அரசும், தனது தீர்வு யோசனையை முன்வைக்க வேண்டும் இருதரப்பினரிடையில் ஓர் இணக்கம் ஏற்படவேண்டும்.

பக் 27


உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இடி மின்னலும் பிற மாவட்டங்களில் தெளிவான வானிலையும் நிலவும் சாத்தியம்

# திருநெல்வேலிப் பகுதி வெறும்வளவில் முதியவர் கழுத்து நெரித்துக் கொலை

### கையில் இருந்த மோதிரங்கள்; பணம் மாயம்



யாழ்ப்பாணம், ஒக். 3

திருநெல்வேலி, ஆடிய பாதம் வீதியில் விவசாய பீடத்துக்கு அருகில் ஆள்அரவமற்ற வளவு ஒன்றிலிருந்து நேற்றுக் காலை முதியவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

சடலமாக மீட்கப்பட்டவர் கோண்டாவில், தில்லையம்பதியைச் சேர்ந்த கணபதி வேலுப்பிள்ளை (வயது 71) என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளார்.

வேலுப்பிள்ளை திருநெல்வேலிப் பகுதியில் பாதணிகள் தைக்கும் தொழில் செய்பவர். அவர் நேற்று முன்தினம் தொழிலுக்குச் சென்ற பின் வீடு திரும்பவில்லை என்று உறவினர்கள் கூறினர். பின்னர் நேற்றுக்காலை அவர் சடலமாக மீட்கப்பட்டார்.

இவரது சடலம் மீட்கப்பட்ட வளவில் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் வேறு இரண்டு நபர்களுடன் இவர் இருந்ததைத் தாம் கண்டனர் என்று அயலவர்கள் கூறினர்.

சடலம் ஒன்று காணப்படுவதாக 119 என்ற அவசர தொடர்பு எண்ணுக்கு தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து கொழும்பிலிருந்து கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டு கோப்பாய் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

யாழ். நீதிமன்ற மேலதிக நீதிவான் அ.பிறேம்சங்கர் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை நடத்தியதுடன் உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

சடலம் மீட்கப்பட்ட இடத்தின் அருகில் பயன்படுத்தப்பட்ட மதுப்போத்தல்கள் இரண்டு, குறைபீடி என்பன காணப்பட்டன எனப் பொலிஸார் கூறினர். சுருட்டுடன் சைக்கிளும் அங்கிருந்து மீட்கப்பட்டன.

உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையின் படி கழுத்து நெரிக்கப்பட்டதால் வேலுப்பிள்ளையின் இறப்பு நிகழ்ந்துள்ளது. கையில் அணிந்திருந்த மோதிரங்கள் கழற்றப்பட்டதற்கான அடையாளங்களும், உடலில் பரவலான சிறு கீறல் காயங்களும் காணப்படுவதாக அறிக்கை கூறுகிறது.

முதியவர் கையில் இரண்டு மோதிரங்களும் ஒரு தொகைப் பணமும் வைத்திருந்தார் என்றும், அவர் சுருட்டு பாவிப்பவர் என்றும் மதுபானத்தை வீட்டில் மட்டுமே அருந்துபவர் என்றும் உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ஒ-10-15-04-86)

## தொம்பேயில் கடும் பாதுகாப்பு

தொம்பேயில் பொலிஸ் காவலில் இருந்தபோது உயிரிழந்த அப்புஹாமிலாகே கயான் சாரங்க எனும் 28 வயது இளைஞனின் இறுதிக்கிரியை இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. இந்த இறுதிக்கிரியைக்காக கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இராணுவத்தினரின்உதவியுடன் விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவர். கிரியைகள் பலஹெல்ல பொது மயானத்தில் நடைபெறவுள்ளன.

இளைஞனின் சடலத்தின் மீதான பிரேத பரிசோதனையைத் தொடர்ந்து, உடல்பாகங்களை அரசாங்க பகுப்பாய்வாளருக்கு அனுப்புமாறு கம்பஹா வைத்தியசாலை சட்ட மருத்துவ அதிகாரி உத்தரவிட்டுள்ளார்.

பிரேத பரிசோதனை தொடர்பாக அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு சட்ட மருத்துவ அதிகாரிக்கு கம்பஹா மேலதிக நீதவான் இந்திக அத்தநாக்க உத்தரவிட்டுள்ளார்.

இந்த இளைஞன் மர்மமாக உயிரிழந்ததையடுத்து பிரதேச வாசிகள் தொம்பே பொலிஸ் நிலையத்தின் மீதும் பொலிஸ் வாகங்கள் மீதும் தாக்குதல் நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (10)

## கரந்தெனியவில் மருந்துவர் கொலை விசாரிக்க சி.ஐ.டியின் 3 குழுக்கள்

காலி கரந்தெனியவில் 40 வயதான மருத்துவர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டமை குறித்து விசாரிப்பதற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் (சி.ஐ.டி.) மூன்று குழுகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் குறித்து ஏற்கனவே 5 குழுக்கள் விசாரணை நடத்தி வருவதாக தென்மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் விஜய அமரசிங்க தெரிவித்துள்ளர். இதுவரை எவரும் கைதுசெய்யப்படாத நிலையில் மேலதிகமாக இந்த விசேட குழுக்கள் நியமிக் கப்பட்டுள்ளன. (10)

### தேசிய சுகாதார வாரம் பிரகடனம்:

## யாழ். செயலகத்தில் இன்று ஒருங்கிணைப்புக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 3

இன்று தொடக்கம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரையான காலப்பகுதி தேசிய சுகாதார வாரமாக சுகாதார அமைச்சினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதனையொட்டி மாவட்ட அரச, அரச சார்பற்ற நிறுவனத் தலைவர்களுக்கான சுகநலவார ஒருங்கிணைப்புக் கூட்டம் யாழ். செயலகத்தில் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

தேசிய சுகாதாரவாரம் தொடர்பான நிகழ்வுகளைச் சிறப்பாக நடத்துவதற்கு அனைவரும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மற்றும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் ஆகியோர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இது தொடர்பான நிகழ்வுகள் மாவட்டத்தின் சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிகளிலும் ஒன்பது நாள்களும் நடைபெறவுள்ளன. இதன் முதல்நாள் நிகழ்வே இன்று யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சுகாதார வார செயற்பாடுகளை அனைத்துத் தரப்பினரின் ஒத்துழைப்புடன் வெற்றிகரமாக ஒருங்கிணைத்து நடைமுறைப்படுத்துவதற்கான ஆலோசனைகள் மற்றும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அதேசமயம் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பிரதேச சுகநலவார செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கான கூட்டம் பிரதேச செயலாளர்களின் தலைமையில் அந்தப் பிரதேச செயலகங்களில் இடம்பெறும்.

தேசிய சுகாதார வாரம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நிறைவடைந்ததும் மறுநாள் திங்கட்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் காலை 9 மணிக்கு நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன்போது சிறந்த சுகாதார பணியாளர்களுக்கான கௌரவிப்பும் சுகாதார பணியாளர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஒ-4)

# ஐ.நாவில் மஹிந்த உரையாற்றிய வேளை அமர இடமின்றி தவித்தார் சவேந்திர சில்வா

ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரையாற்றிய போது, ஐ.நாவுக்கான இலங்கையின் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா அமர்வதற்கு ஆசனம் இல்லாமல் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐ.நா பொதுச்சபையில் ஜனாதிபதி மஹிந்த கடந்த 23 ஆம் திகதி காலை உரையாற்றியிருந்தார். அன்று 35 நாடுகளின் தலைவர்களுக்கு உரையாற்றுவதற்கு நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது.

எல்சல்வடோர் நாட்டின் தலைவருக்கு அடுத்தாக, ஆறாவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரையாற்றியிருந்தார்.

ஐ.நா பொதுச்சபையில் அதிகளவு நாடுகளின் தலைவர்கள் அன்று உரையாற்றியதால், ஒவ்வொரு நாட்டுக்கும் குறிப்பிட்டளவு ஆசனங்களே ஒதுக்கப்பட்டிருந்தன.

இலங்கைக்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்களை, மகிந்தவுடன் சென்றிருந்தவர்கள் நிரப்பிக் கொண்டதாலேயே மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு அமர்வதற்கு ஆசனம் கிடைக்கவில்லை. ஜனாதிபதியுடன் அமைச்சர்கள், முக்கிய பிரமுகர்கள், அதிகாரிகள் என்று 100இற்கும் அதிகமானோர் நியூயோர்க் சென்றிருந்தனர்.

அதேவேளை மகிந்த ராஜபக்ஷ உரையாற்றிய போது ஐ.நா பொதுச்சபையில் ஏனைய நாடுகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்த பெரும்பாலான ஆசனங்கள் வெறுமையாகவே காட்சியளித்தன.

தனது உரையைக் கேட்பதற்கு அதிகளவு இராஜதந்திரிகள் வராதது மகிந்த ராஜபக்ஷவுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியதாகவும், இதனால், தனது உரையை முதலாவது நாளில் ஒழுங்கு செய்யத் தவறியதற்காக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை அவர் கடிந்து கொண்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ-10)

# நிகழ்வுகள்

**அதிபர்களுக்கான கூட்டம்**

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு வலயக் கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-207)

**கலந்துரையாடல்**

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 1, 2 ஆகிய வகுப்புக்களின் வகுப்பாசிரியர்களுக்கான செயற்பாடு சார்ந்த ஆங்கில உரையாடல் ABOE போட்டி தொடர்பான கலந்துரையாடல் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-207)

**திருக்குறள் மனனப் போட்டி**

காரைநகர் கோட்ட மட்ட திருக்குறள் மனனப் போட்டி இன்று காலை 9 மணிக்கு கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவில் நடைபெறவுள்ளது. பாடசாலை மட்டத்தில் முதலாம் இடத்தில் வெற்றி பெற்ற மாணவர்கள் இந்தப் போட்டியில் பங்கு கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-267-311)

**சுகாதார வார நிகழ்வுகள்**

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் சுகாதார வாரம் இன்று திங்கள்கிழமை முதல் எதிர்வரும் 9 ஆம் திகதி வரை தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரிக்கு உட்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்படவுள்ளன. (ஒ-36)

**முதியோர் வார நிகழ்வுகள்**

கைதடி சாந்தி நிலையம் முதியோர் தினத்தை முன்னிட்டு நடத்தும் முதியோர் வார நிகழ்வுகள் இன்று காலை 8.30 மணிக்கு இல்ல மண்டபத்தில் நடைபெறவுள்ளது.முதியோர் இல்ல அத்தியட்சகர் நா.இராஜலிங்கம் தலைமை யில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக உள்ளூ ராட்சி திணைக்கள ஆணையாளர் எஸ்.அச்சுதன் கலந்து கொள் வார். இந்த நிகழ்வில் உள்ளூராட்சி திணைக்கள அலுவலர்கள் முதியோர்களுடன் கலந்துரையாடுவதுடன் கலை நிகழ்வுகளில் முதியோர்களுக்கான விளையாட்டுப் போட்டியும் மந்திகை சத்திய சாயி நிலையத்தினரின் பஜனை நிகழ்வும் இடம்பெறும். (ஒ-313)

**சுயதொழில் கடன் வழங்கல்**

யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிஸ்கோ பிரிவினரால் இளைஞர் யுவதிகளுக்கான சுயதொழில் கடன் வழங்கும் நிகழ்வு இன்று மு.ப.11 மணிக்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-313)

**கர்நாடக சங்கீதம்**

கோண்டாவில் கிழக்கு ஹரி இளைஞர் மன்றத்தின் 10 ஆவது நிறைவு தின்த்தை முன்னிட்டு ஸ்ரீ வல்லிபுரநாதர் ஆலயத்தின் திருவிழாவில் இடம் பெறும் கலைநிகழ்வுகளில் இன்று மாலை 7.30 மணிக்கு ஆலயமுன்றலில் சாயித்தியன் குழுவினர் வழங்கும் கர்நாடக சங்கீதம் இடம்பெறும். (ஒ-313)

**பாராட்டு விழா**

முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 148 வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கான பாராட்டு விழா இன்று முற்பகல் 10 மணிக்கு வித்தியானந்தக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தமிழ் மொழித்தினப் போட்டி, பேச்சுப் போட்டியில் இரண்டாம் இடம்பெற்ற செம்மலை மாணவிக்கும், நாட்டார் இசை இரண்டாம் இடம்பெற்ற மு/கள்ளப்பாடு மாணவருக்கும் 2010 ஆம் ஆண்டு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற 2009 ஆம் ஆண்டுக்கான அகில இலங்கை ஆசிரியர் தின விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்ற ஆசிரியர்களுக்குமான பாராட்டு விழாவும் இடம்பெறும். (எ-433)



# நிபுணர் குழு அறிக்கையை எப்படி நம்ப முடியும்?

**கட்சி ஒன்றுக்கு எதிராக எதிர்க்கட்சி தூற்றுவதற்குத் தயாரிக்கப்படும் 'சேறு' பூசும் பத்திரிகை போன்றதுதான் 'தருஸ்மன்' அறிக்கை....!**

**கேள்வி:- நீங்கள் சிவிலியன்கள் உயிரிழப்பு குறைவானது என்பதை ஒப்புவிக்க இந்த சனத்தொகை மதிப்பீடு விவரங்களால் முடியும் என்று கூறுகிறீர்கள். "சனல்- 4" தொலைக்காட்சியின் குற்றச்சாட்டுகளுக்கும் இது பொருந்துமா?**

பதில்:- எல்லா குற்றச்சாட்டுகளுக்கும் சிறந்த பதில்தான் இது. இதுதானே பெரிய குற்றச்சாட்டு. அதற்குச் சரியான பதில் இதுதான். சிவிலியன் ஒருவர் கூட கொல்லப்படவில்லையென நான் சொல்லமாட்டேன். குறைந்தளவான சேதம் என்பது எமது கொள்கை. கொள்கையளவில் நாம் கூறினோம் குறைந்தளவான சேதம்தான் எமது இலக்கு என்று. இறுதிச் சண்டையில் புலிகள் சிவிலியன்களை மனித கேடயங்களாகப் பயன்படுத்தினர். அவர்களும் சிவிலியன்கள் அல்லவா? சிவிலியன்கள் இழப்பு இருந்ததுதான் என்றாலும் அது மிகவும் குறைந்தளவானது என்பதை கூறிக்கொள்ள விரும்புகின்றேன். மிகவும் குறைவான எண்ணிக்கைதான் அவை. வேண்டுமென்றே திட்டமிட்டு செய்த விடயங்கள் என்று அவற்றை பட்டியலிட முடியாது. இது முதலாவது விடயம். இரண்டாவது விடயம் என்னவெனில், இராணுவத்தின் ஒரு சிலரால் ஒருசில தவறுகள் நடந்திருக்கக்கூடும். அதை இல்லை என்று நான் கூறமாட்டேன். ஆனால், அது கொள்கை அடிப்படையில் முழு இராணுவமும் செய்ததல்ல. தனிநபர்களால் நடந்தவை அவை. அப்படியானவற்றில் ஈடுபட்டவர்கள் என்று கருதப்படுபவர்களுக்கு உரிய தண்டனை வழங்க நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். இதுபோல் எம்மிடம் வேறுபலர் இவ்வாறானவற்றை சுட்டிக்காட்டினால் அவற்றை நாம் தேடிப்பார்த்து குற்றம் செய்தவர்களுக்குத் தண்டனை வழங்கவும் தயார்.

சரியான புலிகள் என்று எம்மால் அடையாளம் காணப் பட்டவர்களைக் கூட இன்னமும் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்ல முடியவில்லையே. அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள்தானே இன்னமும் நடந்துகொண்டிருக்கின்றன. அதுபோல் புலிகளில் இருந்து பெரும் தவறுகளை செய்தவர்களுக்குக்கூட நாம் புனர்வாழ்வு அளித்துள்ளோ மல்லவா! அவர்களை நாங்கள் கொல்லவில்லையே. "ஆயிரம்பேருக்கு புனர்வாழ்வு அளித்தோம். தடுப்புக் காவலில் உள்ளவர்களுக்கும் புனர்வாழ்வு அளிக்கப்படுகிறது. அப்படி செய்யும் எங்கள் மீது ஏன் குற்றம் சுமத்துகிறீர்கள்? நாம் அவற்றுக்கு பயமில்லை. நேர்மையாக இந்த பிரச்சினைகளை பார்ப்பார்களானால் அவற்றிற் கானபதில் எம்மிடம் உள்ளது. எங்களால் சுட்டிக்காட்டமுடியும்.

**கே:- நீங்கள் இப்படிக்கூறுகிறீர்கள். ஆனால், ஆலோசனை வழங்குவதற்காக ஐ.நா. செயலாளரால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை உங்களின் கூற்றுக்கு முரணாக உள்ளதே?**

ப:- எந்தவித அடிப்படையுமின்றி ஒவ்வொரு இடங்களில் தகவல்களை எடுத்துக்கொண்டு தயாரிக்கப்பட்ட தருஸ்மன் அறிக்கை தவறான ஒன்று. சிவிலியன்களை கொன்றோமென்ற பெரிய குற்றச்சாட்டுதானே இதில் உள்ளது. இவை தவறு என்று தெளிவாக நாம் உறுதிப்படுத்தியுள்ளோம். இனியும் உறுதிப்படுத்துவோம். நாம் மட்டுமல்ல பல அமைப்புகள் இதனை செய்திருக்கின்றன. அடுத்ததாக தருஸ்மன் ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையிலுள்ள பல விடயங்கள் எந்த அடிப்படையும் அற்றவை. வைத்தியசாலை ஒன்றின் மீது குண்டு போடப்பட்டதாக தருஸ்மன் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. எவருமே உயிரிழக்கவில்லை என்பதை நாம் உறுதிப்படுத்தியுள்ளோம். அவர்கள் கூறும் அந்த தினத்தில் அதாவது, குண்டு வீசப்பட்டதாகக் கூறும் தினத்தில் குறிப்பிட்ட வைத்தியசாலை என்ன நிலைமையில் இருந்தது என்பதை எம்மால் ஆதாரத்துடன் கூறமுடியும். இதைவிட எமக்கு புதிய தகவல் ஒன்று கிடைத்துள்ளது.

இவர்கள் காண்பிக்கும் ஒளிப்படமானது பலவருட காலத்துக்கு முன் புலிகள் இயக்கத்திலிருந்த தற்போது சிறையிலிருக்கும் புலி உறுப்பினர் ஒருவரின் கம்பியூட்டரில் இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது. (சிரிக்கிறார்) இப்படித்தான் அடிப்படைகளே இல்லாத குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர்.

ஐ.நா. விசாரணைக்குழு அறிக்கையை வாசிக்கும் போதே, அதற்கான தகவல் ஆங்காங்கே எடுக்கப்பட்டிருப்பது தெளிவாகியிருந்தது. கட்சி ஒன்றிற்கு எதிராக எதிர்க்கட்சி ஒன்றினால் தூற்றுவதற்கு தயா ரிக்கப்படும் "சேறு" பூசும் பத்திரிகை ஒன்றைப் போல்தான் தருஸ்மன் அறிக்கையும் இருக்கிறது. அடிப்படை இல்லாமல் வெறுமனே குற்றஞ்சுமத்துவதற்காக போடப்பட்ட விடயங்கள் அவை. எங்களுக்கு அதாவது, அரசுக்கு எதிராகச் செயற்படும் பத்திரிகையில் வெளிவந்த செய்திகள் இந்த அறிக்கையில் புகுத்தப்பட்டுள்ளன. எங்களுக்கு எதிரான எழுத்தாளர்கள் சிலரினதும், ஏன் புலிகளினதும் கருத்துக்கள் இந்த அறிக்கையில் புகுத்தப்பட்டுள்ளன. இப்படி தகவல்களைச் சேர்த்து அறிக்கை தயாரிக்க முடியுமா? எங்கிருந்து இந்த அறிக்கையை எழுதினார்கள்? இலங்கைக்கு வந்தார்களா? அறிக்கையொன்றை எப்படித் தயாரிப்பது? எங்களிடம் கேட்டார்களா? எமது பக்கத்தைப் பார்த்தார்களா? ஒரு தரப்பை மட்டும் பார்த்து அறிக்கை தயார் செய்தால் அந்த அறிக்கை சரியானதாகிவிடுமா? ஏன் இலங்கைக்கு வரவில்லை? இலங்கை பிரச்சினையின் அடிமட்டம் வரை ஏன் சென்று ஆராயவில்லை? ஏன் இது குறித்தான தகவல்களை எங்களிடம் கேட்கவில்லை? இவற்றைக் கேட்டிருந்தால் நாம் சுட்டிக்காட்டியிருப்போம்.

சரி இலங்கையிடம் கேட்கவில்லை. இங்குள்ள ஐ.நா அமைப்புகளின் பிரதிநிதிகளிடம் ஏன் கேட்கவில்லை? அவர்களிடமாவது வந்து கேட்டிருக்கலாம். உலக உணவுத் திட்டத்திடம் கேட்டார்களா? இந்த காலகட்டடத்தில் உணவு விநியோகப் பணிகளுக்கான பணியில் உலக உணவுத் திட்டமே ஈடுபட்டிருந்தது. அவர்களிடம் கேட்டிருக்கலாம். எவ்வளவு தொகையான உணவை அனுப்பியிருந்தீர்கள் என்று அவர்களிடம் கேட்டிருக்கலாம். உலக உணவுத் திட்டத்தின் அப்போதைய பிரதிநிதியிடம் இதை கேட்டிருக்கலாமல்லவா? அப்படித்தானே செய்யவேண்டும். பக்கச்சார் பற்ற விதத்தில் நடக்கவேண்டும். அந்த காலகட்டத்தில் மருந்துகளை நாம் அனுப்பவில்லை. உணவுகளை அனுப்பவில்லை என்று குற்றஞ்சாட்டுகின்றனர். இந்த காலகட்டதில் என்னென்ன சென்றுள்ளது என்பதை அவர்கள் வந்து பார்த்தார்களா? அவற்றை அனுப்புவதற்கு எம்முடன் உலக உணவுத்திட்டமும் தொடர்புபட்டது. எவ்வளவு அரிசி, பருப்பு, சீனி அனுப்பினீர்கள் என்று அந்த நிறுவனத்தின் தலைமையிடம் கேட்டீர்களா? அந்த தலைமையுடன் பேசினீர்களா? எங்களிடமாவது கேட்டீர்களா? இல்லையே.

**பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ எமது சகோதர பத்திரிகையான 'சுடர் ஒளி'க்கு வழங்கிய செவ்வி இது.**

**செவ்வி கண்டவர் க. சிவராஜா**

CONSULTATIVE COMMITTEE OF HUMANITARIAN ASSISTANCE எனப்படும் குழு மாதத்திற்கு இரு தடவை கூடியதை இங்கு குறிப்பிடவிரும்புகிறேன். அமெரிக்கத் தூதுவர், பிரிட்டிஷ் தூதுவர், ஜப்பான் தூதுவர் உட்பட்டோர் தொடர்புகொண்டு ஆராய்ந்தோம். அவர்களிடம் கூட கேட்டிருக்கலாம்.

**கே:- அப்படியாயின் இந்த அறிக்கையை நீங்கள் நிராகரிக்கிறீர்களா என்று அர்த்தப்படுத்தலாமா?**

ப:- இப்படியான அறிக்கையை எவராலும் ஏற்றுக் கொள்ள முடியாது. அறிக்கையை தயாரிக்கும்போது அவர்கள் இங்குவந்து தேடிப்பார்த்திருக்க வேண்டும். முதலில் பக்கச்சார்பற்றவர்களை இந்த குழுவில் நியமித்திருக்கவேண்டும். இதற்கு முன்னரும் இலங்கை குறித்துப் பல்வேறு கருத்துகளை வெளியிட்ட மூன்று பேர்தான் இந்தக் குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர். அப்படியானவர்கள் கூடாது. இது நீதியாக இடம்பெற வேண்டும். ஐ.நா.சபை நீதியாக நடக்கவேண்டும்.

**கே: ஐ.நா.சபை நீதியாக நடக்கவில்லை என்று கூறுகிறீர்களா?**

ப: ரஷ்யா, சீனா, இந்தியா அல்லது பாகிஸ்தான் நாடுகளைச் சேர்ந்த ஒருவரை இந்தக் குழுவில் ஏன் இடம்பெறச்செய்யவில்லை? அந்தந்த நாடுகள் பெயர் குறிப்பிடும் ஒருவரை இதில் நியமித்திருக்கலாமல்லவா? நீங்களே ஒருவரைத் தெரிவுசெய்து தாருங்கள் என சீனாவிற்கோ, அமெரிக்காவிற்கோ, இந்தோனேஷியாவிற்கோ கூறியிருக்கலாம். அந்தந்த அரசுகள் ஒருவரை இதற்காகப் பெயரிட்டிருக்கலாம். அப்படிச் செய்து ஒரு குழுவை அமைத்து அறிக்கை பெற்றிருந்தால் அந்த அறிக்கை சிறப்பாக இருந்திருக்கும். அவர்கள் இங்கு வந்து பேசியிருந் தால் நன்றாக இருந்திருக் கும். இப்படித்தான் சர்வ தேசம் செயற்பட வேண்டும்.

> **இராணுவத்தின் ஒரு சிலரால் ஒருசில தவறுகள் நடந்திருக்கக்கூடும். அதை இல்லை என்று நான் கூறமாட்டேன். ஆனால், அது கொள்கை அடிப்படையில் முழு இராணுவமும் செய்ததல்ல. தனிநபர்களால் நடந்தவை அவை. அப்படியானவற்றில் ஈடுபட்டவர்கள் என்று கருதப்படுபவர்களுக்கு உரிய தண்டனை வழங்க நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். இதுபோல் எம்மிடம் வேறுபலர் இவ்வாறானவற்றை சுட்டிக்காட்டினால் அவற்றை நாம் தேடிப்பார்த்து குற்றம் செய்தவர்களுக்குத் தண்டனை வழங்கவும் தயார்.**

**கே: - ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை பக்கச்சார்பாக செயற்படுவதாக அரசு குற்றஞ் சாட்டியுள்ளது. இதன் அடிப்படையிலா?**

ப:- இதைப்பற்றி நான் முழுமையாக ஆராயவில்லை. ஆராய்ந்த பிறகே கருத்துக் கூறலாம்.

**கே:- தமிழர் பிரச்சினைக்கு 13ஆவது அரசியலமைப்பு திருத்ததுக்கு அப்பால்சென்று தீர்வு வழங்குவதற்கான பேச்சுகள் நடந்து கொண்டிருக்கின்றன. அரசுக்குள் இது விடயத்தில் சில முரண்பாடுகள் குறிப்பாக அமைச்சர்மார் மத்தியில் இருப்பதாக தெரிகிறது. இதுகுறித்து உங்களின் கருத்து என்ன?**

ப:- நான் கூறுவது இதுதான். வரலாற்றைப் பாருங்கள். பயங்கரவாதப் பிரச்சினை இருந்த காரணத்தினால்தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாமல் இருந்தது. இப்போது பயங்கரவாதத்தை ஒழித்திருக்கிறோம். ஜனநாயக அடிப்படையில் எம்மால் உட்கார்ந்து பேசமுடியும். கடந்த காலங்களில் எத்தனை அரசியலமைப்பு யாப்புக்கள் இருந்தன. நாற்பதாம் ஆண்டு காலப்பகுதியில் சுதந்திரம் கிடைத்தபோது ஒரு யாப்பு வந்தது. 72ஆம் ஆண்டு அரசியலமைப்பு மாற்றப்பட்டது. 78ஆம் ஆண்டு அரசியலமைப்பு மாற்றப்பட்டது. 87ஆம் ஆண்டு மாற்றப்பட்டது. அந்தந்த சந்தர்ப்பங்களில் அப்போதைய தேவைகள்- நிலைமைகளுக்கேற்ப தலைவர்கள் ஒன்றுகூடிப் பேசி இப்படியான மாற்றங்களைச் செய்தனர். அதை தேவையான எந்த நேரத்திலும் செய்யலாம். மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் ஒன்றாக அமர்ந்து தமக்குத் தேவையான அரசியலமைப்பினை உருவாக்குவது பற்றிபேசித் தீர்த்துக்கொள்ளலாம். ஆனால், இது ஜனநாயக அடிப்படையில் இடம்பெறவேண்டும். எமது நாட்டுக்குள் இது ஏற்படுத்தப்பட வேண்டும்; பேசித் தீர்க்கவேண்டும். அடிப்படை வாதத்தில் இருக்கக் கூடாது.

நாட்டுக்கும், மக்களுக்கும் ஏற்றவாறாக இது அமைய வேண்டும். முன்னேறியிருக்கும் நாடுகளைப் பாருங்கள். ஒன்றுபட்ட நாடாக சிந்திக்க வேண்டும். சீனர்கள், மலாயர், தமிழர் எல்லோரும் ஒன்றாக இணைந்துச் செயற்பட்டதால்தான் சிங்கப்பூர் இன்று முன்னணியில் இருக்கிறது. நாம் அப்படித்தான் சிந்திக்கவேண்டும். முஸ்லிம்கள் முஸ்லிம் விதத்திலும், தமிழர்கள் தமிழ் விதத்திலும், சிங்களவர்கள் சிங்கள விதத்திலும், கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவ விதத்திலும் சிந்திக்காமல் நாம் இலங் கையராக சிந்திக்க வேண்டும். அனைவரும் ஒன்றுபட்டு செயற்படக்கூடிய சந்தர்ப்பத்தை நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும். அன்று இந்தப் பிரச்சினைகள் தீரும். ★

SHAMROCK
PAPER CLASS
A/L 2012 & REPEAT
CHEMISTRY
பொது இராசாயனம்
Wed 3 p.m. Thurs 6.15 a.m
M.A. நிரோஜன் B.Sc
Physics S. ஈரி B.Sc
Tue, Thurs 5.30 p.m
C/Ma-G. கண்ணன் B.Sc
A/L 2013 நடைபெறுகின்றது.

# நவாலியில் குடும்பஸ்தருக்கு வாள் வெட்டு

யாழ்ப்பாணம், ஒக். 03

உறவினர் ஒருவரின் வாள் வெட்டுக்கு இலக்காகி கையில் கடும் காயங்களுடன் இளம் குடும்பஸ்தர் ஒருவர் யாழ் .போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நவாலி தெற்கில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத் தில் வீ.கஜேந்தி ரன் (வயது-26) என் பவரே வெட்டுக் காயத்துக்குள்ளானார்.

இவரை வெட்டிய அவரது உறவினர் வீட்டில் வைத்து மதுபான வகைகளை விற்பனை செய்து வருவதாகவும் அங்கு மதுபானம் அருந்துபவர்கள் வீதிகளில் நின்று இடையூறு விளைவிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத் தட்டிக் கேட்ட போது பிரஸ்தாப உறவினர் வீடு புகுந்து இவ்வாறு வெட்டியுள்ளனர் என்று மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சந்தேக நபரை மானிப்பாய் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்து நேற்று அவர் விடுவிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

(ஒ-4)

தேவை

மிக்சர் கொம்பனிக்கு வேலை செய்யக் கூடிய பெண் பிள்ளைகள் தேவை.
தொடர்பு: 077 6106643

## உளமார வாழ்த்துகின்றோம்



கணபதிப்பிள்ளை
சகாதேவன்
அவர்கள்

பெயருக்கேற்ற அறிஞர் பெயரோடு வாழ்ந்த புனிதர் செயலால் நிமிர்ந்த தீரர் தயவால் கவரும் தோழர் ஜனன நாள் இன்று பதவி உயரும் நாளும் இன்று மானிப்பாய் மேற்தரக் கிளையின் முகாமையாளராய் முன்றாண்டுகள் எம் கிளையின் முகாமையாளராய் இருந்து எங்கள் பிரதேச மக்களின் உயர்வுக்காய் உழைத்து மக்கள் மனங்களில் நீங்கா இடம்பிடித்து இன்று மானிப்பாய் பிரதேச மக்களின் உயர்வுக்காய் பதவி உயர்வு பெற்று சேவையாற்றச் செல்லும் முகாமையாளர் அவர்களை இன்றைய பிறந்தநாளில் சகல செல்வங்களும் பெற்று இனிது வாழ வாழ்த்துகின்றோம்.

வாஞ்சையுடன்
இலங்கை வங்கி, நெல்லியடிக் கிளை,
வெளிவள ஊழியர்கள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/மீசாலை விக்னேஸ்வர மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த
செல்வன்
இராஜவரோதயம் ஹரினிவாசன்
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 170புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்ததைப் பாராட்டுவதோடு,

100புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களான
செல்வி கனிஸ்ரியா பாஸ்கரன்-138 புள்ளிகள்
செல்வன் முரளிதாஸ் சஞ்சய்-133 புள்ளிகள்
செல்வன் ரவீ டெய்சன்-117 புள்ளிகள்
செல்வன் வீக்னேஸ்வரன் அனோஜன் -100 புள்ளிகள்

இவர்கள் மேலும் கல்விப்புலத்தில் சாதனைகள் படைக்க வாழ்த்துவதோடு,இவர்களின் சாதனைகளுக்கு களம் அமைத்துக்கொடுத்த அதிபர் திரு த.அம்பலவாணர் அவர்களையும் ஆரம்பப்பிரிவு பொறுப்பாசிரியர் திரு ந.கிருபாகரன் அவர்களையும் வகுப்பாசிரியை திருமதி சி.சொர்ணலிங்கம் அவர்களையும் வெற்றிக்கு உழைத்த ஏனைய ஆசிரியர்களையும் நன்றி கூறிப் பாராட்டுகின்றோம்

யா/மீசாலை விக்னேஸ்வர
மகா வித்தியாலயம், மீசாலை

பாடசாலை சமூகம்.

## பாராட்டி வாழ்த்துகின்றேன்



2011 ஆம் ஆண்டு தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில்163 புள்ளிகளைப் பெற்ற
யா/ உடுவில் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த
குயின்ரன் நிருஜா
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல சாதனைகள் புரிந்து வாழ்வில் சிறக்க வாழ்த்துகின்றேன்

உடுவில் வடக்கு,
சுன்னாகம்.

அன்புடன் வாழ்த்தும்
கு. ஜெருஷன் (தம்பி)

IIS
CITY CAMPUS
edexcel



HND கற்கை நெறிகளுக்கு IIS மட்டுமே நம்பர் 1





HIGHER NATIONAL DIPLOMA IN
COMPUTING
(SOFTWARE DEVELOPMENT)

A/L தகைமைகளுடன் மாத்திரம் வெளிநாட்டு உயர்கல்வியினைப் பெற முயற்சி செய்கின்ற மாணவர்களில் அனேகமானோர் பிரபல பல்கலைக் கழகங்களில் அனுமதி பெறுவதிலும் (Admission) உயர் கல்விக்கான Visa க்களைப் பெறுவதிலும் தவறி விடுகின்றனர். சர்வதேச அங்கீகாரமுள்ள EDEXCEL,UK வழங்கும் BTEC HND தகைமை உலகின் பிரசித்திபெற்ற பல பல்கலைக்கழகங்களில் B.Sc (Hons) பட்டப்படிப்பின் இறுதி ஆண்டிற்கான நேரடி அனுமதியைப் பெற்றுத்தருவதோடு உயர் கல்விக்கான Visa க்களையும் உறுதிசெய்கின்றது.

பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் பயனித்த இவ் வெற்றிப்பாதையில் உங்கள் காலடியையும் பதித்துக் கொள்ளுங்கள்

இக்கல்வியாண்டின் இறுதிப் பிரிவுகளுக்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

IIS CITY CAMPUS
#200, Sivan Pannai Road, Jaffna
Tel: 021 222 8060 Fax: 021 222 6933
Web: www.iis.edu.lk Email: info@iis.edu.lk

கல்விப் பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணத்தில் ஓர் கல்விச்சாம்ராஜ்யம்

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆரம்பக் கல்வி ஆசிரியர் திருமதி சொ.இருபதி அவர்களின் அன்புத் தாய்
திருமதி சோமஸ்கந்தா கௌரியம்மா
அவர்கள் இறைபதம் எய்திய செய்தி கேட்டு அதிர்ச்சியும் துயரும் அடைந்துள்ளோம். அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் இணைந்து கொள்கின்றோம்.

பாடசாலை சமூகம்,
யா/ சன்மார்க்க ம.வி, யாழ்ப்பாணம்

## மரண அறிவித்தல்கள்

### முருகுப்பிள்ளை விக்கினேஸ்வரநாதன்



வட்டுமேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிங்கள மோதக மாமரப் பிள்ளையார் தேவஸ்தான அறங்காவலரும், மத்தள வித்தகருமான முருகுப்பிள்ளை விக்னேஸ்வரநாதனின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அவரது பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புதிய வீதி, வட்டுமேற்கு,
[சிந்துபுரம்]வட்டுக்கோட்டை.

தகவல்:
வி.ரமேஸ் (மகன்).

### சங்கரப்பிள்ளை செல்லத்துரை

பிரதம முகாமைத்துவ உதவியாளர் (அரச, ஆயுர்வேத போதனா வைத்தியசாலை-கைதடி)



புற்றளை, புலோலி தெற்கு, புலோலியைப் பிறப்பிடமாகவும், 12, B.A தம்பிலேன், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை செல்லத்துரை காலமாகிவிட்டார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

12,B.A தம்பிலேன்,
வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தொலைதூரத்தில் தேசிய நல்லிணக்கம்

கிழக்கு மாகாணத்தின் தலைநகரம் திருகோணமலை. இப்போது அங்கு தமிழ் மக்கள் செறிந்து வாழும் பிரதேசம் நகரப்பகுதி. ஆனால் அங்கு அமைந்துள்ள பொலிஸ் நிலையத்தில் தமிழ்மொழி மூலம் எந்தப் பணியும் ஆற்றப்படுவதில்லை; சகலனவும் தனிச் சிங்களத்திலேயே நடைபெறுகின்றன. பிரதேச செயலகங்களிலும் அதே நிலைதான்.

பொலிஸ் நிலையத்தில் தமிழ், முஸ்லிம் பொலிஸார் தேவைக்கேற்ற எண்ணிக்கையில் பணிபுரிகின்றனர். ஆனால், முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகளின் போது தமிழ் மொழியைப் பயன்படுத்த வசதி செய்யப்படவில்லை. அதனால் சம்பந்தப்பட்ட மக்கள் பல இடர்களை எதிர்கொள்ள நேரிடுகிறது.

- நாம் கூறும் முறைப்பாடுகள் மற்றும் பதிவுசார்ந்த தகவல்களை தனிச்சிங்களத்திலேயே எழுதுகிறார்கள். அவர்கள் என்ன எழுதியுள்ளார்கள் என்பது தெரியாமலே நாம் கையொப்பம் இடுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகிறோம். எமது வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்போது, நாம் தெரிவித்த விடயங்களை விடவும், தமது தேவைக்கு ஏற்ப மேலதிகமாகப் பதிவு செய்து, அங்கு எங்களைக் குற்றவாளிகளாகக் காட்டுகிறார்கள்.

- அவ்வாறு ஏன் மாற்றி எழுதினீர்கள் என்று கேட்டால், நான் உங்களிடம் வாக்குமூலம் எடுக்கவில்லை. வாக்குமூலம் எடுத்த பொலிஸாரிடம் போய்க் கேளுங்கள் என்று சீறி விழுகிறார்கள் - பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் பலர் இவ்வாறு அழாக்குறையாகத் தெரிவித்துள்ளனர்.

மக்கள் செய்த சிறுகுற்றங்களை, வாக்குமூலத்தில் ஊதிப் பெருப்பித்து, பொய்யுரைகளைப் புகுத்தி, முறைப்பாட்டுக்காரரை பெரும் குற்றவாளிகளாகக் காட்டுவதன் மூலம், பதவி உயர்வு பெறுவதே இந்த அநியாயத்தின் உள்நோக்கம் என்று திருகோணமலை வாழ் தமிழ் மக்கள் தமக்குள்ளே புளுங்கி, வெதும்புகிறார்கள்.

சில வாரங்களுக்கு முன்னர், வடக்கின் தலைநகரம் யாழ்ப்பாணத்தில் பொலிஸ் நிலையங்களில் தமிழர்களின் வாக்குமூலங்கள் சிங்களத்தில் பதிவு செய்யப்படுவதால் பொதுமக்களுக்கு உண்டாகும் வேண்டா வினை குறித்து இப்பத்தியில் விஸ்தாரமாககச் சுட்டிக் காட்டியிருந்தோம்:

பொதுமக்கள் தமது சொந்த மொழியிலேயே முறைப்பாடு செய்யவும் அதனை அந்த மொழியிலேயே பதிவு செய்யவும் அரசமைப்புச் சட்ட விதி வகை செய்கிறது. அவர்கள் தமக்குத் தெரியாத மொழியில் வாக்குமூலம் அளிக்க முடியாது. சொந்த மொழியில் அவர்கள் வழங்கும் முறைப்பாட்டை அந்த மொழியில் பாண்டித்தியம் உள்ள ஒருவராலேயே தவறின்றிப் (சேர்க்கை இன்றி) பதிவு செய்ய முடியும்-

தமிழ் மொழியில் வழங்கும் வாக்குமூலத்தை, வேறு மொழியில் பதிவு செய்வதால் தவறுகளும் கருத்து முரண்பாடுகளும் இடம் பெறும். அந்தப் பதிவில் ஒப்பமிடும்போது, அதில் உள்ள தவறுகளும், மயக்கங்களும் முறைப்பாட்டாளரையே பல வகைகளாலும், பாரதூரமாகப் பாதிக்கும் என்று எடுத்தியம்பினோம்.

இந்தப் பாதிப்பு திருகோணமலை வாழ் தமிழ் மக்களுக்கு நேர்ந்ததை, மேலும் தாங்க முடியாத உச்சப் பாதிப்பால், அவர்கள் தாங்கமுடியாத நிலையில் சுட்டிக்காட்டுகிறார்கள்.

திருகோணமலையை எடுத்துக் கொண்டால், அது கேந்திர, சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகத்தைக் கொண்டது. அதனால் குடியேற்றங்கள் ஊடாக அதனைத் தமிழர் பிரதேசம் என்ற நிலையில் இருந்து சிங்களப் பிரதேசமாக மாற்றிவிட வேண்டும் என்ற கபட நோக்கம், பிரிட்டிஷாரிடம் இருந்து இலங்கை விடுதலை பெற்ற இரண்டு, மூன்று ஆண்டு காலத்திலேயே சிங்கள அரசியல் தலைவர்களிடம் குடிகொண்டுவிட்டது.

அந்தநோக்கம், மாறி மாறிப் பதவிக்கு வந்த அரசாங்கங்களால் கனகச்சிதமாக நிறைவேற்றப்பட்டு, தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகளைத் திட்டமிட்ட குடியேற்றங்களால் மிகப் பெரிய அளவில் கபளீகரம் செய்யும் அக்கிரமம் தொடர்ச்சியாக நிறைவேறி வருகிறது.

அதனூடான ஊறு செய்யும் விளைவுகளில் ஒன்றே (உதாரணம் என்றும் கூறலாம்), திருமலைப் பொலிஸ் நிலையத்தில் தமிழ்ப் பொலிஸார் போதியளவு பணியிலிருக்கும் போதும், தமிழ் மக்களின் முறைப்பாடுகள் சிங்களப் பொலிஸாரால், சிங்கள மொழியில் பதிவு செய்யப்படும் அதிகாரத்தனம்.

இத்தகைய செயற்பாடுகள், தட்டிக் கேட்க எவருமின்றிக் கிழக்கிலும் வடக்கிலும் அரசாங்க உயர்மட்டங்களின் ஆசியுடன் நடைபெற்றால்- இந்த நாட்டின் தேசிய நல்லிணக்கமும் இனஒற்றுமையும் எட்டிப் பார்க்கவும் இடமிருக்காது. அரசின் செயற்பாடுகள் அவற்றைத் தொலைதூரத்துக்குத் துரத்துவதாகவே உள்ளன!

இவ்வருட முற்பகுதியில் யாழ்ப்பாணம் செயலகத்தில், தேசிய மொழிகள் மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தலைமையில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் தமிழ் மொழிப் புறக்கணிப்புக் குறித்து பலவகையறாக்களில் சுட்டிக்காட்டப்பட்டது.

அவ்வேளை, இங்குள்ள பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளும் வாக்குமூலங்களும் சிங்களத்தில் பதிவு செய்யப்பட்டு ஒப்பம் பெறப்படுவதால் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் வெளிப்படுத்தப்பட்டது.

அத்தோடு, தனிச்சிங்களச் சுற்றுநிருபங்களால் அரச அலுவலர்களுக்கு ஏற்படும் கஷ்டங்கள் குறித்தும் விலாவாரியாக விளக்கப்பட்டது. எனினும் மாதங்கள் பல பறந்தோடிவிட்ட போதிலும் ‘‘வாய்ச் சொல்லில் வீரரடி’’ என்ற நிலையில் தமிழ் மொழிப் புறக்கணிப்பும், மொழிச் சேதாரமும் தங்கு தடையின்றி ஒப்பேறுகின்றன.

தமிழ் மக்களும் இந்நாட்டு மக்கள், அவர்கள் எந்த வகையிலும் இரண்டாம் தரப் பிரஜைகள் அல்லர். அவர்களுக்கு உரித்தான அரசியல் உரிமைகளையும், ஆட்சி உரிமையையும் வழங்கி சகோதரத்துவ உணர்வைச் செயலாக்காத வரை,இந்தச் சிறிய தீவில், தேசிய நல்லிணக்கம் என்பது வெறும் நீர்மேல் எழுத்துப் போலாகுமே அன்றி வேறில்லை. இலங்கையில் இனங்களுக்கு இடையேயான நல்லிணக்கம் காணப்படுவதன் அவசியத்தை, சர்வதேசம் ஊன்றியும் உறுக்கியும் வலியுறுத்தி வரும் இந்தவேளையிலும் அது குறித்து சிறிதேனும் ஆர்வம் காட்டாத போக்கு, நாட்டுக்குப் பாதகமான விளைவுகளைத் தரும் என்பதனை அரசு எப்போதுதான் உணரப் போகிறது..?

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வேதனம் உரிய காலத்தில் வழங்கப்பட வேண்டும்

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக்.3

முன்பள்ளி ஆசிரியர்களின் வேதனம் உரியகாலத்தில் வழங்கப்படவேண்டும். காலதாமதமாக வழங்கப்படுவதால் முன் பள்ளி ஆசிரியர்கள் மேலும் கஷ்ட நிலைக்குள் தள்ளப்படுகிறார்கள். அந்தந்த மாதத்தின் இறுதிப் பகுதிக்குள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு வலி.மேற்கு முன்பள்ளி ஆசிரியர்கள் சங்கத்தின் சிரேஷ்ட இணைப் பாளர் ஆசிரியர் செல்வி நா. நிரஞ்சலா கேட்டுள்ளார்.

வலி.மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வைத்தே மேற்கொண்ட தகவலைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தலைவர் மு. சந்திரகுமாரின் கவனத்துக்கு கொண்டு வந்தார். இந்த விடயம் தொடர்பாக பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவர் மு. சந்திரகுமார் தெரிவிக்கையில்,

முன்பள்ளி ஆசிரியர் எவரும் இத் திட்டத்தால் பாதிக்கப்படக் கூடாது.

முன்பள்ளி உதவி கல்விப் பணிப்பாளர்கள் இந்த விடயத்தில் கூடுதல் அக்கறை செலுத்திச் செயற்படவேண்டும். கடந்த இருமாத காலமாக வேதனம் வழங்கப்படாதது பெருங்குறையாகும்.

வேதனம் உரிய காலத்தில் வழங்கப்படுவதையும், ஆசிரியர் எவரும் கூடிய அளவில் பாதிக்கப்படாததை முறையாக கவனித்துக் கொள்ள அனைவரும் முன்வர வேண்டும். இதற்கான நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும்- என்றார்.

இதேவேளை பாதிக்கப்பட்ட, வசதி குறைந்த அபிவிருத்தி அடைந்து வருகின்ற முன்பள்ளிகளுக்கு பிரதேச செயலர் திருமதி தே.பாபு உதவி செய்து வருகிறார் எனவும் கடந்த வருடம் பிரதேச சபை செயலாளர் அ.புத்திரசிகா மணி 7 முன் பள்ளிகளை அபிவிருத்தி செய்துள்ளார் என வும் சபையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ம-302)

# சமயத் தலங்களுக்கு மின் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக்.3

மின்வலு, மின்சக்தி அமைச்சு மின்சார வசதியற்ற சமயத் தலங்களுக்கு மின்சார வசதியை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

சமயத் தலங்களுக்கு மின்சார வசதிகளை வழங்குவதற்காக இந்து சமய கலாசார திணைக்களம் மின்சார வசதியற்ற சமய தலங்களின் விவரங்களை பெற்று மின்வலு மின்சக்தி, அமைச்சுக்கு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் மின்சார வசதியற்ற இந்து ஆலயங்களின் விவரங்களை திரட்டித் தமக்கு அனுப்பி வைக்குமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசு பிரதேச செயலர்களைக் கேட்டுள்ளார்.

(ம-60)

# சுன்னாகம் ஸ்கந்தாவுக்கு நிதியுதவி

வலி வடக்கு, ஒக்.3

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலைக்குத் தளபாடக் கொள்வனவுக்கென நிதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா இந்த நிதியை ஒதுக்கியுள்ளார்.

ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை கடந்த சில வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு படிப்படியாக உயர்ந்து செல்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். பாடசாலையில் வருடாந்தம் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் நிலையில் தளபாடங்களுக்கு காணப்படும் தட்டுப்பாட்டின் அடிப்படையில் இந்த நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. பாடசாலைக்கு வேண்டிய தளபாடங்களில் ஒரு பகுதியை இந்த நிதி உதவி மூலம் பூர்த்தி செய்யக் கூடிய தாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ம-86)

யாழ்.மாவட்டத்தில் இயங்கிவரும்

# பதினொரு சுகாதாரப் பிரிவு அலுவலகங்களில் இரண்டுக்கு மட்டுமே வைத்திய அதிகாரிகள்

யாழ்ப்பாணம், ஒக்.3

யாழ்ப்பாண மாவட்டத்தில் 9 சுகாதார வைத்திய அதிகாரி பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படாத நிலையிலுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இந்த மாவட்டத்தில் மொத்தமாக 11 சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் உள்ளன. ஆனால் நல்லூர், கோப்பாய் ஆகிய அலுவலகங்களிலேயே சுகாதார வைத்திய அதிகாரிகள் உள்ளனர். ஏனையவை சுகாதார வைத்திய அதிகாரிகள் இன்றியே இயங்கி வருகின்றன.

கர்ப்பிணித் தாய்மார், குழந்தைகள் நலன் சார்ந்த செயற்பாடுகள் மற்றும் மக்களின் பொதுச் சுகாதாரச் சேவைகள் ஆகியவற்றை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளே மேற்கொண்டு வருகின்றன. இந்த நிலையில் சுகாதார வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்படாமை இந்தச் செயற்பாடுகளில் பெரும் பின்னடைவைத் தோற்றுவித் திருப்பதாகப் பலரும் கவலை வெளியிட் டுள்ளனர். இதேவேளை சங்கானையில் சுகாதார வைத்திய அதிகாரி நியமிக்கப் படாமையால் கர்ப்பிணித் தாய்மார், குழந்தைகள் நலன் பேணும் மற்றும் பொதுச் சுகாதார சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பதவிக்குக் கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சு வைத்திய அதிகாரி ஒருவரை நியமித்த போதிலும் திருகோண மலையில் கடமை புரியும் இவரை அவரது அலுவலகத்தினர் விடுவிக்காமையால் அவர் தமது பொறுப்புக் களை ஏற்க முடியாத நிலையிலுள்ளனர். (க)

# அடுத்த அமைச்சரவை மாற்றத்தில் சில அமைச்சர் பதவிகள் பறிபோகும்

கொழும்பு, ஒக்.3

அடுத்த வருட ஆரம்பத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மந்திரி சபையை மாற்றி அமைக்கும்போது அமைச்சர்கள் சிலர் நீக்கப்படலாமென அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சரொருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் சோதிடத்தின் மீதுள்ள நம்பிக்கையின் விளைவாகவே இந்த அமைச்சரவை மாற்றம் இடம்பெறவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் தற்போதுள்ள அநேக அமைச்சர்கள் தமது அமைச்சுப் பொறுப்புக்களில் திருப்தியடையாதவர்களாகவே காணப்படுகின்றனர். இது பற்றி அவர்கள் ஜனாதிபதிக்கு ஏற்கனவே தெரியப்படுத்தியுள்ளனர். தற்போதுள்ள முக்கியமான அமைச்சுக்களான பாதுகாப்பு, நெடுஞ்சாலைகள், துறைமுகம், விமானத்துறை, நிதி திட்டமிடல் என்பன ஜனாதிபதியின் கட்டுப்பாட்டில் உள்ளன. உல்லாசப் பயணத்துறை, பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கள் ஜனாதிபதியின் சகோதரரான பசில் ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி பதவிக்கான தமது இரண்டாவது தவணையின் ஆரம்பத்தில் ஜனாதிபதி ராஜபக்ஷ புதிய தொரு அமைச்சரவையை நியமித்தார். இதன் போது டி.எம். ஜயரத்ன பிரதம அமைச்சராக நியமிக்கப் பட்டார்.

மேலும் 59 அமைச்சர்கள் 33 பிரதியமைச்சர்களுள் 16 பேர் புதிதாக நியமிக்கப்பட்டவர்கள் ஆவர். லக்ஸ்மன் செனவிரத்ன, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் இவர்களுள் அடங் குவர். இவர்களுக்கு அமைச்சுப் பொறுப் புக்கள் வழங்கப்பட் டன. (க)

உதயன்
03 ஒக்ரோபர் 2011 திங்கட்கிழமை

# அரச உத்தியோகத்தருக்கு வீடமைப்பு உதவி உடன் நிறுத்தப்பட வேண்டும் - யாழ். அரச அதிபர்

யாழ்ப்பாணம், ஒக்.3

யாழ்.மாவட்டத்தில் வறுமை நிலையிலுள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்கு வீடுகள் தேவையாக உள்ளது. இந்த நிலையில் அவர்களை விடுத்து நிரந்தர வருமானம் பெறும் அரச உத்தியோகத்தர் களுக்கு எந்தத் திட்டத்தின் மூலமும் வீடுகள் வழங்க வேண் டாம். அவ்வாறு வழங்கப் பட்டிருந்தால் அதனை உடனடியாக நிறுத்தவும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ்.மாவட் டத்தின் வீடமைப்புத் தொடர்பான கலந்துரையாடல் யாழ். மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் பிரதேச செயலர்கள், தேசிய வீடமைப்பு அதிகார சபை, நேர்ப், இந்தியன் வீடமைப்பு திட்டப் பொறியியலாளர்கள், வீடமைப்பு பணிகளை மேற்கொள்ளும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் மேலும் தெரிவிக்கப்பட்டமை வருமாறு:

யாழ்.மாவட்டத்தில் கடந்த வருட கணக்கெடுப்பின் பிரகாரம் 60 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்பட வேண்டியுள்ளது. தற்போது உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளும் விடுவிக்கப்பட்டுள்ளதால் இன்னும் வீட்டுத் தேவை அதிகமாகியுள்ளது.

இருப்பினும் இதுவரையில் 27 ஆயிரம் பேருக்கே வீடுகள் கட்டிக் கொடுப்பது தொடர்பில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

எஞ்சிய வறிய மக்களுக்கும் வீடமைப்புத் திட்டம் வழங்கப்பட வேண்டியுள்ளது.

சகல கிராம சேவகர்களும், பிரதேச செயலர்களும் இது தொடர்பில் உரிய அக்கறையுடன் செயற்பட வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் அரச அதிகாரிகளுக்கு எந்தவொரு வீட்டுத் திட்டமும் வழங்கப்படக்கூடாது. அவ்வாறு வழங்கப்பட்டால் அதை உடனடியாக நிறுத்த வேண்டும்.

இந்த 60 ஆயிரம் மக்களுக்கு வீடுகள் வழங்கப்பட்ட பின்னரே அரச அதிகாரிகளுக்கு வீடு வழங்குவது தொடர்பாக ஆராயலாம்.

அரச உத்தியோகத்தர்கள் வங்கிகளில் 25 லட்சம் வரை 4 வீத வட்டிக்குக் கடன் எடுக்க முடியும். அதற்கு அரசு 6 வீத வட்டியை கட்டுகின்றது. இவ்வாறு அரச உத்தியோகத்தர்களுக்கு வாய்ப்பிருக்கையில் ஏழைமக்களுக்கு கிடைக்கவேண்டிய வீட்டுத் திட்டத்தை பாழடிக்கக் கூடாது.-என்றார். (ம-15)

## மக்களுக்காக...



பண்பாடு: தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற நடமாடும் சேவையின்போது வலி. வடக்கு தெல் லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வீரசிங்கா மற்றும் பிரதேச செயலர் எஸ். முரளிதரன் ஆகி யோர் கலந்து கொண்டு தேசியக் கொடியை ஏற்றுகின்றனர்.(ம-86)

# அடிப்படை வசதிகளின்றி யாழ். தனியார் பஸ் தரிப்பிடம்

யாழ்.முற்றவெளியில் உள்ள தனியார் பஸ் தரிப்பிடத்தில் போதிய அடிப்படை வசதி இல்லாமையால் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகக் கூறப்படுகின்றது. அத்துடன் உரிய முறையில் அந்தச் சுற்றாடல் புனரமைப்புச் செய்யப்படவில்லை எனவும் கூறப்படுகிறது. இவ்வாறான நிலையில் பஸ் தரிப்பிடத்துக்கு வரும் பயணிகளும் மற்றும் பஸ் நடத்துநர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பஸ் தரிப்பிடப் பகுதி மேடு, பள்ளமாக உள்ளதால் பஸ்களைத் தரித்து விடுவதிலும் பெரும் நெருக்கடி ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, பஸ்தரிப்பிடப் பகுதியில் பயணிகளுக்கு உரிய முறையில் மலசலகூட வசதி மற்றும் குடிதண்ணீர் வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை.

அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முடியாது பயணிகள் பெரும் சிரமங்களுக்கு ஆளாகுவதாகக் கூறப்படுகிறது. கடந்த வியாழக்கிழமை அதிகாலை பெய்த மழையால் பஸ்தரிப்பிடப் பகுதியில் உள்ள தாழ்ந்த இடங்களில் மழை வெள்ளம் தேங்கி நிற்கிறது.

எனவே பெருமழை காலம் ஆரம்பமாவதற்கு முன்னர் இந்தப் பகுதியைப் புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-26)

# வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் துரித கதியில் வீடமைப்புப் பணிகள்

யாழ்ப்பாணம், ஒக்.3

வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் வீடமைப்பு அபிவிருத்தி துரித கதியில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

இதன் முதற்கட்டமாக இந்தியன் வீட்டுத் திட்டத்தின் கீழ் 28 கிராம அலுவலர் பிரிவில் 240 குடும்பங்களுக்கும் முழுமையான வீடு அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது. இதற்கானதீர்மானம் பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மு. சந்திரகுமார் தலைமையில் முன்னெடுக்கப்பட்டதுடன் அதற்கான சபை ஒப்புதலும் பெறப்பட்டது.

மேற்படி விடயம் தொடர்பாக பிரதேச செயலர் திருமதி எழிலரிசி அன்ரன் யோகநாயகம் தெரிவிக்கையில்:

இந்தியன் வீட்டுத் திட்டத்தில் 240 குடும்பங்களுக்கு முழுமையான வீடமைப்புத் திட்டமும் 208 குடும்பங்களுக்கு பகுதியளவிலான மீள் புனரமைப்புக்கும் 36 குடும்பங்களுக்கு தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கடன்நிதி உதவியுடனும் வீடமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.

பயனாளிகள் தெரிவு விவரம் 28 கிராம அலுவலர் பிரிவிலும் வெளிப்படையாக மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்ட பின்னரே சபையின் ஒப்புதல் மூலம் நிர்மாணிக்கப்படவுள்ளது. - என்றார். (ம-302)

# நல்லூர் பிரதேசசபை மின்விளக்குகளை பொருத்துகிறது

யாழ்ப்பாணம், ஒக்.3

நல்லூர் பிரதேச சபை தனது பகுதியில் உள்ள வீதிகளுக்கு மேலதிகமாக முந்நூறு வீதி விளக்குகளைப் பொருத்தவுள்ளது.

ஏற்கனவே இருநூற்று முப்பத்து எட்டு மின் விளக்குகள் மக்களின் பங்களிப்புடன் பொருத்தப்பட்டுள்ளன.

பொருத்தப்படவுள்ள விளக்குகளும் மக்களின் பங்களிப்புடனேயே பொருத்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ம-7)

# கைதடி முதியோர் இல்ல அபிவிருத்திக்கு அடுத்த ஆண்டில் கூடுதல் நிதி ஒதுக்கீடு

## உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக்.3

கைதடி அரச முதியோர் இல்லத்தின் அபிவிருத்திப் பணிக்கு அடுத்த ஆண்டில் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று வடமாகாண உள்ளூராட்சி மற்றும் கூட்டுறவு அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ் தெரிவித்தார்.

இல்லத்தில் சனிக்கிழமை சர்வதேச முதியோர் தின விழாவின் முதல் நாள் நிகழ்வு இடம் பெற்றது. இதில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதில் அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது:

இந்த முதியோர் இல்லத்தை சிறந்த முறையில் அபிவிருத்தி செய்வதற்கு வடமாகாண சபை துரித நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

குறிப்பாக அடுத்த ஆண்டில் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இல்லத்தின் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படும்.

ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி மூலம் இல்லத்தின் அபிவிருத்திப் பணிகள் இந்த ஆண்டுக்குள் நிறைவு செய்யப்படும். முதியோர் இல்லத்துக்கென பஸ் ஒன்று விரைவில் வழங்கப்படும்.- என்றார்.

இந்த முதல் நாள் நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி, வடமாகாண பிரதம செயலர் ஆ.சிவசுவாமி, வடமாகாண பொதுநிர்வாக உள்நாட்டு அலுவலர் அமைச்சின் செயலாளர் இராசநாயகம் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ம-26)

# காரைநகர் அபிவிருத்திக் கூட்டத்தில் சபைத் தலைவருக்கு அனுமதியில்லை

## கண்டனம் தெரிவிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

யாழ்ப்பாணம், செப்.3

காரைநகர் பிரதேச அபிவிருத்தி தொடர்பாக இடம் பெற்ற கூட்டத்துக்குச் செல்ல காரைநகர் பிரதேச சபைத் தலைவருக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

இதனை அடுத்து இதற்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டு அதற்கு எதிராக தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

காரைநகர் பிரதேச சபையின் 2 ஆவது கூட்டம் கடந்த புதன்கிழமை பிரதேச சபை மண்டபத்தில் சபைத் தலைவர் வே.ஆனைமுகன் தலைமையில் நடைபெற்றது. இதன் போதே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

* காரைநகர் பிரதேச அபிவிருத்தியில் காரைநகர் பிரதேச சபைக்கு அதிக பங்க உண்டு.

அபிவிருத்தி தொடர் பாக இடம்பெற்ற கூட்டத்துக்கு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அழைக்கப்படாமையை கண்டித்தல்.

* காரைநகர் பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பான கூட்டம் ஒன்றை நடத்துதல். அதற்கு ஆளுநர் மற்றும் யாழ்.மாவட்ட அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மற்றும் திணைக்கள தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்தல்.

* காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியை மகேஸ்வரன் இந்துக் கல்லூரியாக பெயர் மாற்றம் செய்தல்.

* காரைநகர் சின்னாலடி-தங்கோடை வீதியை மகேஸ்வரன் சதுக்கம் என்று பெயர் சூட்டல்.

* பிரதான வீதியில் முதற்கட்டமாக 20 வீதி விளக்குகள் பொருத்தல், அதற்குரிய மாதாந்தக் கட்டணத்தை பிரதேச சபை ஊடாக வழங்கல்.

(ம- 60)

# உணவு கையாளும் நிலையங்களில் தர நிர்ணய வேலைத்திட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக.3

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள உணவு கையாளும் நிலையங்களை தர நிர்ணயம் செய்யும் வேலைத்திட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் இடம்பெறவுள்ளன.

உணவு கையாளும் நிலையங்களில் உள்ள குறைபாடுகள் தொடர்பாக ஏற்கனவே அதன் உரிமையாளர்களுக்கு சுட்டிக் காட்டப்பட்டவற்றை நிவர்த்தி செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலை நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி ஆர்.சிவசங்கர் விடுத்துள்ளார்.

உணவு கையாளும் நிலையங்களில் சுகாதார சீர்கேடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் தர நிர்ணயம் செய்யும் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் தர வரிசைப்படுத்தும் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இது நல்லூர், கோண்டாவில், கொக்குவில் ஆகிய பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பிரிவுகளிலேயே இடம்பெறவுள்ளது.

உணவு கையாளும் நிலையங்களுக்குப் பொது சுகாதார பரிசோதகர்கள் நேரடியாகச் சென்று இந்தத் தர நிர்ணயம் செய்யவுள்ளனர்.

உணவு கையாளும் நிலையங்கள் ஏ,பி,சி,டி எனத் தர நிர்ணயம் செய்யப்படவுள்ளன.

நிலையங்களின் சுகாதார நிலைமை நன்றாக இருப்பின் 'ஏ' எனவும், திருப்தி எனின் 'பி'எனவும் குறிப்பிடப்பட்டு பொது மக்கள் பார்வைக்காக வைக்கப்படவுள்ளது.

சுகாதார நிலைமை அதிருப்தி எனின் 'சி' எனவும் மிக மோசம் எனின் 'டி' எனவும் குறிப்பிடப்படவுள்ளது.

அவ்வாறு சி, டி என்று தரவரிசைப்படுத்தப்படும் நிலையங்கள் 'ஏ' அல்லது 'பி' தரவரிசைக்கு மேம்பாடு காண வேண்டும் இல்லையேல் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்- எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-14)

# வலி.தென்மேற்கில் குடியமர கடற்படையினர் அனுமதி

சண்டிலிப்பாய், ஒக்.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் மீளக்குடியமர அரசு அனுமதித்த போதும் கடற்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டு ஏமாற்றத்துக்குள்ளான குடும்பங்களை தற்போது குடியமர கடற்படையினர் அனுமதித்துள்ளார்கள்.

இதனால் மாதகல், மாரீசன் கூடல் ஆகிய இடங்களில் சுமார் 120 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் மாதகல் பகுதியில் ஜே/150 கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் மாரீசன்கூடல் ஜே/154 கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து 100 இற்கும் அதிகமான குடும்பங்கள் அங்கு சென்று தங்கள் காணிகளைத் துப்புரவு செய்து குடிசைகளை அமைத்து வந்தனர்.

ஒரு சில நாள்களுக்குப் பின் இவர்களை அங்கு செல்ல வேண்டாம் என்று கடற்படையினர் உத்தரவிட்டதைத் தொடர்ந்து மீண்டும் இவர்கள் அகதி வாழ்க்கைக்குத் தள்ளப்பட்டார்கள்.

பாதிக்கப்பட்ட மக்கள் இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு தெரிவித்தனர். இதனையடுத்து மீண்டும் அந்த மக்களை சொந்த இடங்களில் குடியமரக் கடற்படையினர் அனுமதித்துள்ளனர். இதைத் தொடர்ந்து ஜே/150, ஜே/154 ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் சனிக்கிழமையிலிருந்து மக்கள் மீளகுடியமர்ந்து வருகின்றார்கள். (ம-115)

# அனுமதியின்றி அரச சாராயம் வைத்திருந்த ஐவருக்கு அபராதம்

தென்மராட்சி பிரதேசத்தில் அனுமதிப் பத்திரமின்றி அரச சாராயம் விற்பனைக்கு வைத்திருந்த ஐந்து பேருக்கு 12 ஆயிரம் ரூபாவும் சாவகச்சேரிப் பகுதியில் கஞ்சா வைத்திருந்த சாவகச்சேரி நபருக்கு 10 ஆயிரம் ரூபாவும் சாவகச்சேரி நீதிமன்றில் அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி மதுவரி திணைக்களம், சாவகச்சேரி பொலிஸார் ஆகியோரால் அரச சாராயம் வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டி ஐந்து பேருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

வழக்குகளை தனித்தனியாக விசாரித்த நீதிவான் மா.கணேசராசா சந்தேக நபர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து நால்வருக்கு தலா 2 ஆயிரத்து 500 ரூபாவும் ஒருவருக்கு 2 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதித்தார்.

இதேவேளை கஞ்சா வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டி சாவகச்சேரி பொலிஸார் சாவகச்சேரி வாசிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்கை விசாரித்த நீதிவான் இந்த நபருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (ம-207)



துரித மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் மீசாலை வீரசிங்கம் வித்தியாலயத்துக்கு 5 மாடிக்கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நடும் விழா அண்மையில் இடம்பெற்றது. இதன்போது விருந்தினர்கள் அழைத்துவரப்படுகின்றனர். (ம-207)

# திண்மக் கழிவுகளை சேதனப் பசளையாக்க விசேட நடவடிக்கை

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகள் சேதனப் பசளையாக மாற்றியமைக்கப்படவுள்ளன. இதற்கான வேலைத் திட்டத்தை மேற்கொள்வதற்கான ஒழுங்குகளை பிரதேச சபை மேற்கொண்டுள்ளது.

கடந்த காலங்களில் இந்தப் பிரதேசத்தில் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகளில் ஒரு பகுதி அந்தந்த இடங்களில் வைத்து எரிக்கப்பட்டன. ஒரு பகுதி கல்லுண்டாய் பகுதியில் கொட்டப்பட்டு வந்தது. இதனால் சுகா தாரச் சீர்கேடு உருவானதுடன் பொதுமக்களுக்கும் இடையூறு ஏற்பட்டு வந்தமை சுட்டிக்காட்டப்பட்டது.

கல்லுண்டாய் பகுதியில் கொட்டப்படும் திண்மக் கழிவுகளால் சுற்றாடல் மாசடைந்து வருவதைத் தொடர்ந்து இவற்றைச் சேதனப் பசளையாக்குவதற்கான திட்டத்தைப் பிரதேச சபை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-115)

# மனித உரிமை மீறல் தலைவிரித்தாடிய போது குரல் கொடுக்காத சமாதான நீதிவான் அமைப்பு

## நேற்றைய மாநாட்டில் அங்கத்தவர்கள் அதிருப்தி

யாழ்ப்பாணம், ஒக்.3

யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்களின்போது குரல் கொடுக்கத் தவறியுள்ளது மாவட்ட சமாதான நீதிவான்களின் மனித உரிமைகள் அமைப்பு.

இவ்வாறு அந்த அமைப்பின் அங்கத்தவர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

யாழ். மாவட்ட சமாதான நீதிவான்களின் மனித உரிமைகள் அமைப்பின் ஒன்றுகூடல் நிகழ்வு நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் இடம்பெற்றது.

அதன்போதே அமைப்பின் அங்கத்தவர்களால் இவ்வாறு அதிருப்தி தெரிவிக்கப்பட்டது.

அந்த அமைப்பின் யாழ். மாவட்ட நிர்வாகப் பணிப்பாளர் பேராசிரியர் கலாநிதி இ.சாந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த ஒன்றுகூடலின் போது சுமார் 40 அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் மாவட்ட நிர்வாகப் பணிப்பாளரின் தலைமை உரையைத் தொடர்ந்து இடம்பெற்ற கலந்துரையாடலின் போது தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் வருமாறு:

* தேசிய சமாதான நீதிவான்களின் மனித உரிமைகள் அமைப்பின் நிர்வாகப் பணிப்பாளர் கலாநிதி களுபோவிலவின் விருப்பு வெறுப்புகளுக்காகவே யாழ்.மாவட்ட அமைப்பு செயற்பட்டு வருகிறது. இதன் காரணமாகவே யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்குக் குரல் கொடுக்கத் தவறியுள்ளது.
* யாழ்.மாவட்ட அமைப்பின் செயற்பாடுகள் தொடர்பாக மக்களுக்குத் தெளிவில்லை. அமைப்பின் செயற்பாடுகள் மீது மக்களுக்கு நம்பிக்கையில்லை.
* அமைப்பின் யாப்பு விதிகள் குறித்து நிர்வாகப் பணிப்பாளருக்கும் தெரியாது. உறுப்பினர்களுக்கும் தெரியாது. அது சிங்கள மொழியில் மட்டும் உள்ளது. உறுப்பினர்களது கைக்குக் கிடைக்கவில்லை. அதன் காரணமாக நிர்வாகத் தெரிவுகள் கூட உரிய முறையில் இடம்பெறவில்லை.
* பெண்கள் பல்வேறு விதமான மனித உரிமை மீறல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். ஏன் அவர்களுக்காக இந்த அமைப்பு குரல் கொடுக்கவில்லை? சுய லாபத்துக்காக மட்டுமா இந்த அமைப்பு இயங்குகிறது.
* இந்த அமைப்பு மூலம் மாவட்ட சமாதான நீதிவான்களின் அமைப்பு யாழ்.மாவட்டத்தில் பலப்படுத்தப்பட வேண்டும். (ம-14)

# நல்லூர் பிரதேச சபை வீதி புனரமைக்க 40 லட்சத்து 47 ஆயிரம் ரூபா ஒதுக்கியது

யாழ்ப்பாணம், ஒக்.3

நல்லூர் பிரதேச சபை தனது பிரிவில் உள்ள பதினொரு வீதிகளைத் திருத்தியமைக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கென சபை நிதியில் இருந்து 40 லட்சத்து 47 ஆயிரத்து 40 ரூபா ஒதுக்கீடு செய்துள்ளதாக சபையின் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

ஜே/126 கிராம அலுவலர் பிரிவில் வெள்ளக் கடவை வீதி 75 மீற்றர் 2 லட்சத்து 43 ஆயிரம் ரூபா செலவிலும் ஜே/117 டிப்போ முன் குறுக்கு வீதி 200 மீற்றர் 6 லட்சத்து 90 ஆயிரம் ரூபா செலவிலும் ஜே/122 பலாலி குறுக்கு ஒழுங்கை 102 மீற்றர் 2லட்சத்து 82 ஆயிரம் ரூபா செலவிலும் ஜே/114 கலாசாலை இரண்டாம் ஒழுங்கை 84.5 மீற்றர் 2லட்சத்து 10 ஆயிரம் ரூபா செலவிலும் ஜே/114 பால்பண்ணை ஐந்தாம் ஒழுங்கை 100 மீற்றர் 3 லட்சத்து 70 ஆயிரம் ரூபா செலவிலும் ஜே/128 ஆடிய பாதம் வீதி குறுக்கு ஒழுங்கை 133 மீற்றர் 3 லட்சத்து 73 ஆயிரம் ரூபா செலவிலும் ஜே/113 புலவனர் வீதி 120 மீற்றர் 3 லட்சத்து 6 ஆயிரம் ரூபா செலவிலும் ஜே/121 இராம கிருஷ்ணவீதி 109.4 மீற்றர் 3 லட்சத்து 840 ரூபா செலவிலும் ஜே/120 காளிகோயில் குறுக்கு வீதி 297 மீற்றர் ரூபா 7 லட்சத்து 85 ஆயிரம் ரூபா செலவிலும் ஜே/118 சோலையம்மன் வீதி 79 மீற்றர் 2லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவிலும் ஜே/116 கோண்டாவில் கே.கே.எஸ்.வீதி தபால் பெட்டி முன்வீதி 95 மீற்றர் 2 லட்சத்து 62 ஆயிரத்து 200 ரூபா செலவிலும் புனரமைக்கப்படவுள்ளன. விரைவில் வேலைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-7)

# அராலி கிழக்கு மக்களுக்கு குழாய் மூலம் குடிதண்ணீர்

அராலி கிழக்கு, அம்மன் கோயிலடியில் உள்ள 15 குடும்பங்களுக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளது.

தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் பிராந்திய முகாமையாளர் குடிதண்ணீர் இணைப்பு வழங்க முன்வந்துள்ளார்.

வலி.மேற்குப் பிரதேச சபையின் உறுப்பினர் தர்மலிங்கம் நடனேந்திரன் இதற்கான நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக வலி. மேற்குப் பிரதேச சபையின் உறுப்பினர் தர்மலிங்கம் நடனேந்திரன்மேலும்கூறுகையில்:

இரணைமடு மூலமான குடிதண்ணீர்கிடைக்கஇன்னும்மூன்று ஆண்டுகள் செல்லும். அதுவரையில் நாம் காத்திருக்க முடியாது. தற்போது தேசிய நீர் வழங்கல் சபையின் ஆயகுள பகுதியில் இருந்து வழங்கும் குடிதண்ணீர் திட்டத்தை விஸ்தரித்து மேலும் 15 குடும்பங்களுக்கு வழங்குமாறு கோரியிருந்தேன்.

அடுத்தவாரம் முதற்கட்டமாக 5 குடும்பங்களுக்கு குழாய் மூலமான இணைப்பு வழங்கப்படும் என்று பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார். இதன் பிரகாரம் 5 குடும்பங்கள் அடுத்த வாரம் குடிதண்ணீர் பெறும்- என்று தெரிவித்தார். (ம-302)

உதயன்
03 ஒக்ரோபர் 2011 திங்கட்கிழமை

# கோலாகலமாக இடம்பெற்று முடிந்த நல்லூர் பிரதேச கலாசார விழா





யாழ்ப்பாணம், ஒக்.3

நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் கலாசார விழா கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இளங்கலைஞர் மன்றத்தின் சிந்தாந்தபாரதி சிவராமலிங்கம்பிள்ளை அரங்கில் நல்லூர் பிரதேச உதவிச் செயலர் அ.சோதிநாதன் தலைமையில் ஆரம்பமானது.

முதல்நாள் விழாவின் பிரதம விருந்தினராக யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் சிறப்பு விருந்தினர் பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் ஆகியோர் உள்ளிட்ட விருந்தினர்கள் கொண்டலடி வையிரவர் கோயிலில் இருந்து ஊர்வலமாக விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர். தொடர்ந்து நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் மற்றும் நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தன் உட்பட விருந்தினர்கள் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

விழாவில் நல்லூர் கீதலாகினி இசைக் கல்லூரி மாணவிகளின் தமிழ்த்தாய் வாழ்த்து, ஈழ நல்லூர் பிச்சையப்பா ரஜீந்திரன் குழுவினரின் மங்கள இசை, கலாசார பேரவைக்கீதம், கோண்டாவில் இந்து மகாவித்தியாலய மாணவிகளின் வரவேற்பு நடனம் யா/இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் குழுப் பாடல், திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் ர.ஸகிஷ்ணா ஆகியோரின் இசையரங்கு, யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் சிவாம்சனின் பேச்சு என்பன வும் யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் பிரதம, சிறப்பு விருந்தினர்களின் உரைகளும் இடம்பெற்றன.

கோப்பாய் ஆசிரியர் கல்லூரி முன்னாள் விரிவுரையாளர் கலாநிதி செ. திருநாவுக்கரசு தலைமையில் புலரும் பொழுதும் புனித உணர்வும் என்ற பொருளில் கவியரங்கமும் அரியாலை புத்மா கலா மன்றத்தின் மயான காண்டம் இசை நாடகமும் கூட இடம்பெற்றன.

கலாசார விழாவையொட்டி நடைபெற்ற நாடகம் இசை, பேச்சு, பாட்டு, நடனப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்களையும் கலாசாரத் திணைக்களம் நடத்திய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குமான சான்றிதழ்களையும் மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், சிறப்பு விருந்தினர் பேராசிரியர் வீ. கே.கணேசலிங்கம் ஆகியோர் வழங்கினர்.

விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை பி.ப.1.30 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெற்றது.

முன்னதாக நல்லூர் சட்டநாதர் கோயிலில் விசேட பூசைகள் இடம்பெற்று பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ். இந்திய தூதர் மற்றும் கலைஞர்கள் ஊர்வலமாக விழாமண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர். ஊர்வலத் தில் தமிழர்களின் பாரம்பரிய கலைகளான கரகம், பொய்க்கால் குதிரை ஆட்டம் உட்பட கலை நிகழ்வுகளும் இடம் பெற்றிருந்தன.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட திருமதி இமெல்டா சுகுமார் மங்கள விளக்கேற்றி நிகழ்வுளை ஆரம்பித்து வைத்தார்.

மங்களவாத்திய இசை, தமிழ்த்தாய் வாழ்த்துஉட்பட கலை நிகழ்வுகள் கலைஞர் கௌரவிப்பு என்பனவும் இடம்பெற்றன.

(உ-7-313)

# புலமைப்பரிசில் மாணவர்களுக்குச் சாதகமாக பரீட்சைத் திணைக்களத்தின் நடவடிக்கை

## இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் பாராட்டு

அம்பாறை, ஒக்.3

நடந்து முடிந்த 5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளில் ஏற்பட்ட குழப்ப நிலைக்கு புள்ளி மதிப்பீட்டின்போது மாணவர்களுக்குச் சாதகமாக முடிவெடுத்தமைக்காக பரீட்சை ஆணையாளரை இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் பாராட் டியுள்ளது.

இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கை ஒன்றில் மேற்படி தகவலைத் தெரிவித்துள்ளதுடன், பரீட்சைப் பெறுபேறுகளை 25 நாள்களில் வெளியிட்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் வரலாற்றுச் சாதனை படைத்துள்ளதாகவும் சுட்டிக் காட்டியுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் நடந்து முடிந்த 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாளில் மாணவர்களுக்குக் குழப்பத்தை ஏற்படுத்திய வினாக்கள் தொடர்பில் புள்ளி மதிப்பீட்டின்போது மாண வர்களுக்குப் பாதகமில்லாத வகையிலும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டமை பாராட்டத்தக்கதாகும்.

அதாவது, இந்தப் பரீட்சை வினாத்தாளில் மாணவர்களைக் குழப்பிய வினாக்கள் தொடர்பில் கல்வியியலாளர்கள் மற் றும் அமைப்புக்கள் விடுத்த கோரிக்கையைக் கருத்தில் கொண்டு வினாத்தாள் II, வினா இலக்கம் 41 இற்கு விடையளித்தாலும் விடையளிக்கா விட்டாலும் முழுப்புள்ளி வழங்கியும் அதுபோல் வினா இலக்கம் 42 இற்கு மாணவர்களுக்குச் சாதகமாக முடிவெடுக்க இணங்கியும் செயற்பட்டுள்ளது.

மேலும் மேற்படி புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளை 25 நாள்களில் வெளியிட்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் வரலாற்றுச் சாதனையும் படைத்துள்ளது.

இது தவிர, பெறுபேறுகள் தொடர்பில் திருப்திப்படாது, உரிய பிள்ளையின் நிலை தொடர்பில் நூறுவீதம் நம்பிக்கையிருந்தால் வகுப்பாசிரியரின் அறிக்கை மற்றும் திறமைகளை உறுதிப்படுத்தும் சான்றுகளுடன் அதிபர்கள் மேன்முறையீடு செய்யவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

எனவே குறித்த சாதனை மற்றும் நலன்கள் அனைத்துக்குமாக இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தையும், பரீட்சை ஆணையாளர் நாயகத்தையும் பாராட்டுவதுடன், மாணவர்கள் சார்பிலும் நன்றியைத் தெரிவிக்கின்றது இவ்வாறு அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (வ-30)


**Vacancy**
**Post of Accountant**
**Work Station : Killinochchi**

We are looking for a committed, creative and energetic individual to join us as an Accountant.

**Essential qualifications & Requirements:**

- A degree from a recognised University in the relevant field with full/ part qualification in accountancy ( ICASL/CIMA/ACCA/HNDA)
- At least 2 years professional experience in the capacity of Accountant in the NGO/ Public/ Private sector with sound knowledge in accounting procedure preferably, with Accounting Package.
- Good command of English and Sinhala.
- Good Communication skills.
- Excellent Computer skills.
- Ability to establish and maintain office system and procedures.
- Should be a team Worker

**Main Responsibilities:**

- Support District Programme Coordinator/ Project Manager/ Director Finance/ Chief Accountant / Regional Accountant/ District Accountant in the operation of Accounts.
- Ensure daily system updates, collect and maintain accounting information on Projects and Administration.
- Preparation of Budgets, Financial and monitoring reports.
- Should be willing to travel to Out Stations on short notice

**Please Note:**

- Closing date for the applications will be on 07th October, 2011.
- The above position would be initially for a period of 1 year with 6 months' probation.
- Candidates who do not possess the required qualifications are advised to refrain from making applications.
- Only short listed candidates will be called for the interview.
- Canvassing will be treated as a disqualification.
- Please submit your CV, together with an approx 200 word essay on how your previous work experience will assist in fulfilling the above post, addressed to:

**The Regional Accountant,**
**Sewa Lanka Foundation,**
**54/2, Palaly Road,**
**Kondavil, Jaffna.**



முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

செல்வன் த.டிலக்ஷன்

தவசீலன் - செரீனா (சூட்டி) தம்பதியரின் செல்வப் புதல்வன் டிலக்ஷன்

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (03.10.2011) தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பப்பா, அப்பம்மா, பெரியம்மா, பெரியப்பா, அத்தைமார், மாமன் -எட்வேட், சித்தப்பா- தேவசீலன் (டோகா), அண்ணன்மார் -டினேஸ், டக்கிளஸ், கஜேந்திரன், கமில்டன், ரவிராஜ், அக்காமார்- பத்மாசிறி, மயூரி, சோபிகா (கனடா) அண்ணிமார் மற்றும் பலர் இவரை நல்லூர் கந்தன் அருளால் சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



47/3, செம்மணி றோட்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0778050918

இ.தவசீலன்
உரிமையாளர்: சீலன் அலுமினியம் பித்திங்
கே.கே.எஸ்.வீத். கொக்குவில்.



பாராட்டி வாழ்த்துகின்றோம்

வவுனியா பெரிய கோமரசன்குளம் மகா வித்தியாலய மாணவர்கள்

செல்வன்
விமலதாஸ்
திஷாகரன்
புள்ளி 157





செல்வி
சுவேதா
ஜெயசீலன்
புள்ளி 154

2011 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய எமது செல்வங்கள் சீரும் சிறப்புடனும் பல்கலையிலும் மேன்மையுடன் விளங்க வாழ்த்துகின்றோம். அவர்களை ஊக்குவித்த அதிபர் திரு.க.தனபாலசிங்கம் ஆசிரியர்களான திருமதி சி.மணிவண்ணன், திருமதி வ.நளினி ஆகியோருக்கும் நன்றி கூறுகின்றோம்.

யாழ்ப்பாணம்.

வாழ்த்துவோர் : குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள்

# வியளம் கேட்டீர்களா?

## மூக்குள்ள வரை சளி என்ற நிலையில் மெதுவான மின்சாரம்..........!

சொல்லிச் செய்வர் பெரியர்.சொல்லாமல் செய்வர் சிறியர். சொல்லியும் செய்யார் கயவர். இது புதுமொழி. இந்தப் புதுமொழி மின்சாரசபையைச் சிறப்பித்துக் கூற அச்சொட்டாகப் பொருந்தும் கூற்றாகும்.

மின்சார சபை பத்திரிகைகளில் மின்தடை பற்றி அறிவித்து மின்சாரத்தை நிறுத்தும் வேளைகளில் சொல்லிச் செய்வர் பெரியர் என்ற பதம் அதற்குப் பொருந்துகிறது. பல வேளைகளில் எந்தவித முன்னறிவித்தலும் இன்றி மின்சாரத்தை நிறுத்திவிடும். இந்த நேரத்தில் அலுவலக வேலைகள், தொழில் நிறுவனங்களின் செயற்பாடுகள், ஆங்காங்கு நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகள், திருவிழாக்கள் எல்லாம் ஸ்தம்பிதமடைந்துவிடும். இந்த நிலையில் சொல்லாமல் செய்வர் சிறியர் என்ற பதம் அதற்குப் பொருந்துகிறது. ஏதாவதொரு காரணத்தால் குறிப்பிட்ட வீட்டில் அல்லது வீதியில் மின்சாரம் தடைப்பட்டுள்ளமை தொடர்பாக எடுத்துச் சொல்லியும் அது கவனிக்கப்படாது உள்ள நிலையும் காணப்படுகிறது.பல தடவை அறிவித்து, நேரில் சென்று நச்சரித்த பின்னரே வந்து சரி செய்வார்கள். அந்த நேரங்களில் சொல்லியும் செய்யார் கயவர் என்ற வார்த்தை அதிகம் பொருந்துகின்றது.

மின்சாரத்தைக் கண்டுபிடித்த மைக்கல் பரடேயை நினைவு கூருவதற்காக அமெரிக்காவில் ஒரு நிமிடநேரம் மின்சாரத்தைத் துண்டித்தார்கள்.அதற்கு அமெரிக்க மக்கள் ஆடிப் போனார்கள். இங்கோ மின்சாரம் கண்ணாமூச்சி விளையாட்டுக் காட்டிக் கொண்டிருக்கிறது.மின்சார சபை மின்வெட்டுச் சபையாக மாறி நீண்டகாலமாகிவிட்டது. ஒப்பந்தங்கள் மாறி மாறி இப்போது வடக்கின் வலு (Nothern Power) பிரதானமாகவும், அக்றிக்கோ, மின்சார சபையின் பழைய இயந்திரங்கள் ஆகியன துணையாகவும் சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தில் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன.

ஆனால் யாழ்ப்பாண மக்களின் மின்சாரத் தேவையை நிறைவு செய்வதில் இவற்றின் வலுப்போதாது. இந்த நிலையில் மக்கள் புதிதாக மீளக் குடியமர்ந்த பகுதிகளுக்கான மின் தேவை ஒரு புறம்.மறுபுறம் பல்வேறு தொழிற்சாலைகளும் இங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன் பல தொழில்கள் மின்னைப் பிரதானமாக நம்பிய வகையில் மாற்றமுற்றுள்ளன. எனவே தேவைகளை ஈடு செய்யக்கூடிய வகையில் மின்சார உற்பத்தியும் அதிகரிக்கப்பட வேண்டும்.

அண்மையில் எனது மோட்டார் சைக்கிள் காற்றுப் போய் விட்டது.ஒட்டுவதற்குக் கடையில் விட்டேன். அது ஒரு சிறிய கடை. அந்த இடம் நகரப்புறமுமல்ல.ஆனால் மின்சாரத்தில் இயங்கும் சாதனங்களே அங்கிருந்தன. ரயரைக் கழற்றி ரியுப் ஒட்டுவதற்கு இடப்பட்டது. அந்த வேளை மின்சாரம் நின்றது. மீண்டும் மின்சாரம் வருவதற்கு 50 நிமிடம் எடுத்தது. அதுவரை அங்கே காவலிருக்க வேண்டியேற்பட்டது.

வங்கிகள், தனியார் நிறுவனங்கள் பலவும் மின்சார சபையின் செயற்பாடுகளைத் தீர்க்கதரிசனத்துடன் அறிந்து ஜெனரேட்டர்களைக் கொள்வனவு செய்து வைத்துள்ளன. மக்களுக்கான அத்தியாவசிய தேவைகளுள் ஒன்றான மின்சாரத்தையே நிறைவாகத் தர முடியாத நிலையில் அபிவிருத்தி பற்றிப் பேசி என்ன பயன் என்கிறார் ஒய்வு பெற்ற அரச ஊழியர் ஒருவர். மின்சாரம் சரிவரக் கிடைப்பதை அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டும். மூக்குள்ள வரையும் சளி விட்டுப் போகாது என்று கிராமத்தில் கூறுவதுபோல, நித்த நித்தம் மின்சாரம் நின்று வருவது அபிவிருத்திக்கு ஆகாது.

மின்சார சபை ஊழியர்களை இவ்விடயத்தில் குறைகூற முடியாது. ஏனெனில் அவர்கள் மிகுந்த வேலைப் பளுவுடன் செயற்படுகிறார்கள். வீதி அகலிப்புப் பணிகளுக்காகவும், புதிது புதிதாக அரசியல்வாதிகளால் பணிக்கப்படும் வேலைகளைச் செய்வதிலும் அவர்கள் தங்கள் சக்திக்கு அப்பாற்பட்டு வேலை செய்கிறார்கள். இதற்காக அவர்களால் உயிர் விலையும் செலுத்தப்பட்டுள்ளது. மேலதிகாரிகள் அமைச்சு மட்டத்தில் மின்சாரம் தடையின்றிக் கிடைப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும்.

முன்னர் போல நீர் மின்சாரத்தை இங்கு கிடைக்கச் செய்ய வேண்டும். அத்துடன் கள்ள மின்சாரத்தை நிறுத்துவதற்கும் அதிகூடிய முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். செய்வார்களா?

விழிச்சான் குஞ்சு.

# இலங்கையில் நல்லிணக்க ஆணைக்குழு சரிவரச் செயற்படுவது சந்தேகமே?

## பிரிட்டனின் நிழல் வெளியுறவுத்துறை அமைச்சர்

கொழும்பு,ஒக்.3

இலங்கையில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை நம்பகத்தன்மையுடன் செயற்படவில்லை என பிரிட்டனின் நிழல் வெளியுறவுத் துறை அமைச்சராக உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் அலெக்ஸாண்டர் தெரிவித்தார்.

இலங்கையின் போர்க் குற்றம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்படி தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் தெரிவிக்கையில்:

சர்வதேச பங்களிப்புடன் கூட இலங்கையில் நல்லிணக்க ஆணைக்குழு தனது கடமையைச் சரிவரச் செய்யுமா என்பதில் எனக்கும் எனது முன்வரிசை உறுப்பினர்களுக்கும் நம்பிக்கை இல்லை. எனினும் சர்வதேச விசாரணை அவசியம் தேவை.

இறுதிக்காலப் பகுதியில் இலங்கையில் இடம்பெற்றபோரின் போது இலங்கைப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச ரீதியாக ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் போர்க் குற்றங்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்தி வருவதாகக் கூறப்படும். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகள், சுதந்திரமாகவும் சாட்சி பாதுகாப்புக்காகவும் இடம்பெற வேண்டுமானால் அது சர்வதேச ஆணைக்குழுவின் முன்னால் இடம்பெறவேண்டும்.

இலங்கையில் நல்லிணக்க ஆணைக்குழு தமது பணிகளை சர்வதேச ஆணைக்குழுவின் பங்களிப்புடன் மேற்கொள்ள வேண்டும் என்றே நாம் வலியுறுத்துவதாக அவர் மேலும் தெரிவித்தார். (எ)



இலங்கை இராணுவத்தின் 62 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு அநுராதபுரம் ஸ்ரீமஹா போதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சமய வழிபாடுகள் இடம்பெற்றன. இந்தநிகழ்வில் இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய கலந்து கொண்டார்.

# இலங்கைப் பொலிஸாருக்கு இன்டர்போல் பயிற்சி

கொழும்பு,ஒக்.3

இலங்கைப் பொலிஸாருக்கு ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிஸார் பயிற்சி அளித்துள்ளனர்.

பிரிட்டன் ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிஸாரினால் பயிற்சி வழங்கப்பட்ட 26 இலங்கைப் பொலிஸார் தமது பயிற்சிகளை நிறைவுசெய்துள்ளார்கள்.

வெகுஜன சேவையை விருத்தி செய்வதற்கான பயிற்சி ஒன்று பிரிட்டன் ஸ்கொட்லண்ட்யாட் பொலிஸாரால் வழங்கப்பட்டுள்ளது. இந்தப் ப்யிற்சியைப் பெற்ற பொலிஸ் அதிகாரிகள் கடந்த வெள்ளிக்கிழமை பயிற்சியை நிறைவு செய்து வெளியேறியுள்ளனர். இந்தப் பயிற்சியினை முடித்த பொலிஸசார் நாட்டில் 9 மாகாணங்களில் சேவைசெய்யவுள்ளதாக பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.(ச)

# கல்முனை வாழ் முஸ்லிம்கள் இம்முறை ஒருமித்து முஸ்லிம் காங்கிரஸுகே வாக்களிக்க வேண்டும்

## மக்கள் ஜனநாயக முன்னணி செயலாளர் அஸீஸ் கூறுகிறார்

அம்பாறை, ஒக்.3

''கல்முனை மாநகரசபைத் தேர்தலில் முஸ்லிம்கள் ஒன்றுபட்டு முஸ்லிம் காங்கிரஸுக்கு வாக்களிக்க வேண்டும். இன்று ஏற்பட்டிருக்கும் அரசியல் சூழ்நிலையில் இதுவே பொருத்தமான நிலைப்பாடாகும்.''

இவ்வாறு, மக்கள் ஜனநாயக முன்னணியின் செயலாளர் நாயகம் எம்.வை.ஏ.அஸீஸ் விடுத்துள்ள ஊடக அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

கல்முனை மாநகரசபைத் தேர்தல் தொடர்பாக விடுத்துள்ள அவரின் அந்த அறிக்கையில்:

எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் முஸ்லிம்கள் அனைவரும் ஒற்றுமையாக சிறீலங்கா முஸ்காங்கிரஸுக்கே வாக்களிக்க முன்வர வேண்டும்.

இன்று நமது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற தேசிய மேலாதிக்க கடும் போக்கும் சர்வதேசத்தின் தொடர்ச்சியான சண்டித்தன அழுத்தமும் காரணமாக இந்த நாட்டில் வாழும் சிறுபான்மை சமூகமான முஸ்லிம்கள் சிந்தித்து செயலாற்ற வேண்டிய காலகட்டத்திலுள்ளோம்.

இலங்கை அரசும் தமிழ்த் தலைமைகளும் நாட்டின் இனப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வை அடையாளப்படுத்துவதற்கான மேசையில் அமர்ந்து பேச்சுக்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

இந்தப் பேச்சுவார்த்தை மேசையில் முஸ்லிம் சமூகமும் கலந்து கொள்ள வேண்டுமென்ற கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் அதற்கு சாதகமான சமிக்ஞைகளெதுவும் தெரியவு மில்லை, ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கைகளும் இருப்பதாகவும் தெரியவில்லை.

அதனால் முஸ்லிம்களின் உரிமைகளையும், அபிலாஷைகளையும் மற்றவர்களுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் அடையாளப்படுத்தி உரத்துக் கூற வேண்டிய தேவை நமக்கு ஏற்பட்டுள் ளது.

### அரச அடக்கு முறை

நமது பூர்வீக நிலங்கள் காணிகள் புனித பிரதேசம் என்ற போர்வையிலும், அரச அடக்கு முறைகளாலும், இராணுவ ஆக்கிரமிப்பாலும் சுரண்டப்பட்டும், கபளீகரம் செய்யப்பட்டும் வருகின்றன. இவற்றிற் கெல்லாம் எங்கு நீதி, நியாயம் தேடுவது என்பதெல்லாம் புரியாத புதிர்களாகவேயுள்ளன.

இலங்கையிலுள்ள மாநகர சபைகளில் முஸ்லிம்கள் மிக அதிகமாக வாழும் மாநகரமாக கல்முனை மாநகரமே திகழ்கின்றது.

முஸ்லிம்களின் சுயாட்சிக்கான அதிகார அலகு கிழக்கு மாகாணத்தில் ஏற்படுமானால் கல்முனை மாநகரம் தான் தலைநகராக அமையப் போகின்றது.

### அதிமுக்கியத்துவம் வாய்ந்த தேர்தல்

அத்தோடு கல்முனை மாநகர சபையின் ஆட்சி பல தடவை முஸ்லிம்காங்கிரஸ் வசமே இருந்து வருகின்றது.

இன்று ஏற்பட்டிருக்கும் அரசியல் சூழ்நிலையில், இராஜதந்திர சூதாட்டத்தில் நடைபெறுகின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

கல்முனை மாநகரசபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் அடையப் போகும் வெற்றி இலங்கை முஸ்லிம்களின் வெற்றியாகும்- எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-30)

# திறந்து வைக்கப்படாத கல்வி அலுவலகம்; கேள்வி எழுப்பும் கல்விச் சமூகத்தினர்

துணுக்காய், ஒக்.3

துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்தின் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியாகி ஒரு மாத காலம் கடந்துவிட்ட நிலையில் இன்னமும் அந்த அலுவலகம் திறந்து வைக்கப்படாமல் இருப்பது ஏன் எனக் கேள்வி எழுப்பப்படுகிறது.

இந்தக் கல்வி வலயத்தில் உள்ளடங்கும் ஒட்டுசுட்டான், முத்துஐயன்கட்டு, மாங்குளம் ஆகிய பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் ஆகியோரே இவ்வாறு கேள்வி எழுப்புகின்றனர்.

வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது மாங்குளத்திலுள்ள இந்த வலயக் கல்வி அலுவலகம் சேதத்துக்குள்ளானது. அதன் பின்னர் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. அந்தப் புனரமைப்பு வேலைகள் இடம்பெற்றுப் பூர்த்தியாகி ஒரு மாதத்துக்கு மேலாகிவிட்டது.

புனரமைக்கப்பட்ட இந்த அலுவலகம் மாங்குளத்தில் செயற்பட ஆரம்பிக்காதன் காரணமாக தொடர்ந்தும் மல்லாவியில் தற்காலிகமாகச் செயற்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாகப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் தமது தேவைகளை நிவர்த்தி செய்வதில் பல்வேறு இடர்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. இரண்டு பஸ்களில் பயணத்தை மேற்கொண்டே ஒட்டுசுட்டான் கல்விச் சமூகத்தினர் வலயக் கல்வி அலுவலகத்துக்குச் செல்ல வேண்டியுள்ளது எனவும் அதிருப்தி தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இந்த வலயக் கல்வி அலுவலகத்தின் விசேட கல்வி அலகின் கட்டட நிர்மாண வேலைகள் மூன்று மாதங்களுக்கு முன்னரே நிறைவடைந்துள்ளபோதும் இன்னமும் திறந்து வைக்கப்படாமல் இருப்பதாகவும் தெரிய வருகிறது. (க-14)

# வவுனியா சாயிபாபா நிறுவன ஏற்பாட்டில் கோட்டை கட்டிய குளத்தில் கண்சிகிச்சை முகாம்

அக்கராயன், ஒக்.3

வவுனியா ஸ்ரீ சத்தியசாயி பாபா நிறுவனமும் வவுனியா பொது மருத்துவமனையும் இணைந்து துணுக்காயில் கண் சிகிச்சை முகாமொன்றை நடத்தி முடித்துள்ளன.

இந்தக் கண் சிகிச்சை முகாம் துணுக்காய் கோட்டை கட்டிய குளம் பாடசாலையில் நேற்றுமுன் தினம் முற்பகல் 10 மணியளவில் ஆரம்பித்து நடைபெற்றது. துணுக் காய்ப் பிரதேச செயலர் சி.குணபாலன் நிகழ்வுக்குத் தலைமை தாங்கியதுடன் கண்சிகிச்சை முகாமையும் ஆரம்பித்து வைத்தார்.

அம்பலப்பெருமாள்குளம், கோட்டைகட்டிய குளம், தென்னியன்குளம், உயிலங்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பெருமளவில் இந்த முகாமில் கலந்து கொண்டனர். கண் வைத்திய நிபுணர்கள் இவர்களின் கண்களைப் பரிசோதித்தனர். இதன்போது 21 பேர் கண்புரை நோயால் பாதிக்கப்பட்டுள்ளமை தெரிய வந்தது. இவர்கள் அனைவருக்கும் வவுனியா பொது மருத்துவ மனையில் கண்புரைக்கான அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட விருக்கின்றன.

மேலும் பார்வைக் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட 25 பேருக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. கண்சிகிச்சை நிபுணர்களாகிய டேமியன், மலரவன் ஆகியோர் கண் பரிசோதனைகளை மேற்கொண்டனர். மேலும் ஸ்ரீ சத்தியசாயிபாபா நிறுவனத்தினரால் நான்கு விதவைகளுக்குத் தையல் இயந்திரங்கள்வழங்கப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட 20 பேருக்கு உதவிப் பொருள்கள் வழங்கப் பட்டன.

இந்த நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய துணுக்காய்ப் பிரதேச செயலர் உரையாற்றும்போது:

பின்தங்கிய பகுதிகளில் இதுபோன்ற கண்சிகிச்சை முகாம்கள் நடைபெறுவது மிகவும் வரவேற்கத்தக்கது. எத்தகைய வசதிகளுமின்றி வாழும் கிராம மக்களுக்கு உதவ வேண்டியது எம் அனைவரதும் கடமையாகும் என்றார். (க-410)

## புன்னகைக்கும் நேரம்...



காலத்தின் தேவைகள்: மன்னாரில் 36 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட தாதியர் விடுதி மற்றும் இரத்த வங்கி ஆகியவற்றை அமைச்சர் றிஸாட் பதியுதீன் திறந்து வைக்கிறார். (601)

# சிறுவர் நாடக அரங்கு

துணுக்காய் கல்வி வலயத்தில் சிறுவர் நாடக அரங்கு நடைபெற்று முடிந்துள்ளது.

இதில் மொத்தம் 10 பாடசாலைகள் பங்கு பற்றியிருந்தன. இறுதியில் முதல் மூன்று இடங்களையும் முறையே அனிஞ்சியன் குளம் தமிழ் வித்தியாலயம், ஒட்டுசுட்டான் ஆறுமுகம் தமிழ் வித்தியாலயம், யோகபுரம் மகாவித்தியாலயம் ஆகியன பெற்றுக்கொண்டன. இந்தப் பாடசாலைகள் மாகாண மட்ட போட்டிகளில்கலந்துகொள்ளும் என பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.விஜயபாலா தெரிவித்தார். (க-410)

# சிறுவர் தின நிகழ்வுகள்

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி முருகானந்தா மகாவித்தியாலயத்தில் விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதன்பிரகாரம் இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் முரசுமோட்டை வைரவர் ஆலய முன்றிலில் இருந்து பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் அழைத்துவரப் பட்டுப் பாடசாலையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வுகள் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளன. (க-405)

# கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து 93 ஆசிரியர் இடமாற்றத்துக்கு தகுதி

கிளிநொச்சி, ஒக்.3

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் இருந்து 93 ஆசிரியர்கள் மாவட்டங்களுக்கு இடையிலான இடமாற்றத்துக்கு தகுதி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 78 பேர் தேவையான காலம் தேசிய இடமாற்றக் கொள்கைக்கு அமைவாகக் கடமையாற்றியுள்ளனர்.

15 பேர் மருத்துவக் காரணங்கள்போன்ற விசேட காரணங்களுக்காகத் தகுதி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களது பெயர், விவரங்கள் கிளிநொச்சி கல்வி வலய விளம்பரப் பலகையில் காட்சிப் படுத்தப் பட்டுள்ளது.

மாவட்ட இடமாற்றத்துக்கு விண்ணப்பித்து இடமாற்றத்துக்குத் தகுதி பெறாத ஆசிரியர்கள் மேன்முறையீடு செய்ய விரும்பின் உடனடியாக மேன்முறையீடு செய்யுமாறும் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க-405)

# பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் அமைப்பு உருவாக்கம்

நாவற்குழி, ஒக்.3

கிளிநொச்சி மாவட்டத்தில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கென அமைப்பு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகம் இந்த அமைப்பின் உருவாக்கத்தில் முக்கிய பங்களிப்புச் செய்துள்ளது.

இதன் மாவட்ட அதிகாரி தங்க வடிவேல் கிருபாகரன் இதற்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட அமைப்பு இந்தப் பெண்களுக்கான வாழ்வாதாரத்தின் பொருட்டு நான்கு மில்லியன் ரூபா நிதியை வழங்க முன்வந்துள்ளது. இந்த மாவட்டத்தில் முதற்கட்டமாக இனங்காணப் பட்டுள்ள 4 ஆயிரம் பெண்களுக்கான வாழ்வாதாரத்தை ஏற்படுத்தும் முன்முயற்சிகள் எடுக்கப் படுகின்றன. இதற்கான கருத்திட்டம் தயாரிப்பது தொடர்பான கூட்டமொன்று இன்று திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு கனகபுரத்தில் நடைபெறவுள்ளது. மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் சமூக சேவை அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கான மாவட்ட அமைப்பைப் பலப்படுத்தும் முயற்சிகளும் நடைபெறுகின்றன.

இது நிறைவு பெற்றதும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் பொருத்தமான வாழ்வாதார உதவிகளைத் தகுதியானோருக்கு நேரடியாக வழங்குமெனக் கூறப் படுகின்றது.

நாளாந்த வாழ்க்கையை இலகுவாகக் கொண்டு செல்வதற்கு கஷ்டப்படும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு இந்த வாழ்வாதாரத் திட்டம் மிகுந்த பயனைக் கொடுக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. வாழ்வாதாரத்தின் தொடர் கண்காணிப்பை வட மாகாண சமூக சேவைகள் திணைக்கள அதிகாரிகள் மேற்கொள்ளவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (க-121)

# அக்கராயன் மத்திய பகுதிகளில் ஏற்று நீர்ப்பாசனம்

கிளிநொச்சி, ஒக்.3

கிளிநொச்சி அக்கராயன் குளத்தின் முழுமையான புனரமைப்புப் பணிகள் 300 மில்லியன் ரூபா செலவில் நடைபெற்று வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடுக் குளத்துக்கு அடுத்த பெரிய குளமான அக்கராயன் குளம் கடந்த 30 ஆண்டுகளாக முழுமையான புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப் படாமல் இருந்து வந்தது.

தற்போது ஒரு முழுமையான புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. வலது, இடது கரை வாய்க்கால்கள் சிமெந்தால் அமைக்கப்பட்டு வருகின்றன.

குளத்தின் அணைக்கட்டு இரு அடி உயர்த்தப்பட்டு நீரினை அதிகளவில் தேக்கி வைப்பதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

குளத்தின் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில் ஸ்கந்தபுரம் கிராமத்தில் ஏற்றுநீர்ப்பாசன வாய்க்கால் வேலைகளும் நடைபெற்று வருகின்றன.

அக்கராயன் குளத்தின் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில் அக்கராயன் மத்திய பகுதிக்கும் ஏற்றுநீர்ப் பாசனம் வழங்குவதன் தேவை உணரப்பட்டுள்ளன.

1953 ஆம் ஆண்டு அக்கராயன் கோணாவில் பகுதியில் 10 ஏக்கர் வயல் நிலமும் 5 ஏக்கர் மேட்டு நிலமும் மக்களுக்கு வழங்கப்பட்டன. 1962 ஆம் ஆண்டு அக்கராயன் காடு மக்களுக்கு வழங்கப்பட்டு 1963, 1965 ஆம் ஆண்டுகளில் அக்கராயன் குளத்தின் கீழான நீர்ப்பாசனக் குடியேற்றத்திட்டங்கள் உருவாக்கப்பட்டு 333 வீடுகள் முதற்கட்டமாக அமைக்கப்பட்டன.

ஸ்கந்தபுரத்தை மையப்படுத்தி 1966 இல் ஏற்று நீர்ப்பாசனக் கால்வாய்கள் அமைக்கப்பட்டு 1967 இல் மேட்டுக்காணி களுக்கு அக்கராயன் குளத்திலிருந்து நீர் வழங்கப்பட்டது. இந்த நீரை அடிப்படையாகக் கொண்டு ஸ்கந்தபுரத்தின் மேட்டுக் காணிகளின் வீட்டுத் தோட்டங்கள் சிறப்பாக நடைபெற்றன. ஸ்கந்தபுரம் மையப்பகுதியில் அதாவது உயர் பகுதியில் தொட்டிகள் அமைக்கப்பட்டு அந்தத் தொட்டிகளில் இருந்து அதன் கீழ்ப்பகுதிகளுக்கு ஏற்று நீர்ப் பாசனம் வழங்கப்பட்டது. ஏற்று நீர்ப்பாசனத்துக்காக வாய்க்காலின் அருகில் ஏற்று நீர்ப்பாசன நீர் இறைக்கும் இயந்திர கட்டடம் அமைக்கப்பட்டது. இதில் இருந்து ஏற்று நீர்ப்பாசனத் தொட்டிகள் 25 மீற்றர் உயரமான பகுதியில் அமைக்கப் பட்டன.

அக்கராயன் குளம் உருவாக்கப்பட்டதிலிருந்து ஸ்கந்தபுரம் கிராமத்துக்கே ஏற்று நீர்ப் பாசனம் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் அக்கராயன் மத்திய பகுதிக்கு ஏற்று நீர்ப்பாசனம் வழங்கப்படவில்லை.

தற்போது குளத்தின் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில் அக்கராயன் மத்திய பகுதிக்கு ஏற்றுநீர் வழங்க வேண்டும் என்பது அக்கராயன் மக்களின் வேண்டுகையாக உள்ளன.

அக்கராயன் பிரதேசத்துக்கு ஏற்றுநீர்ப்பாசனத்தையும் செய்தால் மக்கள் பெரும் நன்மை அடைவார்கள். இத்தகைய தொரு நீர்ப்பாசன நடவடிக்கையை அக்கராயன் மகாவித்தியாலயத்திலிருந்து 113 மீற்றர் உயரத்திலிருந்து தொடங்கினால் பெரும் நன்மைகள் உருவாகும்.

அக்கராயன் மகாவித்தியாலயத்தின் நான்கு புறமாகவும் ஏற்று நீர்ப்பாசனத்துக்கான தொட்டிகள் கட்டலாம்.

அக்கராயன் மத்திய ஏற்று நீர்ப்பாசனத்துக்கான ஏற்று நீர்ப் பாசன நீர் இறைக்கும் இயந்திரக் கட்டடத்தை அக்கராயன் வாய்க்கால் அருகில் உள்ள வைரவர் கோயிலடியில் அமைக்கலாம்.

கி.பிருதிவி

அக்கராயன் மத்திய பகுதியில் ஏற்றுநீர்ப்பாசனம் நடைமுறைப்படுத்தப்பட்டால் மீளக் குடியமர்ந்த மக்கள் பெரும் நன்மை அடைவார்கள்.

# பூநகரிப் பிரதேசத்தின் வரட்சி தொடர்பாக பிரதேச சபைச் செயலாளர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஒக்.3

பூநகரிப் பிரதேசத்தின் தற்போதைய வரட்சி மற்றும் மக்கள் குடிதண்ணீருக்குப் படும் அல்லல் குறித்துத் தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் யாழ்.நிலையப் பொறியியலாளருக்குப் பூநகரிப் பிரதேச சபைச் செயலாளர் திருமதி மேரிமக்டலின் சிவகுமார் விளக்கியுள்ளார்.

பூநகரிப் பிரதேசம் ஏற்கனவே குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடான பிரதேசம் எனவும் தற்போது நிலவும் கடும் வரட்சியால் மக்கள் மிகக் கஷ்டமான சூழலுக்குள் தள்ளப்பட்டுள்ளனர் எனவும் - கடும் வரட்சி காரணமாகப் பஞ்சம் நிலவுகிறது எனவும் பிரதேசசபைச் செயலாளர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்: அவசர குடிதண்ணீர்த் திட்டத்தின் கீழ் குடிதண்ணீர் வழங்க யாழ்.தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபை தண்ணீர் பவுசர் லொறி ஒன்றை வழங்குமாறு கோரினார். இதற்கு யாழ்.தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் பிராந்திய முகாமையாளர் எந்திரி பா.தபேந்திரகுமார் பதிலளிக்கையில்;

சிறு திருத்தவேலைகள் தற்போது இடம்பெறுகின்றன. இந்த வார இறுதியில் தண்ணீர் பவுஸர் வழங்கப்பட்டு விடும் எனத் தெரிவித்துள் ளார்:

இதேவேளை, பூநகரி பொது அமைப்புகள் குடிதண்ணீர் பிரச்சினை தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், வடமாகாண பொதுநிர்வாக பிரதி பிரதம செயலாளர், வடக்கு மாகாண ஆளுநரின் செய லாளர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோரின் கவனத்துக்கு 'அவசர மனிதாபிமான உதவி' என்னும் தலைப்பில் கடிதங்கள் எழுதியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.(க-302)

# வவுனியா மாவட்ட அரச அலுவலர்களின் வீட்டுத் திட்டங்கள் மேலும் விஸ்தரிப்பு

வவுனியா, ஒக்.3

வவுனியா மாவட்டத்தில் பணிபுரியும் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் வீட்டுத் திட்டமானது மேலும் இரண்டு இடங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

வவுனியாவில் அமைந்துள்ள அரச திணைக்களங்களில் பணிபுரியும் அரச ஊழியர்களுக்கான காணியுடனான வீட் டுத்திட்டம் வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் கடந்த வாரம் வவுனியா வேப்பங்குளத்தில் ஒரு தொகுதி அரச ஊழியர்களுக்கான வீட்டுத்திட்டம் அமைக்கும் பணிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு அமைச்சர் விமல் வீரவன்சவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நிலையில் மேலும் ஈரப்பெரியகுளம் மற்றும் நெடுங்கேணியிலும் வீடமைப்புத் திட்டங்களை அமைக்கும் பணி முன்னெடுக்கப்பட்டு வருவதாக அரச அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை இந்திய வீட்டுத் திட்டத்தின் ஊடாக 175 வீடுகள் வவுனியா மாவட்டத்தில் அமைக்கப்பட்டு வருவதாகவும் அவை மரையடித்தகுளம், ராமன்குளம் மற்றும் சிங்களப் பிரதேச செயலகப் பகுதிகளிலும் வவுனியா வடக்கு புளியங்குளம் பகுதியிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் பயனாளிகள் தெரிவும் இடம்பெற்று நிறைவடைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-எ)

## இதயம் தாங்குமா?...



அழிவிலிருந்து மீட்சி: கடந்தகாலப் போர் நடவடிக்கை காரணமாக புதுமுறிப்புப் பிரதேசத்தில் அமைந்திருந்த மகாதேவா சைவச்சிறார் இல்லத்தின் 14 கட்டடத் தொகுதிகள் அழிவடைந்த நிலையில் காணப்படுகின்றன. (302)

# பெண்களுக்குத் தொல்லை தரும் ஏ- 9 வீதி திருத்தப் பணியாளர்கள்

ஏ-9 வீதியில் வீதி திருத்தப்பணியில் ஈடுபடும் பணியாளர்கள் சிலர் வீதிகளில் பயணிக்கும் பெண்பிள்ளைகளைக் கிண்டலடித்துத் தொல்லை கொடுத்து வருவதாகக் கூறப்படுகின்றது.

ஏ-9 வீதி திருத்தப்பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் பல பணியாளர்கள் தமது வேலைகளில் கண்ணுங்கருத்துமாக இருந்து தமது வேலைகளை செய்து வருவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

எனினும் இத்திருத்தப் பணிகளில் ஈடுபட்டுவரும் சிலர் வீதியால் செல்லும் பெண்பிள்ளைகளுக்கு தொல்லை கொடுத்து வருவதாகக் கூறப்படுகின்றது.

கடந்த புதன்கிழமை மாலை கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள ஏ-9 வீதியில் தார் ஊற்றி வீதியைச் செப்பனிடும் பணி நடைபெற்றது. இதில் பல பணியாளர்கள் ஈடுபட்டிருந்தார்கள். அவ்வேளையில் வீதிக்கு அருகில் இருக்கும் கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் பொது நூலகத்துக்கு வந்து செல்லும் பெண்பிள்ளைகளை தம்மிடம் வருமாறு கைகளை காட்டி ஏதோ வார்த்தைகளை கூறியதை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை மேற்படி நூலகத்தில் பணிபுரியும் பெண் உத்தியோகத்தர்கள் வெளியில் வந்தபோது அவர்களை நோக்கியும் மேற்படி செயற் பாடுகளை மேற்கொண்டதாக கூறப்படுகின்றது.

இதேவேளை இந்த நூலகத்துக்கு வரும் மாணவிகளும் இவர்களால் சீண்டப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

(த-426)

# கிளிநொச்சி மாவட்டத்தில் மாற்றுவலுவுள்ள 107 பேருக்கு சுயதொழில் உதவிகள்

நாவற்குழி, ஒக்.3

கிளிநொச்சி மாவட்டத்தில் 'கன்டிகாவ் இன்ரநஷனல்' எனும் அமைப்பு இந்த ஆண்டில் இதுவரை 107பேருக்கு சுயதொழில் உதவிகளை வழங்கியுள்ளது.

மாற்றுவலுவுள்ள தொழில் திறமையுள்ள இவர்கள் தலா 57 ஆயிரம் ரூபா பெறுமதியான சுயதொழில் நன்கொடைகளைப் பெற்றுள்ளனர்.

இந்த மாவட்டத்தில் இதுவரையும் ஆயிரத்து 920 மாற்றுவலுவுள்ளோர் இனங்காணப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட சமூக சேவை அலுவலகம் இந்தத் தரவுக் கணக்கெடுப்பை மேற்கொண்டது.

கன்டிகாவ் இன்ரநஷனல் அமைப்பால் வழங்கப்பட்டுள்ள சுயதொழில் தொடர்பான கண்காணிப்பை மாவட்டத்திலுள்ள சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் மேற்கொள்கின்றனர்.

வழங்கப்பட்ட சுயதொழில் உதவிகளை விடப் பயனாளிகளின் பங்களிப்புத் தொகைகளும் இந்தச் சுயதொழிலில் அடங்கியுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்துக்கென உருவாக்கப்பட்டுள்ள மாற்றுவலுவுள்ளோர் சங்கமும் சுயதொழில் பயனாளிகளின் தெரிவு, ஊக்குவிப்பு, கண்காணிப்பு என்பனவற்றில் ஈடுபடுகின்றது. மாற்றுவலுவுள்ளோர் தமது பிரதேசத்துக்குப் பொருத்தமான, தமக்குத் தெரிந்த சுயதொழிலை மேற்கொள்வதனால் இது வெற்றிகரமானதாக அமைந்துள்ளது. (க-121)

# கிளிநொச்சியில் சிவநகரில் வெடிபொருள்கள் மீட்பு

கிளிநொச்சி,ஒக்.3

கிளிநொச்சி சிவநகர் பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்ட வெடி பொருள்கள் பொலிஸாரின் தேடுதல் நடவடிக்கையின் போது மீட்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் கிளிநொச்சி பொலிஸாரால் மேற் கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது மேற்படி பகுதியில் உள்ள மயானத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரீ 56 ரக துப்பாக்கி,30ரவைகள் என்பனவே பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளனவாகும்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (க-7)

# அனுமதி வழங்காத இடங்களிலும் செம்மலையில் தாராள மண் அகழ்வு

முல்லைத்தீவு, ஒக்.3

முல்லைத்தீவு மாவட்டம் செம்மலைப் பகுதியில் அனுமதி வழங்கப்படாத இடங்களிலும் மண் அகழ்வு வேலை தாராளமாக இடம்பெற்று வருகின்றது.

குறிப்பாகச் செம்மலை அரசினர் பொது வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள குளத்தில் இரவு, பகல் என்ற வேறுபாடின்றி மண் ஏற்றப்படுகின்றது. குளத்தின் அருகிலுள்ள வீடுகளின் வேலியோரங்களிலும் மணல் அகழப்படுவதால் வேலிகள் கீழே விழும் அபாயமும் தோன்றியுள்ளது.

உழவு இயந்திரங்களை வைத்திருப்போர் மணல் ஏற்றுவதற்கான அனுமதிப் பத்திரத்தை முதலில் பெற்றுக் கொள்கின்றனர்.

பின்னர் தமது தேவைக்காகவும் ஏனையவர்களின் தேவைக்காகவும் அனுமதி வழங்கப் படாத பிரதேசங்களிலும் மணலை அகழ்ந்து வருகின்றனர்.

இவர்களின் இத்தகைய செயல்களால் பெரும் பாதிப்புக்கள் ஏற்படுவதற்கான ஏதுநிலைகளும் தோன்றியுள்ளன.

இது தொடர்பாகப் பொலிஸிலும் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-421)

# கல்வி, விளையாட்டுக்கு உதவிகள்





கிளிநொச்சி, ஒக்.3

கிளிநொச்சி மாவட்டம், கரைச்சிப் பிரதேச சபையைச் சேர்ந்த உப - தலைவர், உறுப்பினர்கள் ஆகியோர் கல்வி மற்றும் விளையாட்டுத்துறைக்கு உதவிகளை வழங்கியுள்ளனர்.

உப தலைவர் நகுலேஸ்வரன், உறுப்பினரான மா.சுகந்தன் ஆகியோர் கிளிநொச்சி விநாயகபுரம் விளையாட்டுக் கழகத்துக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கினர்.

இன்னொரு பிரதேச சபை உறுப்பினரான வி.சுவிஸ்கரன் கிளிநொச்சி, வட்டக்கச்சி தெற்கு அரசினர் வித்தியாலயம், பாரதிபுரம் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவிகள் இருவருக்கு சைக்கிள்களை வழங்கி உதவியுள்ளனர்.(க-6)

# பெண்களுக்கெதிரான வன்முறை அதிகரிப்புக்கு அவர்களின் செயற்பாடுகளே காரணம்

குடும்பங்களிலும் மற்றைய இடங்களிலும் பெண்களுக்கெதிராக வன்முறைகள் தொடர்ந்த வண்ணம்தான் இருக்கின்றன. இந்த வன்முறைகள் தொடர்வதற்கு ஏதோ ஒருவகையில் பெண்களும் காரணமாகி விடுகின்றனர். ஆணுக்கு நிகராக சகல துறைகளிலும் தடம் பதித்து ஆணுக்குப் பெண் சரிநிகர் என்பதனை சில பெண்கள் வெற்றிகரமாக நிரூபித்துக் கொண்டு இருக்கின்றனர். இன்னொரு பக்கம் பல பெண்கள் எமக்குத்தானே சுதந்திரம் கிடைத்துவிட்டது; எப்படி வேண்டும் என்றாலும் வாழலாம் என்று நினைத்து தம் தலையில் தாமே மண்ணை அள்ளிப் போட்டுக்கொண்டிருக்கின்றனர். சுதந்திரம் என்பது மனதளவில் மட்டும் இருந்தால் போதும். அதனை உடை அணியும் விடயங்களில் காட்ட வேண்டுமா?


வதனா,
கரவெட்டி.

இறுக்கமான ஆடைகள்; அது போதாது என்று ஆங்கில வாசகங்கள் பொறித்த ரீசேட் இவைதான் இன்று அனேகமான பெண்களின் உடைகளாக இருக்கின்றன. இவ்வாறு அணிந்து சென்றால் ஆண்கள் சேஷ்டை விடத்தான் முயல்வார்கள். இதனை அந்தப் பெண்கள் தமக்கெதிரான வன்முறை என்கிறனர். அதற்குக் காரணம் அந்தப் பெண்கள்தானே?

ஒரு பெண்ணைப் பார்த்தவுடன்; அவள் உடைகளைப் பார்த்தவுடன் ஆண்கள் கையெடுத்துக் கும்பிடும் அளவுக்கு இருக்கவேண்டும். அதைவிட்டு கேலிபேசக் கூடிய அளவுக்கு இருக்கக்கூடாது. எத்தனையோ இளம் பெண்களுக்கு சேலை கட்டவே தெரியாது. ஆனால் அதனைக்கூட அவர்கள் பெருமையாக நினைக்கின்றனர். அவர்களுக்கு தெரியவில்லை பெண்மைக்கு மற்றவரிடையே மதிப்பையும் கௌரவத்தையும் பெற்றுத் தருபவற்றுள் நாம் அணியும் ஆடைகளும் முக்கியம் என்பது.

எது எப்படி இருந்தாலும் பெண்ணானவள் எப்படியும் வாழலாம் என்று நினைக்காமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்று தனக்குள் ஒரு வரைமுறை போட்டு வாழ்ந்துகொண்டால் குடும்பத்திலும் சரி, வேறு இடங்களிலும் சரி பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஏற்பட வாய்ப்பிருக்காது. வாழ்க்கை என்பதும் நம் கையில் தான். அதனை எப்படி வாழ்ந்து முடிக்க வேண்டும் என்பதும் நம்கையில் தான் இருக்கின்றது. அதனைப் புரிந்து நடந்தால் ஒவ்வொருபெண்ணுக்கும் வெற்றியே.




என் விடியல் என்றும்
உனக்கானது...
என் உள்ளத்தின் உற்சாகம்
உன் புன்னகையில்...
ஆனால் நீயோ
தனிமையில் கனவுகள் காண்கிறாய்...
உறக்கம், உணவு தொலைக்கிறாய்
உண்மை கேட்டால் வெடிக்கிறாய்...

காதல் கனவுகளில் காலத்தைத்
தொலைத்து விடாதே..
கானல் நீராக காணாமல்
போய்விடாதே...
காலச்சக்கரத்தில் உண்மைக்காதல்
உன்னைத்தேடி வரும்...
வாழ்க்கைச் சக்கரத்தில்
தேடும்போது வாராது
இளமைப்பருவம்...

உன்னை விரட்டும் வறுமை
மாற வேண்டும்...
நீ, வறுமை விரட்டும்
கல்வி தேட வேண்டும்
அதற்காக
உன் கையில் கல்வி என்னும்
அகல் தர
கல் சுமக்கிறேன்
மகளே
நான் சுகமாக...

-இலக்கியா-

# கௌரவம் என்ற பெயரில் பெண்களின் முன்னேற்றத்துக்குத் தடைபோடும் பெற்றோர்கள்



ஆணுக்கு இருக்கும் அத்தனை திறமைகளும் ஒரு பெண்ணிடமும் இருக்கின்றன. அதற்கு மேலும் இருக்கின்றன. ஆனால் பெற்றோர்களும் சமூகமும் இதைப் புரிந்து கொண்டு மதிப்புக் கொடுத்து பெண்களை வளர்க்கத் தவறுகின்றனர்.

ஒரு ஆணைப் பார்த்து ''என்ன செய்கிறீர்கள்?'' என்று கேட்கும் போது அவர், ''சும்மாதான் இருக்கிறேன்'' என்றால் கேவலமாகப் பார்க்கும் உலகம் மாறாக ஒரு பெண்ணைப் பார்த்து ''என்ன செய்கிறீர்கள்?'' என்று கேட்பதில்லை. காரணம் பெண்ணுக்கு குடும்பம், குழந்தைகள், கணவன், வீடு என்று இருக்கின்றன. அதுவே அவர்களுக்குப் பெரிய வேலைதான்.

ஓர் ஆணுக்குக்கு வழங்குகின்ற வாய்ப்புக்கள் பெண்களுக்கு வழங்கப்படுவதில்லை. ''ஒரு பெண் எதற்குப் படிக்க வேண்டும்? கல்யாணம் செய்துகொண்டு கணவன் வீட்டுக்குப் போகிறவள் தானே? என்று ஒரு பெண்ணைத் திருமணத்துக்காகவே வளர்க்கின்றனர்.

ஓர் ஆண் திருமணம் ஆகாமல் இருக்கலாம். ஆனால் ஒரு பெண் திருமணம் ஆகாமல் இருந்தால் கெட்ட பெயர். இப்படி ஒரு மரபு.

பெண்கள் பொறுமையின் சிகரங்கள். அறுத்துப் போட்டாலும் அன்பைத் தவிர வேறெதுவும் சுரக்கத் தெரியாதவர்கள் என்பதுதான் அவர்களுக்கு எதிரான கொடுமைகள் பல்கிப் பெருக முக்கிய காரணம். கூடவே குடும்ப கௌரவம் என்ற பெயரில் அர்த்தமில்லாத கட்டுப்பாடுகளை வகுத்துக் கொண்டு எத்தனை கொடுமைகள் நடந்தாலும் அவளைப் பொறுத்துப் போகச் சொல்லி மீண்டும் மிருகத்தின் கூட்டுக்குள்ளேயே தள்ளி விடுகின்ற பெற்றோர்களை யார் மாற்றுவது?

-ஜீவன்,
மானிப்பாய்.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
''திலகம்'',
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

# பெண்ணுக்கு பண பலமும் இருக்க வேண்டும்



ஒரு பெண் வாழ்வதற்கு வருமானமும் என்றும் உறுதுணையாக நிற்கும்.

பதவி இல்லாமல் இருந்தாலும் பணம் இருந்தால் பதவியில் உள்ளவர்களையும் அடிபணிய வைக்கலாம். ஆணா, பெண்ணா என்பது முக்கியமல்ல; சொத்துக்கு வாரிசு ஒரு பெண்தான் என்றால் சமூகமே அந்தப் பெண்ணுக்கு அடிபணிவதைப் பார்க்கலாம்.

பணம் பெண்களுக்குப் பாதுகாப்பைத் தருகிறது; பெருமை தருகிறது, செல்வாக்குத் தருகிறது.

அதனால் தான் போலும் வள்ளுவர் "மகளே! பணம் இல்லாவிட்டால் இந்த உலகில் உனக்கு வாழ்வே இல்லை'' என்று சொல்லி வைத்துவிட்டுப் போயிருக்கிறார். எனவே மாறிவரும் புதிய உலகுக்கு ஏற்ப பெண்களும் தங்களைத் தயார் செய்துகொள்ள வேண்டும். அதற்காக வருமானத்தை ஈட்ட வேண்டும்.

வருமானம் ஆண், பெண்ணின் பங்கு சரிபாதி என்ற விகிதத்தில் இருக்க வேண்டியதில்லை. அதேபோல் வளரும் குழந்தைகள் வீட்டிலிருக்கும் போது வருமானத்துக்காக வேலைக்குச் செல்ல வேண்டியதில்லை. குடும்பக் கடமை முடியும் போது அடுத்த கடமைக்குத் தன்னைத் தயார் செய்து கொள்வது சிறந்தது. இத்தகைய பெண்கள் வாழ்க்கையைப் பயனுள்ளதாக்குவார்கள்.

-நித்தியா.

# நெற்காணிகளுக்கு சட்டவிரோதமாகப் பதிவு; ரத்துச் செய்யக்கோருகிறார் செல்வராசா எம்.பி.

மட்டக்களப்பு, ஒக்.3

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு, பட்டிப்பளை, வெல்லா வெளிப் பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள நெற் காணிகளுக்கு அம்பாறை மாவட்ட கமநல சேவைத் திணைக்களத்தால் சட்ட விரோதமான முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் நெற் காணிப் பதிவை ரத்துச்செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உன்னிச்சை மற்றும் சிறு நீர்ப்பாசன பெரும் போக விவசாயச் செய்கைக்கான ஆரம்பக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை வவுணதீவுப் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் மாவட்ட அரச அதிபர் சு.அருமைநாயகம் தலைமையில் இடம்பெற்றபோதே இந்த வேண்டுகோளை அவர் முன்வைத்துள்ளார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பு மாவட்டத்திற்குட்பட்ட இந்தக்காணிகள் மேய்ச்சல் தரைக்காக ஒதுக்கப்பட்ட நிலையில் இதனை அம்பாறை மாவட்ட பெரும்பான்மை இனத்தவர்கள் சட்ட விரோதமாக அத்துமீறிப் பிடித்துள்ளனர்.

அதற்கு எந்தவித ஆவணங்களும் அரசினால் வழங்கப்படாத நிலையில் அந்தக் காணிகளுக்கு சட்ட விரோதமாக அம்பாறை மாவட்ட கமநல சேவைத் திணைக்களத்தினால் பி.எல்.ஆர். ஏற்றப்பட்டுள்ளது.

இதனை ரத்துச்செய்ய அரச அதிபரும் மட்டக்களப்பு மாவட்ட கமநல சேவைத் திணைக்கள உதவி ஆணையாளரும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேவேளை, மேய்ச்சல் தரைப் பிரச்சினையால் பண்ணையாளர்கள் பல பிரச்சினையை எதிர்நோக்கி வருகின்றனர். மேய்ச்சல் தரையை அத்துமீறிப் பிடித்தவர்களினால் பண்ணையாளர்களுக்குப் பிரச்சினை ஏற்படுகிறது, கால்நடைகளுக்குப் பிரச்சினை ஏற்படுகிறது. சட்ட விரோதமாகக் காணிகளைப் பிடித்தவர்களை வெளியேற்ற பிரதேச



செயலாளர் சட்டநடவடிக்கை எடுத்துள்ளார். ஒரு மாதத்தினுள் அவர்கள் வெளியேறாவிட்டால் நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதுவரை கால்நடைகளை வெளியேற்றாது வைத்துக் கொள்ள முடியாது. வனவள திணைக்களமும் கால்நடைகளை மேய்க்க அனுமதித்துள்ளதால் அங்கு கால்நடைகளை மேச்சலிடச்செல்லும் பண்ணையாளர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கவேண்டும் - என்றார்.

இதனை ஏற்றுக்கொண்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பாதுகாப்பு வழங்க முன்வந்துள்ளார். (ச)

# மந்தமான காலநிலை; தேயிலை உற்பத்தி வீழ்ச்சி

நுவரெலியா, ஒக்.3

இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் ஒரு வளமாக தேயிலை உற்பத்தி காணப்படுகிறது.

ஆடை உற்பத்தி, சுற்றுலாத் துறை மற்றும் பணப்பரிமாற்ற சேவைகளைப் போன்று தேயிலையும் இலங்கைக்கு அதிக வருமானத்தைத் தரும் ஒரு துறையாகக் காணப்படுகிறது.

ஆனாலும், இந்த வருடத்துக்கான தேயிலை உற்பத்தி புள்ளி விவரங்கள் ஏமாற்றத்தைத் தந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எப்போதும் அதிக உற்பத்தி வெளியீடு கிடைக்கும் தேயிலை, இந்த வருடம் கடந்த வருடத்தைவிட உற்பத்தி அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

எது எவ்வாறு இருப்பினும் கடந்த ஒகஸ்ட் மாத புள்ளி விவரங்களின்படி அந்த எதிர்பார்ப்பு ஏமாற்றம் கண்டுள்ளதாகத் தேயிலை முகவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒகஸ்ட் மாத தேயிலை உற்பத்தியானது அதன் முன்னைய மாதத்திலும் பார்க்க 8 சத விகிதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளது.

அந்தக் கால கட்டத்தில் 24 மில்லியன் கிலோ கிராம் தேயிலையே உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

மலையில் உயரமான இடங்களிலும் மற்றும் மத்திய உயரத்திலுமான தேயிலை உற்பத்தி 20 சதவீதத்தால் வெகுவாகக் குறைவடைந்துள்ளது.

ஆனாலும், ஒட்டுமொத்த புள்ளி விவரங்களுக்கு மலைப் பிரதேசங்களின் கீழ்ப் பகுதிகளில் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை விளைச்சல் உதவியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக் காலங்களில் நிலவும் மந்தமான கால நிலையினாலேயே இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுவதாகச் சில நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையின் தேயிலையை இறக்குமதி செய்யும் நாடுகளில் மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் வட ஆபிரிக்கா முக்கிய பங்கு வகிக்கின்றன.. (ச)

# கோஷ்டி மோதல்; ஒருவர் காயம்

எட்டியாந்தோட்டை, ஒக்.3

எட்டியாந்தோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அலிவத்தைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அலிவத்தை பிரதேசத்தில் கடந்த வியாழக்கிழமை இரு குழுவினருக்கு இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது. இந்த மோதல் முற்றியதை அடுத்து அங்கு குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் தயாரிக்கப்பட்ட குண்டு ஒன்றே வெடிக்க வைக்கப்பட்டதாக எட்டியாந்தோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த நபர் கரவனெல்ல வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ச)



கடேற் பயிற்சியை நிறைவு செய்த மாணவிகளுக்கான விருது வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திருகோணமலை கடற்படைத் தளத்தில் நடைபெற்றது.இந்த நிகழ்வில் அணி வகுப்பு மரியாதை இடம்பெறுகின்றது.

# 'உடரட்ட மெனிக்கே' ரயிலில் பெட்டி கணினி வசதிகளுடன்

கண்டி, ஒக்.3

கண்டி - கொழும்பு 'உடரட்ட மெனிக்கே' ரயிலில் அதிசொகுசு வாய்ந்த பெட்டி ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை இணைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பெட்டி குளிரூட்டப்பட்டுள்ளதுடன் கணினி வசதி, சொகுசு ஆசனங்கள் உட்பட அனைத்து வசதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று ரயில்வே திணைக்களத்தின் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பெட்டியில் பயணிப்பதற்கான கட்டணம் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (ச)

# கழிவுத் தேயிலை விற்ற இருவர் கைது

கடுகண்ணாவ, ஒக்.3

கடுகண்ணாவ பிரதேசத்தில் நீண்ட காலமாக செயற்பட்டு வந்த கழிவுத் தேயிலை விற்பனை நிலையமொன்றை முற்றுகையிட்ட பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் இரு சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்கு என கடுகண் ணாவை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தேயிலை விற்பனை நிலையத்தில் இருந்து சுமார் 5,500 கிலோ கழிவுத் தேயிலை மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நாடு முழுவதும் இவ்வாறான கழிவுத் தேயிலை விற்பனை செய்யப்படுவது குறித்து தகவல் கிடைத்திருப்பதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# கிழக்கில் சுகாதார வாரம்; அமைச்சு நடவடிக்கை

மட்டக்களப்பு, ஒக்.3

கிழக்கு மாகாணத்தில் தேசிய சுகாதார வாரத்தை விரிவான முறையில் அனுஷ்டிக்க கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 10ஆம் திகதி வரை கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழுள்ள 120 வைத்தியசாலைகளிலும் சுகாதார வார நிகழ்வுகளாகப் பல்வேறு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ். சுபைரின் தலைமையில் நடைபெறவுள்ள சுகாதார வார நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளை அமைச்சின் செயலாளர் யூ.எல்.ஏ அஸீஸ், மாகாண மற்றும் பிராந்திய சுகா தார சேவைப் பணிப்பாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

திருகோணமலை, அம்பாறை, கல்முனை, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களிலுள்ள பிராந்திய சுகாதார சேவைப்பணிமனைகளுக்கு ஊடாக அவ்வப்பகுதி சுகாதார வார நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படவுள்ளன.

சுகாதார வாரத்தின் முதல் நாளான இன்று திங்கட்கிழமை மாகாணத்தின் 4 பிராந்திய சுகாதார சேவைப் பிரிவுகளையும் பிரதிநிதித்து வப்படுத்தும் அமைச்சர்கள் கலந்துகொள்ளும் சுகாதாரம் தொடர்பான நிகழ்வுகள் இடம்பெறும்.

நாளை செவ்வாய்க்கிழமை மாகாண சுகாதார அமைச்சர் தலைமையில் தெஹியத்த கண்டிய தள வைத்தியசாலை, சம்மாந்துறை தள வைத்திய சாலை, ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலை, கஞவாஞ்சிக்குடி, மூதூர் தள வைத்தியசாலை ஆகியவற்றில் சிரமதானப் பணிகள் இடம்பெறவுள்ளன.

நாளை மறுதினம் புதன்கிழமை டெங்கு ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகள் பாடசாலை மாணவர்கள் மத்தியில் மேற்கொள்ளப்படும்.

எதிர்வரும் ஆறாம் திகதி, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்வுகளும், ஏழாம் திகதி தொற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகளும் இடம்பெறும்.

எட்டாம் திகதி, ஆலயங்களில் சிரமதானப் பணிகள் இடம்பெறும்.

ஒன்பதாம் திகதி நுளம்பு ஒழிப்பு தினமாகப் பிரகடனப் படுத்தப்பட்டு அது தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பத்தாம் திகதி முன்னைய 7 தினங்களிலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மீளாய்வு செய்யப்படவுள்ளன. (ச)

# ஜெமீல் ஈரான் ஜனாதிபதியுடன் சந்திப்பு



மட்டக்களப்பு, ஒக்.3

கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இளைஞர் காங்கிரஸ் தேசிய அமைப்பாளருமான ஏ.எம்.ஜெமீல் ஈரான் ஜனாதிபதி மஹ்மூத் அஹமத் நஜாதியை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

பலஸ்தீன் தனி நாட்டுக்கான அங்கீகாரம் வழங்கல் தொடர்பான சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஈரான் சென்றிருந்த போதே அவர் ஈரான் ஜனாதிபதியைச் சந்தித்துள்ளார். (ச)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
செலவுகளைக் குறைக்க வேண்டிய நாள். எதிர்பாராத சில நிகழ்ச்சிகள் நடக்கலாம். ஆதாயமில்லாத அலைச்சல், திரிச்சல்களுக்கு ஆள்படலாம். உடல் உபாதைகளை எதிர்கொள்ளலாம். பொறுப்பில்லாமல் செயற்படும் பிள்ளைகளை நினைத்து மன வருத்தம் அடைவீர்கள்.

**இடபம்:**
பிறரை நம்பி எந்த காரியத்திலும் இறங்காமல் சுயமாகவே எல்லா வேலைகளையும் செய்ய முற்படுவீர்கள். பெண்களால் குடும்பத்தில் மகிழ்ச்சி, சந்தோஷம் அதிகரிக்கும். வெளியூர்களில் வசிக்கும் உறவினர் ஒருவர், உங்களின் வீட்டிற்கு வரலாம். கலகலப்பான அனுபவம் உண்டு. நண்பர்களுடன் கேளிக்கை, கொண்டாட்டம் உண்டு.

**மிதுனம்:**
தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். மூத்த சகோதரர்கள் வழியில், எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் பங்கேற்கலாம். உறவு பகை பாராமல் உதவிகள் செய்வீர்கள். அதிக சிரமத்தைக் கொடுக்கலாம் என்று நினைத்த காரியம் ஒன்று, சுலபமாக முடிவுக்கு வரலாம். தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**கடகம்:**
பிள்ளைகளின் அன்புத் தொல்லைகள் உண்டு. மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலை ஒன்று முடியாமல், அதை நீங்களே மீண்டும் செய்யலாம். நீண்ட நாள்களாகச் சந்திக்காத உறவினர் ஒருவரைச் சந்திக்கலாம். கனவுத் தொல்லையுண்டு. சிலருடன் சேர்ந்து வெளியூர் பயணங்கள் செல்லும் சூழ்நிலை உருவாகலாம்.

**சிங்கம்:**
மனதிற்கு உற்சாகம் தரும் செய்திகளைக் கேட்கலாம். வீண் வம்பு, விவகாரங்களில் இருந்து விடுபடுவீர்கள். மற்றவர்கள் கடினமாக நினைக்கும் வேலை ஒன்றை, நீங்கள் எளிதாகச் செய்து முடிப்பீர்கள். எதிர்காலம் பற்றிய கவலைகள் உண்டாகும். உறவினர் ஒருவர் தங்கள் வேலைக்காக உங்களையும் கூட்டிக் கொண்டு அலையலாம்.

**கன்னி:**
நீங்கள் செய்த உதவியை நினைத்துப் பார்த்து ஒருவர் நன்றியுடன் நடந்து கொள்ளலாம். மாமன், மைத்துனர்களின் பாச மழையில் நனைவீர்கள். காரியங்கள் அடுத்தடுத்து தடையின்றி நடப்பதால் மனதில், மகிழ்ச்சி, உற்சாகம் குடிகொள்ளும். மற்றவர்களுக்குத் தெரியாமல் ரகசியமாக சில காரியங்களைச் செய்வீர்கள் .

**துலாம்:**
உற்சாகம், தெம்பு குறைந்து சோம்பல் ஆள்கொள்ளும். பல நாள்களாக மேற்கொண்ட முயற்சி ஒன்றை திடீரெனக் கைவிட்டு விடலாம். நண்பர்கள் வழியில் பொருள் செலவுகளைச் சந்திக்கலாம். சிலருடன் ஆரோக்கியமான வாக்குவாதங்களில் ஈடுபடலாம். பிள்ளைகளின் செயற்பாடுகளைப் பற்றி மற்றவர்களிடம் பெருமை பேசுவீர்கள்.

**விருச்சிகம்:**
உறவினர்கள் கேட்ட உதவிகளைச் செய்து அவர்களின் அன்பைப் பெறுவீர்கள். சக ஊழியர்கள் சிலர் அவர்கள் வேலைக்காக உங்களைத் தேடி வரலாம். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெறலாம். கணவன், மனைவி இடையே பாசம் அதிகரிக்கும். பிள்ளைகளின் மனம் கோணாமல் நடந்து கொள்ள முற்படுவீர்கள். அனுகூலமான நாள்.

**தனுசு:**
வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். நினைத்த காரியங்கள் நடக்க வேண்டும் என, பிரார்த்தனை மேற்கொள்வீர்கள். மனக் குழப்பங்களைத் தவிர்க்க உங்கள் நலனில் அக்கறை கொண்டவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள். உங்களுக்குப் பிடித்த ஒன்று, மற்றவர்களுக்குப் பிடிக்காமல் போகலாம். வீட்டுத் தேவைகள் நிறைவேறும்.

**மகரம்:**
தொட்ட காரியங்கள் துளிர் விட்டு வளரும் நாள். வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். மனைவி விரும்பிய பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். சிலர் உங்களிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற்றி, பெருமை சேர்ப்பர். நண்பர் ஒருவருக்காக மற்றவர்களிடம் பிணை கொடுப்பீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும்.

**கும்பம்:**
உறவினர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகும். எதிர்பாராத பண வரவுகளுக்கு வாய்ப்புண்டு. மற்றவர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கைக் காட்ட முற்படுவீர்கள். நீண்ட நாள்களாக செல்லாத நண்பர் ஒருவரின் வீட்டிற்குச் செல்லலாம். சில வேலைகளுக்காக பல மணி நேரம் காத்திருக்கலாம்.

**மீனம்:**
வீண் பேச்சுக்களை, பரிகாச பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். பெண்கள் தொடர்பான விடயங்களில், விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். வாக்குக் கொடுத்த நண்பர் ஒருவர் கடைசி நேரத்தில், காலை வாரி விடலாம். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். உங்களுக்கு வேண்டிய ஒருவருக்காக மற்றவர்களிடம் உதவி கேட்கலாம். எதிர்பாராத சந்திப்பு உண்டு.

# மஹிந்
# கைப்பொ
# வீரவன்



வினையை விதைத்தவனின் வினையை அறுவடை செய்யலாம் என்று ஒரு போதும் எதிர்பார்க்க முடியாது. காலை வாருதல், காட்டிக் கொடுத்தல், ஆர்ப்பாட்டம் செய்து நாட்டைக் குழப்புதல் என்பனவற்றையே தமது அடிப்படை சித்தாத்தங்களாகக் கொண்ட ஜே.வி.பி. இன்று அதே நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும் என்பது போல் முன்பு யார் யாருக்கு எல்லாம் எதை எதை எல்லாம் செய்தார்களோ அவை எல்லாம் இன்று ஒட்டு மொத்தமாக அவர்கள் தலைமீதே விழுந்துவிட்டது. இதைத்தான் நாம் விதிப்பயன் என்கிறோம்.

இவர்களின் கடந்த கால செயற்பாடுகள் எவ்வாறு இருந்தன என்று நாம் சொல்லித் தெரிய வேண்டியது இல்லை.

1970 - 1971 களில் நாட்டில் ஜனநாயக அரசியலை ஒழித்துக்கட்டி ஆயுதத்தின் மூலம் நாட்டைக் கைப்பற்றுவோம் என்று கூறிக்கொண்டு ஆயிரம் ஆயிரம் இளைஞர், யுவதிகளின் உயிர்களை பலி கொடுத்ததுதான் மிச்சம்.

அரசின் தேசிய உடைமைகளை அழித்து ஒழித்து நாட்டில் ஒரு பொருளாதார சீர் குலைவை ஏற்படுத்தி அரசியலில் ஒரு ஸ்திரமற்ற நிலையை உருவாக்குவதே இவர்களுடைய நோக்கம்.

இதனை அடிப்படையாகக் கொண்டே நாட்டுக்கு நிரந்தரமான தேசிய வருமானத்தை தேடித் தரும் தேயிலை, இறப்பர் தொழிற்சாலைகளை சூறையாடிய பின் தீவைத்துக் கொளுத்தினர்.

அதோடு நின்று விடவில்லை. பல லட்சம் பேருக்கு தொழில் வாய்ப்புகளை வழங்கிக் கொண்டிருந்த பெரிய தொழிற்சாலைகளையும் சாம்பலாக்கினர்.

1983 ஆம் ஆண்டு தென்னிலங்கையில் உருவாக்கப்பட்ட இன வன்முறையின் போது கூட்டத்தோடு கூட்டமாக நின்று தமிழ் தொழில் அதிபர்களுக்குச் சொந்தமான தொழிற்சாலைகள், வர்த்தக நிறுவனங்கள், படமாளிகைகள், வீடுகள் என திட்டமிட்டு எரிக்கப்பட்டன.


இவர்களுடைய தமிழ் விரோத உணர்வின் உச்சக் கட்டமாக இந்திய எதிர்ப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தினர். இந்திய பொருள்களின் இறக்குமதியை கண்டித்தனர். பருப்பைக் கூட சாப்பிடக் கூடாது என்றனர்.

சக்தி மிக்க பொலிஸ், ஆயுத பலமிக்க முப்படைகள் இருக்கும் போதே ஒரு பஸ் டிக்கெட் அளவிலான துண்டுப் பிரசுரத்தின் மூலம் ஹர்த்தால் என்ற பெயரில் நாட்டையே ஸ்தம்பிதம் அடையச் செய்தனர்.

இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தது போல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதைக் கண்டித்து பௌத்த பிக்குகளுடன் இணைந்து ஆர்ப்பாட்டம் நடத்தி அரச பேருந்துகள், பஸ் டிப்போக்கள், தபாற் கந்தோர்கள் என அரச உடைமைகளை எரித்து அட்டகாசம் புரிந்தனர்.

தேர்தல் காலங்களில் மக்கள் பொதுவாகத் தமிழ் மக்கள் வாக்களிக்கக் கூடாது என்று அச்சுறுத்தியதோடு, அவர்களின் தேசிய அடையாள அட்டைகளையும் பறித்துத் தீ வைத்துக் கொளுத்தினர். இதனால் இன்றும் பல ஆயிரம் தோட்டத் தொழிலாளர்கள் மீண்டும் அடையாள அட்டைகளைப் பெற முடியாமல் இருக்கின்றனர்.

இவர்களால் கொன்று குவிக்கப்பட்ட ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள், வைத்தியர்கள் மற்றும் பேராசிரியர்களின் பட்டியல் மட்டுப்படுத்த முடியாதவை.



இவற்றைப் பின்னணியாகக் கொண்ட ஜே.வி. பியினர் றோகண விஜயவீரவின் அழிவுக்குப் பின் அரசியலில் காலடி எடுத்து வைத்தனர். அப்போது லண்டனில் இருந்தே இன்றைய தலைவர் சோமவன்ச கட்சியை இட்டுச் சென்றார்.

றோகண விஜயவீரவுக்குப் பின் கட்சி இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்ட போது கட்சிக்குச் சொந்தமான பல கோடி ரூபா பெறுமதியான தங்கத்துடன் நாட்டை விட்டு ஓடியவர் தான் இந்த சோமவன்ச.

இவருக்கும் அப்போதைய செயற்குழு மரண தண்டனை விதித்து இருந்தமையும் சுட்டிக் காட்டப்பட வேண்டிய ஒன்று.

அரசால் தேடப்பட்டவர்களுள் ஒருவரான இந்த சோமவன்ச ஐக்கிய தேசியக் கட்சியின் தோல்வியின் பின் நாட்டுக்குள் காலடி எடுத்து வைத்தார்.

ஜே.வி.பியின் தலைமை யார் கையில் இருந்தாலும் அதனை ஆட்சிக்கும் பல மிக்க சக்தியாகவும் பிரசார செயலாளராகவும் இருந்து கொண்டு நடத்தியவர் விமல் வீரவன்ச.

இன்று சந்திரிகா அம்மையாருடன் ஒப்பந்தம் செய்வார். நாளை மறுதினம் மஹிந்த ராஜபக்ஷவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு உடன்படுவார். ஆனால் எந்த ஓர் உடன்படிக்கைகளிலும் இவர் மட்டும் கை ஒப்பம் இடமாட்டார். இவர் காட்டிய இடத்தில் மற்றவர்கள் கை ஒப்பம் இட்டு மாட்டிக் கொண்டது என்னவோ உண்மை. இன்று அவர்களே கூறுகின்றனர்.

தீவிர இனவாத போக்குடைய பொரும்பான்மை இனத்தவர்களின் ஆதரவையும். பெருபான்மை இன இளைஞர், யுவதிகள் குறிப்பாக பல்கலைக்கழக சமூகத்தினரின் ஆதரவையும் தம்வசம் வைத்திருந்த ஜே.வி.பியினர், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும் சிம்ம செப்பனமாகவே இருந்தனர்.

# ந்தவின் ம்மையா ன்ச...?

**கட்சியைக் கைப்பற்றுவது யார், கட்சிக் கட்டடத்தைக் கைப்பற்றுவது யார் என்ற போட்டி கைகலப்பாகி பொலிஸ் நிலையம் வரை பிரச்சினை போய்விட்டது.**




சந்திரிகா அம்மையார் தனது சாதுரியத்தால் ஜே.வி.பியினரை தன்வசப்படுத்தினார். பதவிக்கு வந்து ஆறு மாத காலத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பேன் என்று உத்தரவாதம் அளித்து ஜனாதிபதி தேர்தலில் இருந்தே ஜே.வி.பியினரை வாபஸ் பெறச் செய்து காரியத்தைச் சாதித்துக் கொண்டார் சந்திரிக்கா அம்மையார்.

ஆனால் சந்திரிகா அம்மையார் தொடர்ச்சியாக இரண்டு தடவைகள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவி வகித்து வந்த போதும் கூட இந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பது தொடர்பாக நினைத்துக் கூட பார்க்கவில்லை. ஜே.வி.பியினரும் தமக்கு கிடைத்த இரண்டு அமைச்சுப் பதவிகளையும் பிரதி அமைச்சர் பதவிகளையும் வாங்கிக் கொண்டு மௌனமாகிவிட்டனர்.

அன்று ஜே.வி.பியின் பிரசார செயலாளராகச் செயற்பட்ட விமல் வீரவன்ச தான் கிங் மேக்கராகத் தான் இருப்பேனேயன்றி கிங் ஆக விரும்புபவனல்ல என்றும் தனக்கு பதவி மோகம் இல்லை என்றும் தம்பட்டம் அடித்துக் கொண்டு அமைச்சுப் பதவிகள் எதையும் பெற்றுக் கொள்ளவில்லை.

ஜே.வி.பியினரின் ஒரே நோக்கம் தனக்கு இரண்டு கண்களும் போனாலும் பரவாயில்லை எதிரிக்கு ஒரு கண்ணாவது போக வேண்டும் என்ற நிலைதான்.

யார் வந்தாலும் பரவாயில்லை ஐக்கிய தேசியக் கட்சி மட்டும் ஆட்சி அதிகாரத்துக்கு வந்துவிடக் கூடாது என்பதில் தான் குறியாக இருந்தனர்.

சந்திரிகாவுக்குப் பின் மஹிந்த ராஜபக்ஷவுடன் கூட்டாட்சி அமைத்தனர். மஹிந்த சிந்தனையை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரை விட வீடு வீடாகக் கொண்டு சென்று மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கிய பெருமை ஜே.வி.பினரையே சேரும்.

ஆனால் எவ்வளவு காலத்துக்குத் தான் ஜே.வி.பியினரைக் கண்டு ஒதுங்குவது. அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என படிப்படியாக காய் நகர்த்தினார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

அரசியல் புலிகளான ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ஆர்.பிரேமதாச, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க, சந்திரிகா குமாரதுங்க ஆகியோரால் முடியாத ஒரு காரியத்தை செய்து சாதனை படைத்தார்.

ஜனாதிபதி ராஜபக்ஷ நாட்டுக்குள் குழப்பத்தை ஏற்படுத்தி ஜே.வி.பியை இரண்டாக்கி விமல் வீரவன்ச கேஷ்டியினரை அரசின் பக்கம் இழுத்துக் கொண்டார்.

பதவி மேல் ஆசையோ, அதிகார மோகமோ இல்லை என்று ஜம்பம் பேசிக் கொண்டிருந்த விமல் வீரவன்சவுக்கு பலம் மிக்க அமைச்சுப் பதவி ஒன்றைக் கொடுத்து தனது கைப் பொம்மையாக்கிக் கொண்டார் ஜனாதிபதி. இன்று நாடாளுமன்றத்திலும் வெளியிலும் ஜனாதிபதியின் பிரசார பீரங்கியாக இருப்பவர் விமல் வீரவன்ச தான்.

இரண்டாகப் பிரிந்த ஜே.வி.பி. இன்று மேலும் இரண்டாகப் பிளவு பட்டு விட்டது. இவர்களுள் ஒரு பிரிவினருக்கு அரசினதும் அமைச்சர் விமல் வீரவன்சவினதும் ஆதரவு பின்நின்று செயல்படுவதாகவும் செய்திகள் கசிந்து வெளிவந்துள்ளன.


கட்சியை கைப்பற்றுவது யார், கட்சிக் கட்டடத்தைக் கைப்பற்றுவது யார் என்ற போட்டி கைகலப்புகளுக்குப் போய் பொலிஸ் நிலையம் வரை போய்விட்டது. யாரை யார் பதவியில் இருந்து தூக்குவது என்று சவால் விட்டுக் கொள்கின்றனர். யாராலுமே அசைக்க முடியாது என்ற இறுமாப்புடன் இருந்த ஜே.வி.பியின் நிலை இன்று சந்தி சிரிக்க வைத்துள்ளது.

இவர்கள் கடந்த காலங்களில் எத்தனை பேரை வேதனைப்படுத்தினார்கள். எத்தனை பேரை கண்ணீர் விட வைத்தனர். எத்தனை அரசியல்

**■ இரா. புத்திரசிகாமணி**

கட்சிகளுக்கு ஆப்பு வைத்தனர். அவர்கள் துன்பப்பட்ட போது இவர்கள் ஆனந்தப்பட்டனர்.

கடவுளின் சாபம் பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணீர் இன்று ஜே.வி.பியினருக்கு நல்லதொரு பாடத்தைப் புகட்டிவிட்டது. இப்போதாவது உணர்வார்களா இவர்களால் மற்றவர்கள் அடைந்த வலியை. ✱



## விருந்தாளியை விரட்டுங்கள்



ஓர் ஊரிலே ஒரு குருநாதர் இருந்தார். அவருக்கு இரண்டு சீடர்கள். இரண்டு பேரும் ஆரம்பத்தில் நல்லவிதமாகத்தான் இருந்தார்கள். காலப்போக்கில் இரண்டு பேருக்குள்ளும் ஒரு போட்டி உருவாகத் தொடங்கியது. குருநாதரிடம் நல்ல பெயர் வாங்கவேண்டும் என்று விரும்பினார்கள்.

அப்படி விரும்பியதில் தவறொன்றுமில்லை. ''நான் நல்ல பெயர் வாங்க வேண்டும்'' என்று ஒரு சீடன் விரும்பினான்.

''நான் நல்ல பெயர் வாங்கினால் மட்டும் போதாது. அடுத்தவன் கெட்ட பெயர் வாங்க வேண்டும்!'' என்று இன்னொரு சீடன் விரும்பினான். இங்கேதான் பிரச்சினை ஆரம்பம்.

ஒரு நாள் அதிகாலையில் எழுந்து குருநாதரிடம் போய் முன்னால் நின்றான். அவர் நிமிர்ந்து பார்த்தார். இவன் பேச ஆரம்பித்தான்.

''சுவாமி! என்னைப் பாருங்கள்.. நான் நேரத்துக்கு எழுந்து குளித்து முடித்துவிட்டு தங்களை வணங்குவதற்காக வந்திருக்கிறேன். ஆனால், அவன்... இன்னமும் கண் விழிக்கவே இல்லை... தூங்கிக் கொண்டே இருக்கிறான்!'' இந்தக் காலத்தில் 'போட்டுக் கொடுக்கிறது' என்று ஒரு வார்த்தை உபயோகத்தில் இருக்கிறது அல்லவா? இதைத்தான் அந்தச் சீடன் செய்தான்.

இவனுடைய முறைப்பாட்டைக் கேட்டுவிட்டு அந்தக் குரு, ''அப்படியா? அப்படியென்றால் நீயும் கூட அவனை மாதிரியே தூங்கியிருக்கலாமே! அப்படி நீ தூங்கியிருந்தால் நன்றாக இருந்திருக்குமே..' முறைப்பாடு சொன்னவனுக்கு ஒன்றும் புரியவில்லை. குழம்பிப் போனான்.

'என்ன இது. நாம் எவ்வளவு தீவிரமாக ஒரு செய்தியைச் சொல்லுகிறோம். அதுக்கு எங்களது குரு சிறிதும் அலட்டிக்கொள்ளாமல் இப்படி சொல்றாரே..' என்று தனக்குள் நினைத்துக் கொண்டான்.

ஆச்சரியமாக அவரைப் பார்த்தான்.

அவர் சொன்னார்.

''ஆமாம்... நீயும் தூங்கிக்கொண்டு இருந்திருந்தால் அடுத்தவனைப் பற்றிக் குறை சொல்வதற்காக இங்கே வந்திருக்க மாட்டாய் அல்லவா? அதனால்தான் அப்படிச் சொன்னேன்!''

சீடன் சிந்திக்கத் தொடங்கினான்.

தனக்குள்ளே தேவையில்லாத ஒரு விருந்தாளி வந்து உட்கார்ந்து கொண்டிருப்பது அவனுக்குப் புரிந்தது. அந்த விருந்தாளியின் பெயர் 'பொறாமை' உடனே அந்த் விருந்தாளியை விரட்டியடித்தான். அவன் மனம் சுத்தமாயிற்று.

இவரைப் போலவே இன்னொரு விருந்தாளி இருக்கிறார். அவரும் அதிகமாக நமக்குள்ளே வந்து உட்கார்ந்து கொண்டு உபத்திரவம் கொடுப்பார். அவர் பெயர் 'கோபம்' அவரும் விரட்டப்பட வேண்டிய ஒருவர் தான்.

கோதாவரி நதிக்கரையிலே ஒரு பெரியவர் இருந்தார். தினமும் ஆற்றில் நீராடிவிட்டு வருவது அவர் வழக்கம்.

ஒரு நாள் அவர் குளித்துவிட்டு திரும்பி வந்து கொண்டிருக்கிறார்.

வழியில் ஒரு மரத்தின் மீது உட்கார்ந்திருக்கும் ஒருவன் அவர் மீது எச்சிலைத் துப்பிவிடுகிறான். இவர் உடனே திரும்பிப் போய் மறுபடியும் குளித்துவிட்டு வருகிறார்.

அவன் மறுபடியும் துப்புகிறான். இவர் கோபப்படவே இல்லை. பொறுமையாகத் திரும்பிப் போய் மறுபடியும் குளித்துவிட்டு வருகிறார்.

இப்படியாகப் பல தடவை நடக்கிறது. அவரும் பொறுமையாக மறுபடியும் மறுபடியும் குளித்துவிட்டு திரும்பி வருகிறார்.

இவன் பொறுமை இழந்து போனான்.

தோற்றுப்போய் அவர் காலடியில் வந்து விழுந்தான்.

''ஐயா அது எப்படிங்க...?''

''எது... எப்படி...?''

''நீங்க கோபப்படாமலே இருக்கிறீங்களே, அது தான் எப்படி...?''

''நான் கோபப்பட்டிருந்தால் என் மனசு அசுத்தமாயிருக்கும். உடம்பு அசுத்தமானால் குளித்துச் சுத்தப்படுத்திக் கொள்ளலாம். மனசை அப்படி சுத்தப்படுத்த முடியாதே.''

காலில் விழுந்தவன் கண்களில் நீர்!

ஆன்மிகப் பயணம் என்பது ஆற்றை நோக்கிப் போய் அமிழ்ந்து குளித்துவிட்டு வருவது மட்டுமல்ல...!

புண்ணிய நதிகளில் நீராடும் போது உடல் மட்டுமல்ல, மனமும் சுத்தமாக வேண்டும்! நமக்குள்ளேயிருக்கிற தீண்டாத விருந்தாளிகளுக்கு விடைகொடுத்து அனுப்ப வேண்டும். அப்போதுதான் ஆன்மிகப் பயணம் வெற்றிபெறும். இன்னொரு விருந்தாளி இருக்கிறார். அவர் பெயர் சுயநலம்.

ஒரு சுயநலவாதி ஆற்றிலே விழுந்துவிட்டார். சுழலில் சிக்கிக் கொண்டார். இன்னொரு சுயநலவாதி கரையிலே இருந்து இதைப் பார்த்தார். உடனே ஒரு கயிற்றைத் தூக்கி ஆற்றில் வீசினார்.

''அந்தக் கயிற்றைப் பிடித்துக் கொள்!'' என்றார்.

அவர் பிடித்துக் கொண்டார். இவர் கயிற்றை இழுத்தார். அவர் கரைக்கு வந்து சேர்ந்தார்.

காப்பாற்றியவரை நன்றியோடு பார்த்தார். அதன்பின் சொன்னார்.


''என்னைக் காப்பாற்றியதற்காக உங்களுக்கு 50 ரூபா கொடுக்கலாம் என்று பார்க்கிறேன். ஆனால் என்னிடம் ஒரு ரூபாதான் இருக்கு. அதுதான் யோசிக்கிறேன்...!'' இதற்கு அவர் சொன்னார். ''அதுக்காக கவலைப் படாதீங்க... அதுக்கு நான் ஒரு யோசனை சொல்றேன்...!'' ''சொல்லுங்க''

''நீங்க இன்னொரு தடவை தண்ணியிலே விழுந்துடுங்க. நான் காப்பாற்றுறேன். ஒரு ரூபாயாக கொடுத்துவிடலாம்!''

**கோ.சுவாமிநாதன்**

உதயன்
03 ஒக்ரோபர் 2011 திங்கட்கிழமை

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற 13 மாணவர்கள் பாடசாலை அதிபர் ஆசிரியர்களுடன் உள்ளனர். (ம–207)



# தொற்றுநோய்களில் இருந்து எம்மைப் பாதுகாக்க சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்

## பொது சுகாதாரப் போதனாசிரியர் கருத்து

யாழ்ப்பாணம், ஒக்.3

பொதுமக்களின் சுகாதார நலனுக்காக இடம்பெறும் சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கைகளை ஓரளவேனும் மக்கள் நடைமுறைப்படுத்தினால் தொற்று நோய்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

மாறாக இவற்றை அசண்டையீனமாக இருந்து விட்டால் சுகாதாரமற்ற சமுதாயம் உருவாகுவதுடன் பிரதேசத்தின் சுகாதாரமும் பாதிப்படையும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பயிற்சி நிலைய பொதுச் சுகாதாரப் போதனாசிரியர் கணேசன் சதீஸ்.

யாழ்.சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் விலங்கு விசர் நோய் தினத்தை முன்னிட்டு தியாகிகள் அறக்கொடை நிலையத்தில் இடம்பெற்ற விழிப்புணர்வுக் கருத்தரங்கு நிகழ்வில் வரவேற்புரை வழங்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது தெரிவித்ததாவது:

விலங்கு விசர் நோய் மிகவும் அபாயகரமான நோய்ப் பட்டியலில் இடம்பிடித்துள்ளது. இது மனிதனின் நரம்புப் பகுதியைச் செயலிழக்கச் செய்வதால் இதற்குச் சிகிச்சைகள் எதுவும் கண்டுபிடிக்கவில்லை. நோயால் பாதிப்படைந்த ஒருவர் 100 வீதமாக மரணத்தைச் சந்திக்க நேரிடும்.

வருடாவரும் 56,000 பில்லியன் மக்கள் நோயால் பாதிப்படைவதாகவும் 55,000 பேர் உலகளாவிய ரீதியில் இறப்பதாகவும் உலக சுகாதார திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் நோயால் பாதிப்படையும் பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு சுகாதாரத் திணைக்களத்திடம் உள்ளது.

இதற்காகப் பிரதேச ரீதியாக வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

யாழ். மாவட்டத்தில் விலங்கு விசர் நோய் ஓரளவேனும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தாலும் அதனை மீளவும் உருவாக விடாமல் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

பொதுமக்கள், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்ப நலத் தாதியர்கள் கூறும் விழிப்புணர்வுக் கருத்துக்களை செவிமடுத்து அதனை நடைமுறைப்படுத்த வேண்டும். எதிர்காலத்தில் ஆரோக்கியமான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பும் எம்மிடம் உள்ளது. - என்றார். (ம-313)

# தமிழர்களின் கலாசாரம் பேணப்பட வேண்டும்

## நல்லை ஆதீன குருமுதல்வர் உரை

யாழ்ப்பாணம், ஒக்.3

தமிழர்களின் கலாசாரம் நாடளாவிய ரீதியில் பேசப்படுவதால் சகல மதம் சார்ந்தவர்களும் தமது மதக் கலாசாரங்களையும் தமிழர்களின் கலாசாரங்களையும் பாதுகாக்க வேண்டும்.

கலாசாரத்தை பேச்சளவில் மட்டும் இல்லாமல் நடைமுறையிலும் அதனைப் பின்பற்ற வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.

நல்லூர் பிரதேச செயலகத்தின் கலாசார பேரவையின் ஏற்பாட்டில் வெள்ளிக்கிழமை நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் இடம்பெற்ற கலாசார விழாவில் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது அவர் தெரிவித்ததாவது:

தமிழர்களின் கலாசாரத்தை பிரதிபலிக்கும் கலாசார விழாக்கள் பிரதேசங்கள் தோறும் கொண்டாடப்பட வேண்டும். ஏனெனில் தமிழர்களின் கலாசாரம் உயர்ந்த பண்புகளையும் சிந்தனைகளையும் கொண்டது. அத்துடன் நடை, உடை, பாவனை அனைத்தும் தனித்துவமானதாக உள்ளன.

புராதன காலத்தில் பல தமிழ் மன்னர்கள் ஆட்சி செய்த பெருமையையும் யாழ். மாவட்டம் பெறுகிறது.

இத்தகைய புனித பூமியில் பேணப்பட்டு வந்த கலாசாரங்களை சமூகத்துக்கு எடுத்துக் காட்டுவதற்கும் இத்தகைய விழாக்கள் முன்னுதாரணமாகும்.

தற்போது யாழ்.மாவட்டத்தில் பழைமை வாய்ந்த இசைகள் மறைந்து போய்க் கொண்டிருக்கின்றன.

அத்துடன் பிரதேசங்கள் ரீதியாகக் கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தர்கள் கடமையில் மட்டும் நின்று விடாது கலைகளை ஊக்குவித்து இசைக்கு முக்கியத்தவம் கொடுத்து கலைஞர்களைப் பங்கு பெறச் செய்ய வேண்டும்.- என்றார். (ம-313- 7)

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் சில

**வட்டக்கச்சி மகா வித்தியாலயம்**

ப.கேதாரகன் -158, தி.நிலாபவன்- 153, ந.பவித்திரன்- 153, க.திகழினி- 152, கி.சுஜீத்தனன்- 148.

**மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம்**

பு.பிருந்துதி- 181, க.டிலக்ஷன்- 177, செ.கயானன்- 166, பு.பிருத்திகா- 166, சி.தரண்யா- 164, க.விஷ்ணுவர்த்தனன்- 164, சி.அபிராமி- 157, க.ஜனார்த்தனன்- 157.

**கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம்**

- சி.டிலக்ஷனா- 170, க.சுபாங்கி- 165, ச.நிதுர்ஷன்- 160, கி.தனுரதன்- 152.

**மானிப்பாய் விவேகானந்தா**

கஜலக்ஷி கிருபானந்தன்- 187, சிவகுமார் சிவசொருபன்- 169, இராஜராஜேஸ்வரன் கோவர்த்தனன்- 168, நாகராசா அனுசன்- 167, விதுசனா நிர்மலேஸ்வரன்- 157, சாளினி இரத்தினசிங்கம்- 151.

**நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்**

த. நிதர்சன்- 159.

## பிரிவுபசார நிகழ்வு

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளராக 10 வருடங்களுக்கு மேல் ஒட்டுசுட்டான் மக்களுக்கு சேவையை மேற்கொண்டு மாற்றலாகிச் செல்லும் திருமதி சுபாஜினி மதியழகனுக்குப் பிரதேச செயல கத்தில் கிராம சேவையாளர்கள் உட்பட அனைத்துப் பணியாளர் களும் இணைந்து பிரிவுபசார நிகழ்வை நடத்தியுள்ளனர். (ம-500)

## துரித கணிதச் செய்கை போட்டி வெற்றியாளர்

தீவக கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட வலயமட்ட ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான துரித கணிதச் செய்கைப் போட்டியில் காரைநகர் ஊரி அ.மி.த.க. பாடசாலை மாணவர்கள் மூன்று முதல் இடங்களையும் ஒரு மாணவன் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர். தரம்- 5 முதலாம் இடம் சு.விதுசன், தரம்- 4 முதலாம் இடம்- ச. ஜோன், தரம்- 2 முதலாம் இடம் ச. கனிஷ்டன் ஆகியோருடன் தரம்-3 மாணவன் து. சுகிர்தன் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார். (ம-250)

# பரீட்சைகளில் வெற்றியடைய பாடசாலை வேறுபாடுகள் இல்லை

## புலமைப்பரிசிலில் யாழ்.மாவட்டத்தில் இரண்டாமிடம் பெற்ற மாணவி கவினா கூறுகிறார்



தென்மராட்சி,ஒக்.3

எந்தவொரு பாடத்தையும் விருப்புடன், ஆர்வத்துடன் கற்றால் மனதில் பதித்து விடும். அப்படிப் பயின்றால் பரீட்சைகளில் வெற்றி நிச்சயம்.

இதற்குப் பாடசாலை வேறுபாடு தேவையில்லை. ஒவ்வொரு மாணவரும் தான் கற்கும் பாடங்கள் தான் முக்கியமே தவிர பாடசாலைகள் அல்ல.

இந்த எண்ணம் ஒவ்வொரு மாணவரின் மனதில் இருந்தால் கிராமப்புறப் பாடசாலைகளிலும் மாணவர்கள் சித்தி பெறலாம்.

நான் ஒரு மருத்துவராகி இந்த சமூகத்துக்கு சேவையாற்ற வேண்டுமென்பது எனது ஆசை. மருத்துவத்துறையை படிப்பதற்கு வேறொரு பிரபல பாடசாலையில் செல்லாமல் இந்தப் பாடசாலையில் கற்றுப் பல்கலைக் கழக மருத்து வத்துறைக்குச் செல்ல வேண்டுமென்பதும் எனது ஆசை.

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் வகை 1ஏபி பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளதால் இந்தப் பாடசாலையிலிருந்து பல்கலைக் கழகம் செல்வேன்.

கடந்த ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் இரண்டாம் இடத்தையும் தென்மராட்சி கல்வி வலயத்தில் முதலிடத் தையும் பெற்ற மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய மாணவி கனகேஸ்வரன் கவினா இவ்வாறு தெரிவித்தார்.

படிக்கும் நேரத்தை வீணடிக்காமல் கற்றதால் மாவட்டத்தில் இரண்டாம் இடத்தை பரீட்சையில் பிடிக்க முடிந்தது.

இந்த நிலையை அடைய எனது பெற்றோர், பெரியம்மா, எமது வகுப்பாசிரியர் செ. சின்னத்துரை, வித்தியாலய அதிபர், தனியார் கல்வி நிலைய ஆசிரியர் தவயோகராசா பெரிதும் உறுதுணையாக இருந்தனர்.

எனது தந்தை வடமாகாண உதவித் தொழில் ஆணையாளராகவும் தாய் ஆசிரியராகவும் உள்ளனர்.

எனது சகோதரி ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று இந்த வித்தியாலயத்தில் தொடர்ந்து கற்று வருகின்றார்.

அவரைப் போலவே நானும் இந்த வித்தியாலய வளாகத்தில் தொடர்ந்து கற்கவுள்ளேன்.- என்றார். (ம-207)

# சிரமங்களை எதிர்கொள்ளும் மீளக்குடியமர்ந்த மக்கள்!

அண்மையில் தமது சொந்தக் காணிகளில் மீளக் குடியமர்ந்த குடும்பங்கள் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றன. மீளக்குடியமர்வதற்குச் சென்ற மக்கள் தமது காணிகளுக்குள் செல்ல முடியாத அளவுக்கு பற்றைக் காடுகளும் பெரிய மரங்களும் வளர்ந்திருப்பதால் மீளக் குடியமர்தலை உடனடியாக மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர் அவர்கள்.

வெடி பொருள்கள் அகற்றும் பணிகள் இடம்பெற்றதால் காணி முழுமையாக துப்புரவு செய்யப்பட்டிருக்கும் என்ற நம்பிக்கையில் சென்ற மக்கள் தமது காணிக்குள் கால் வைக்கக் கூட முடியாத அளவுக்கு பற்றைகளும் செடிகளும் மூடியிருந்ததால் வீதியில் நின்று காணிகளைப் பார்த்து விட்டுத் திரும்பியுள்ளனர்.

பற்றைக்காணியாக உள்ள காணியை துப்புரவு செய்வதற்கு ஆயிரக்கணக்கான ரூபா கூலி கொடுத்து செய்ய வேண்டியுள்ளது.

வெடி பொருள்கள் அகற்றும் பணிகள் நடைபெறுவதாக அறிவிக்கப் பட்டிருந்ததால் தமது காணியில் வெடிப் பொருள்கள் அகற்றப்பட்டிருக்கு மென்ற நம்பிக்கையில் சென்ற மக்கள் அங்குள்ள நிலையைப் பார்த்த பின்னர் ஒரு சந்தேக நிலையை தோற்றியுள்ளது.

கற் பூமியில் பெருமளவில் வளரும் மஞ்சள், உணா மரங்களாகி காணிகளை காடுபோல் வைத்துள்ளன. இவற்றுடன் நாயுருவி பற்றைகளும் முட் செடிகளும் நிறைந்து காணிக்குள் கால் வைக்க முடியாத அளவுக்கு காணப் படுகின்றன.

காணியை முழுமையாகத் துப்புரவு செய்ய குறைந்தது ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 50 ஆயிரம் ரூபாவுக்கு குறையாத அளவுக்கு செலவிட வேண்டியுள்ளது.



கடந்த 15 வருடங்களுக்கு மேலாக பாவனையில் இல்லாத கிணறுகள் பல்வேறு நிலையில் இருக்குமென எதிர் பார்க்கப்படுகின்றது. வலி.வடக்குப் பிரதேசத்தைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு கிணறும் மிக ஆழமானவை. காணிகள் துப்புரவு செய்த பின்னர் கிணறுகள் துப்புரவு செய்யப்பட வேண்டும்.

பெருமளவு காணிகளில் குண்டுகள் வீழ்ந்தமைக்கு ஆதாரமாக பெரிய குழிகள் காணப்படுகின்றன. இந்த நிலையில் கிணறுகளின் நிலை தெரியாத போதிலும் அவை துப்பரவு செய்வதற்கு பெருமளவு நிதி தேவைப்படுமென மக்கள் தெரிவிக்கின்றனர்.

காணிக்குள் எந்தவொரு கட்டடங்களும் காணப்படவில்லை. அவற்றில் மலகூடங்களும் அடங்கும். தமது சொந்த இருப்பிடங்களில் மீளக்குடியமரச் செல்லும் மக்கள் முதலில் பல ஆயிரம் ரூபாவை முதலீடு செய்தே குடியமர வேண்டிய நிலையில் உள்ளனர்.

சுமார் பதினைந்து வருடங்களுக்கு மேலாக மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதிகள் விஷ ஜந்துகளின் நடமாட்டம் பல்கிப் பெருகியிருக்கும். மீளக் குடியமரும் மக்கள் இவைகளின் தாக்குதலில் இருந்தும் தப்பிக்க வேண்டிய பல்வேறு பாதுகாப்புகளை ஏற்படுத்த வேண்டியுள்ளது.

காடுகளில் வளரும் விஷஜந்துகள் நீண்ட காலமாக இந்தப் பகுதிகளில் ஏக போக வாழ்க்கை வாழ்ந்துள்ளதால் இவற்றினால் மீளக்குடியமரும் மக்களுக்கு பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புண்டு.

அண்மையில் மீளக்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட அரியாலைப் பகுதியில் காட்டில் வாழும் வெங்கணாந்திப்

■ தென்னவன்

பாம்புகள் பிடிபட்டமை உதாரணமாகும்.

மீளக் குடியேறும் குடும்பங்களில் ஒரு சிலருக்கு மட்டுமே கூரைத் தகரங்கள் வழங்கப்பட்டு உள்ளன. வீடமைப்புத் திட்டங்களில் இவ்வாறான குடும்பங்களே தெரிவு செய்யப்படுவர். இந் நிலையில் ஏனையோர் தமக்கு ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியை எவ்வாறு எதிர் கொள்வது என்பது பற்றி யோசிக்கின்றனர். ✱

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
21 ☆ 07 ☆ 1949

ஆண்டவன் அடியில்
24 ☆ 09 ☆ 2009



அமரர் சுப்பையா நாகராசா

திதி: பூர்வ பக்க சப்தமி. (03.10.2011)

குடும்பமென்ற விருட்சத்தின் ஆணிவேராய்
கொண்ட மனையாளுக்கு நற்கணவராய்
பெற்றெடுத்த பிள்ளைகளுக்கு பாசமிகு அப்பாவாய்
பரிவும் நேசமும் பொழிந்தெம்மை
வாழ்வில் உயரவைத்த எம் அப்பாவே
நீர் இட்ட அடித்தளத்தில் உருவானதே
இன்று நாம் வாழும் இல்வாழ்க்கைக் கோபுரம்
உமைப் பிரிந்து ஈராண்டு ஓடி மறைந்தாலும்
உம் நினைவு எம் மனதில்
என்றென்றும் நிலைத்திருக்கும்.

உங்களது ஆத்மா சாந்திபெற அருளுமாறு
எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல. 484, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

காணி விற்பனைக்கு

ஊரெழு கிழக்கில் வீட்டுடன் அமைந்த காணி 7¾ பரப்பு விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை)

தொடர்பு: 0729664616,0757417536

தவறிவிட்டது அராலி கிழக்கு, வட்டுக்கோட்டை என்னும் முகவரியுடைய நடராசா கிருஷ்ண குமார் என்பவருடைய தேசிய அடையாள அட்டை இலக்கம் (761681080V) மற்றும் வாகன சாரதி அனுமதிப்பத்திரம், மோட்டார் சைக்கிள் காப்புறுதி வரி பத்திரம் அடங்கிய பேர்ஸ் அரியாலை, நல்லூர் வீதியூடாக அராலிக்கு இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டவர்கள் தயவுசெய்து தொ.பேசி 0779900080 உடன் தொடர்புகொள்ளவும்.

ஆசிரியர் வே. அன்பழகன் அவர்களின் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை - 2012 தரம்- 4 வகுப்பு (தற்போது தரம்-3) ஆகியன ஆரம்பமாகின்றன.

யாழ்ப்பாணத்தில்
அன்பொளி கல்வியகம்
யாழ்.இந்துக் கல்லூரி வீதி
யாழ்ப்பாணம்.

சாவகச்சேரியில்
அன்பொளி
கல்விநிலையம்
[illegible] வீதி, சாவகச்சேரி.

அனுமதிகளை 08.10.2011 இற்கு முன்னதாக உடன் பெற்றுக் கொள்ளவும்.

இயக்குநர்.

முதலாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணுலகம்:
17.07.1947

விண்ணுலகம்:
15.10.2010



திருமதி
இராசரத்தினம் இராஜேஸ்வரி

திதி: தசமி (03.10.2011)

கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.
இணுவில் தெற்கு,
பாலாவோடை, சுன்னாகம்.

என்றென்றும் எம் இதயத்தில்
குடியிருக்கும் நீ எம் தாயே...
என்றென்றும் எங்கள் நினைவால்
பிரிக்க முடியா நாங்கள் உன் சேயே...

எங்கள் உணர்வும் உயிர்த்துடிப்பும் நீயே..
என்றென்றும் எம் உயிரில் கலந்து காக்கும்
தெய்வமும் நீயே...
ஆண்டவன் பாதம் தேடிச் சென்ற உன் ஆத்மா,
அமைதியாய் உறங்க ஆண்டவனை நாம்
பிரார்த்திக்கின்றோம்.

# மனமகிழ் தினவிழா

தென்மராட்சி, ஒக்.3

வரணி இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலய மனமகிழ் தின விழா அண்மையில் நடைபெற்றது.

விழாவுக்கு விருந்தினராக தென் மராட்சி கல்வி வலய கணித பாட ஆசிரிய ஆலோசகர் சி.பத்மநாதன் கலந்து கொண்டு நிகழ்வுகளை ஆரம் பித்து வைத்தார்.

மேடைநிகழ்வு, களநிகழ்வு என இரு பிரிவுகளாக இடம் பெற்றன. மேடை நிகழ்வுகளாக ''நாளை நான் என்னவாக வருவேன்'' என்ற கற்பனை நிகழ்வும், பாடல்கள், நகைச் சுவைகள், நாடகங்கள் நடனங்கள் போன்ற நிகழ்வுகள் மாணவர்களால் நடத்தப்பட்டன.

கள நிகழ்வாக போர்த் தேங்காய் அடித்தல், வாரோட்டம், கிளித்தட்டு, வட்டக் கோடு, இசைக்கதிரை, பலூன் உடைத்தல் போன்ற நிகழ்வுகளால் மாணவர்கள் மகிழ்வுற்றதாக அதிபர் சு.தர்மலிங்கம் தெரிவித்தார். (ம-207)

## கண்ணீர் அஞ்சலி



அமரர்

**துரைராசா சுகுமாறன்**

கிராம அலுவலர்-தரம் 01

குமரபுரம்

கண்டாவளை உதவி அரச அதிபர் பிரிவின் குமரபுரம் கிராம அலுவலராகக் கடமை புரிந்து வந்த எமது அன்புக்குரிய கிராம அலுவலரின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவர்களின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

உதவி அரச அதிபர் பணிமனை,
கண்டாவளை.

உதவி அரச அதிபரும் / அலுவலர்களும் (#/4444)

# நவராத்திரி விழா நிகழ்வுகள்

இலங்கை வங்கியின் யாழ். மேற் தரக் கிளையினர் நடத்தும் நவராத்திரி விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வங்கிக் கிளையில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வின் விசேட பூசை வழிபாடுகளை பிரம்மஸ்ரீ இலட்சுமி காந்தர் சத்தி யோஜாதக் குருக்கள் நிகழ்த்துவார். வரவேற்புரையை கிளை முகாமையாளர் அ. மகாதேவாவும், சமய சொற்பொழிவை ஆசிரியர் கு. பாலசண் முகனும் நிகழ்த்துவார். (ஓ-311)

* * *

அளவெட்டி வெளிவயல் ஸ்ரீ முத்து மாரி அம்பாள் ஆலயத்தின் விஜயதசமி விழா எதிர்வரும் 6 ஆம் திகதி வியாழக் கிழமை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் வாழை வெட்டு நிகழ்வும் இடம் பெறும். (ஓ-36)

* * *

சுழிபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள், கம்பனை அம்பாள், துர்க்கை அம்பாள், வழக்கம்பரை முத்துமாரி அம்பாள், ஆலயங்களில் நவராத்திரி விழா எதிர்வரும் 6 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

* * *

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் நவராத்திரி விழா நாளை செவ்வாய்க்கிழமை முற் பகல் 10 மணிக்கு பணிமனை மண்டபத் தில் நடைபெறவுள்ளது. சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் த. சேத்திர பாலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் விசேட பூசை வழிபாடு களும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (ஓ-36)

# கல்லுண்டாய் மக்களுக்கு குடிதண்ணீர் வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.03

கல்லுண்டாய் பிரதேசத்தில் 14 வீட்டுத்திட்டத்தில் உள்ள குடும்பங்களுக்கு குடிதண்ணீர் வழங்க வேண்டும். வலிதென்மேற்கு பிரதேச சபை இதற் கான துரித நடவடிக்கையை எடுத்து குடிதண்ணீர் வழங்க முன்வர வேண்டும் என்று சண்டிலிப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் கேட்டுள்ளார்.

இதற்கு பிரதேச சபைத்தலைவர் அ.ஜெபநேசன் கூறுகையில்;

அடுத்த வாரம் முதல் பௌசர் மூலம் கல்லுண்டாய் பிரதேசத்தில்உள்ள மக்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளது. மக்கள் பாவனைக்கான கிணறும், ஆலய கேணியும் துப்பரவு செய்து வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை கட்டுடை இடிகுண்டு பிரதேசத்துக்கும் இடிகுண்டு வழியான மின்சாரம் வழங்கல் தொடர்பாகவும் இலங்கை மின்சார சபையுடன் தொடர்பு கொள்ளவுள்ளோம் எனவும் தெரிவிக்கப் பட்டது. (ம-302)

ஸ்ரீ ராம ஜெயம்

## N.V.G.கவரிங் சென்ரர்

அசல் தங்கம் போல் காட்சி அளிக்கக்கூடிய வகையில் வடிவமைக்கப்பெற்று அதிகரித்துவரும் தங்கம் விலைக்கு மாற்றீடாக பயன்படுத்தக்கூடிய வகையிலும் இரண்டுவருட ஒரு வருட உத்தரவாதத்தில் சகல விதமான கவரிங் நகைகளை புத்தம்புதிய டிசைன்களில் பெற்றுக்கொள்ளவும் தங்கம், பித்தளை, வெள்ளி போன்றவற்றுக்கும் தங்கமுலாம் வெள்ளி முலாம் போட்டு பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:

அம்பிகை நகைமாடம்
கொடிகாமம் வீதி, நெல்லியடி

ஆர்த்தி கோல்ட் கவரிங்
இல. 133, தும்பளை வீதி,
பருத்தித்துறை.



## நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து) ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி

01.10.2011

கீழ்க் குறிப்பிடப்படும் பதவிக்கு சேவை மனப்பாங்குடன் முழுநேரமாக உழைக்கும் விருப்பமும் ஆர்வமும் உடைய 18-45 வயதுக்கு உட்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

குறிப்பு: சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**கிளை முகாமையாளர் (தற்காலிகம்)**

01. வேலை செய்யும் நாள் ஒன்றுக்கு சகல படிகளும் உட்பட ரூபா 300/= வழங்கப்படும்.
02. வேலைக்கு தெரிவு செய்யப்படும் பட்சத்தில் சங்கத்தால் கோரப்படும் ரொக்கப் பிணையைச் செலுத்த வேண்டும். இதற்கு வட்டி வழங்கப்படும்.

**தகைமை**

ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரண தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (சாதாரண தரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியும் தொடர்புபட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் எமது சங்க காரியாலயத்தில் விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று பூரணப் படுத்தி 18.10.2011ஆம் திகதிக்கு முன்னர் *பொதுமுகாமையாளர், நல்லூர் பலநோக்கு கூட்டுறவு சங்கம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.* என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். முடிவுத் திகதிக்குப் பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்களும், தகுதியற்ற விண்ணப் பங்களும் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

பொதுமுகாமையாளர்,
நல்லூர் பல நோக்குக் கூட்டுறவு சங்கம்,
திருநெல்வேலி. (#/4623)

## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



திரு.திருமதி யோகநாதன் தம்பதியரின் செல்வப் புதல்வியும் யோ.பாலகணனின் சகோதரியுமாகிய

**யோ.புகழினி**

*(யா/ தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்)*

*2011 ஆம் ஆண்டு தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 171 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்ததோடு பாடசாலை மட்டத்தில் 4 ஆம் இடத்தினையும் மாவட்ட மட்டத்தில் 216 ஆம் நிலையையும் பெற்று பெற்றோருக்கும் பாடசாலைக்கும் எமது கிராமத்துக்கும் புகழினைப் பெற்றுத் தந்த எங்கள் புகழம்மாவை பாராட்டுவதோடு அவர் கல்வியில் மேன்மேலும் பல வெற்றிகளை அடைவதுடன் பல துறைகளிலும் சிறந்து பிரகாசித்திட எமது தும்பளை சக்திதேவியின் அருள்வேண்டி பாராட்டுகின்றோம். அத்துடன் இவருக்கு நல் அறிவூட்டிய அதிபர், ஆசிரியர்கள், அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

வாழ்த்துபவர்கள்: தம்பி-பாலகணன், அப்பம்மா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், மச்சாள்மார், மச்சான்மார், அண்ணாமார்.

தும்பளை தெற்கு, தும்பளை.




# தாதியப் பயிற்சிநெறியை முதன் முதல் தமிழ் மொழி மூலம் பிரதிநிதித்துவப்படுத்திய யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரி

யாழ்.மாவட்டத்தின் பாரம்பரியமான கல்விச் சொத்தை பாதுகாப்பதில் பாடசாலைகள், கல்லூரிகள் என்றுமே முதலிடத்தில் விளங்குகின்றன.

இத்தகைய சேவையினால் வரலாற்று ரீதியாகவும் யாழ்.மண்ணில் வைத்தியர்கள், ஆசிரியர்கள், சிறப்பு மிக்க கல்விமான்கள் ஆகியோர் உருவாகி யாழ். மாவட்டத்தின் பாரம்பரிய கல்விச் சொத்தினை நிலை நாட்டி வருகின்றார்கள்.

இந்த வகையில் பிரதேசங்கள் தோறும் உள்ள வைத்தியசாலைகளில் பணிபுரியும் தாதியர்கள் பலரை உருவாக்கிய பெருமை யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரியையே சாரும்.




யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அருகில் அமையப் பெற்றுள்ளது இந்தக் கல்லூரி.

இலங்கையின் ஆறாவது தாதியர் பயிற்சிக் கல்லூரியாக 1957 ஆம் ஆண்டு அத்திபாரம் இட்டு தோற்றம் பெற்றதே இந்தக் கல்லூரியாகும்.

தாதியப் பயிற்சி நெறியை தமிழ் மொழி மூலம் பிரதிநிதித்துவப்படுத்தும் முகமாக தாதியர்களை பயிற்றுவிக்கும் நோக்குடன் அனைத்து தாதியர் கல்லூரியினதும் தாதியக் கல்லூரியாக இந்தக் கல்லூரி விளங்குகின்றது.

1957 ஆம் ஆண்டு கல்லூரிக்கு அடிக்கல் நடப்பட்டது. 1960 ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் 29 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக தாதியர் பயிற்சிக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

தாதியப்பயிற்சியை தமிழ் மொழியை பிரதிநிதித்துவப்படுத்தும் கல்லூரியாக ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கல்லூரியின் ஸ்தாபக அதிபராக திருமதி நவமணி கடமையாற்றினார்.

கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட போது 32 தாதிய மாணவர்கள் முதலாவது அணிக்காக உள்வாங்கப்பட்டிருந்தனர். இதன் போது மாணவர்களுக்கான அனைத்து கற்றல் செயற்பாடுகளும் ஸ்தாபக அதிபர் திருமதி நவமணியினால் மேற்கொள்ளப்பட்டன.

திருமதி நவமணி வல்லிபுரம் தாதிய பட்டப்படிப்பை நிறைவு செய்த பின்னர் தாதிய முதுமாணி கற்கை நெறியை அமெரிக்காவின் வாஷிங்ரன் பல்கலைக் கழகத்திலும் கற்றவர் என்பதால் தாதியர் மாணவர்கள் சிறந்த கற்றலைப் பெறுவதற்கு ஏதுவாக அமைந்தது.

தாதியர் பயிற்சிக் கல்லூரியில் 30 ஆண்டுகளுக்கு மேலாக திருமதி நவமணி பணியாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர் பணியாற்றிய காலத்தில் கல்லூரியில் பல தடைகள் ஏற்பட்டிருந்தாலும் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை இடை விடாது கொண்டு சென்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கல்லூரியின் முதலாவது போதனாசிரியராக வில்லியமும் அவரைத் தொடர்ந்து மேலும், அதன் பின்னர் 1963 ஆம் ஆண்டு ஜோசப்பும் பயிற்றுவிப்பாளராகக் கல்லூரியில் சேவையாற்றினர்.

கல்லூரியின் கற்றல் செயற்பாடுகள் யாவும் தகுதி வாய்ந்த போதனாசிரியர்களால் வழங்கப்பட்டதால் திறமையுடைய தாதியர்கள் பலர் கல்லூரியிலிருந்து வெளியேறிய வண்ணம் இருந்தனர். 1967 ஆம் ஆண்டு கல்லூரியின் மூன்றாவது அணி பயின்ற போது தாதிய மாணவி கண்மணி நடராசா அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற இறுதிப் பரீட்சையில் முதலாவது இடத்தைப் பெற்று கல்லூரிக்கு மட்டுமல்லாது யாழ்.மாவட்டத்துக்கே பெருமை தேடிக் கொடுத்தார்.

சோபனா

(தொடரும்)

## வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை




- 72 மணி நேரத்தில் குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்.
- கடலுணவுப் பொருட்கள், எண்ணை வகைகள், மருந்துப் பொருட்கள் என்பனவும் அனுப்பி வைக்கப்படும்.
- எம் ஊடாக அனுப்பப்படும் சகல பொதிகளுக்கும் 100% சுங்கதீர்வை (Customs Duty) விலக்கு உண்டு.

சகல நாடுகளுக்குமான விமான பயண சீட்டுக்கள், வீசா சேவைகள், கடவுச்சீட்டு புதுப்பித்தல் மற்றும் இணைந்த சேவைகள்.

உலகின் முன்னணி கூரியர் சேவை நிறுவனத்தின் முகவர்
அனுப்பப்படும் பொதிகள், ஆவணங்கள் தொடர்பான சகல விபரங்களையும் உங்கள் கையடக்க தொலைபேசி மூலம் பெற்றுக்கொள்ள SMS செய்ய வேண்டிய இலக்கம். 00447720334455

**Arrul Global Express**
International Courier & Cargo Service
(நிபந்தனைக்குட்பட்டது)

இல. 01 பிறவுண் வீதி
நாவலர் வீதி சந்தி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 222 6113

## வாடகைக்குண்டு

கண்டி வீதி, பிரதேச செயலகம் அருகே, சாவகச்சேரி நகரில் 600 சதுர அடிகொண்ட களஞ்சிய அறை வாடகைக்குக் கொடுக்கப்படும். தேவையானோர் தொடர்பு கொள்ளவும்.
077 7722180 - 077 6222993

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் A.9- கண்டி வீதியில் மாம்பழம் சந்திக்கும் புங்கன்குளம் சந்திக்கும் இடையில் நன்னீர்க் கிணற்றுடன் 6 பரப்பு 1 குளி வெற்றுக் காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: T.P . 077 0557486
0713899476

## வேலையாள்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் பிரபல புடைவை நிறுவனத்துக்குப் பழகிய, பழக ஆர்வம் உள்ள ஆண்கள் தேவை.
Mob- 077 6334467
077 2528957

## வாழ்த்தி நன்றி கூறுகின்றோம்



திரு.திருமதி லிவிங்ஸ்டன் உதயகுமார் - செல்வம்
தம்பதியரின் செல்வப் புதல்வன்
அன்ரன் ராஜ்குமார் அவர்கள்
யாழ்/இளவாலை ஆண்கள் பாடசாலையில்
2011ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில்
பரீட்சையில் 178 புள்ளிகளைப் பெற்று
சித்தியடைந்தமையையிட்டு இவரை
வாழ்த்துவதுடன் இவருக்கு இரவு பகல் பாராது கல்வியறிவூட்டிய
அதிபர், ஆசிரியர்கள் மற்றும் ஞானம்ஸ் கல்வி நிலையத்தினர்
அனைவருக்கும் எமது நன்றிகள். இவர் மேன்மேலும் கல்வியில்
சிறந்துயர இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

ராஜ் வெதுப்பகம்,
பண்டத்தரிப்பு.

குடும்பத்தினர், அம்மம்மா,
தாசன் மாமா, மனோ பெரியப்பா,
விக்ரர் பெரியப்பா, விஜி பெரியப்பா.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



| | |
|---|---|
| இ.நாகதீபன் -172 | கு.தர்சிகா -155 |

யா/ வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயத்திலிருந்து 2011 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிச் சித்தியெய்திய மாணவர்களையும் அத்துடன் நூறுக்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்த மாணவர்களையும் வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

100 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்கள்

| | | | |
|---|---|---|---|
| ம. டயாளினி | - 149 | ஜெ. யோகவிதுஷன் | - 141 |
| சோ. பானுஜன் | - 140 | ச. மகிந்தன் | - 133 |
| பா. சானுசா | - 119 | சி. கோபிகா | - 115 |
| கே. ஜனோசன் | - 111 | ப. குயின்ரன் | - 108 |

வாழ்த்துவோர்
பாடசாலைச் சமூகம்.

## கமத்தொழிலுக்கு ஏற்ற உற்ற நண்பன்!

# எட்குரோ

தண்ணீர் தெளிக்கும் இயந்திரம்



- 16 லீட்டர் தண்ணீரை நிரப்பலாம்.
- ஸ்டெய்ன்லஸ் ஸ்டீலால் செய்யப்பட்டது.
- ஒரு வருட கால உத்தரவாதம்.
- நாடு முழுதும் உள்ள முகவர்களிடம் அங்கீகரிக்கப்பட்ட விற்பனைக்கு பிந்திய சேவையினை பெற்றுக்கொள்ளுங்கள்.




எட்னா என்ஜினிரிங் (பிரை) லிமிட்டட்
257, கிராண்பாஸ் வீதி, கொழும்பு-14. தொலைபேசி: 2498310, 2498315
பெக்ஸ்: 2472628 E-mail: agro@edna.lk

# தனியார் துறையினரால் கல்வி 'விற்பனை'; பின்தங்கிய மாணவர் இதனால் பெரிதும் பாதிப்பு

**சந்திரகுமார் எம்.பி.கூறுகிறார்**

யாழ்ப்பாணம், ஒக்.3

கல்வி இலவசமாக வழங்கப்பட்டாலும் அது தனியார் துறையினரால் இன்று விற்பனை செய்யப்படுகின்றது. இதனால் பின்தங்கிய மாணவர்களின் கல்வி அபிவிருத்தி பின்தள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று வைத்திய நிபுணர்கள் எல்லோரும் யாழ். போதனா வைத்தியசாலையிலேயே கடமையாற்ற விரும்புகின்றனர்.

அதில் கடமையாற்றுவது தான் அவர்களின் அபிவிருத்திக்கு நல்லது என்று டாக்டர்கள் நினைக்கிறார்கள்.

அதேபோல தான் புதிதாகக் கடமைக்கு வரும் டாக்டர்களும் யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றுவது மதிப்பு எனவும் நினைக்கிறார்கள்.

உண்மையில் அதுவல்ல அதன் நோக்கம். அவர்களது இலக்கு பணம் சம்பாதிப்பதிலேயே இருக்கிறது.

சங்கானை வைத்தியசாலைக்குத் தேவையான இயந்திரங்களையும், மருத்துவ சாதனங்களையும், பரிசோதனை செய்யும் கருவிகளின் விவரங்களையும் பட்டியல் இட்டுத் தரவேண்டும். இந்த வைத்தியசாலைக்கு அதனை விட 15 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களை வழங்குகின்றேன்.

எதிர்காலத்தில் இரத்தப் பரிசோதனைகளைச் செய்து பிரதேச மட்ட வைத்தியசாலையின் தரத்தினை அதிகரிக்க அனைவரும் முன்வரவேண்டும்.

இதனூடாகப் பிரதேச அபிவிருத்தி ஏற்பட்டு சங்கானை அரசினர் வைத்தியசாலையும் தரம் உயரும்.

எதிர்காலத்தில் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையும் தரம் உயரத்தி அங்குள்ள குறைகள் நிவர்த்தி செய்யப்படுவதுடன்-

இன்னும் இரு வாரத்தில் யாழ்.மாவட்டத்துக்கான தாதிய உத்தியோகத்தர் வெற்றிடமும் குடும்பநல உத்தியோகத்தர்களின் வெற்றிடமும் நிரப்பப்படும்.

சங்கானை மக்களும் அதனை அண்மித்த பிரதேச மக்களும் கூடியளவுக்குப் பிரதேச வைத்தியசாலையை நாடுமாறும் இதற்கென புதிதாக வருகை தந்துள்ள டாக்டர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்- என்றார். (ச-302)

# இயற்கை அனர்த்த புனரமைப்பு; ஜப்பான் 9.3 பில்லியன் உதவி

இலங்கையில் 'அவசர இயற்கை அனர்த்த புனரமைப்பு செயற்றிட்டத்துக்கு', 7 பில்லியன் ஜப்பானிய யென்னான அண்ணளவாக 9.3 பில்லியன் ரூபாவினை நீண்டகாலக் கடன் நிதியாக ஜப்பான் அரசுவழங்கியுள்ளது.

இந்தச் செயற்றிட்டத்துக்கான நிதியானது இலங்கையில் மத்திய, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளைப் புனரமைக்கப் பயன்படுத்தப்படவுள்ளது. இந்தநிதி இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் குனியோ தகஹசி மற்றும் நிதித் திட்டமிடல் அமைச்சின் செயலாளர் டாக்டர் பீ.ஜயசுந்தர ஆகியோருக்கிடையே நிதித் திட்டமிடல் அமைச்சில் கடந்த 29 ஆம் திகதி கைமாற்றிக் கொள்ளப்பட்டது. (எ)

# நோயாளர்களைப் பார்வையிடுவோர் குளிர்பானம் கொடுப்பதைத் தவிர்க்கவும்

தென்மராட்சி,ஒக்.3

சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலை விடுதிகளில் தங்கியிருப்போரை பார்வையிட வருவோர் குளிர்பானம் மற்றும் நிறமூட்டப்பட்ட மென்பானங்கள், வெதுப்பகங்களில் தயாரிக்கப்பட்ட பொருள்கள் ஆகியவற்றைக் கொண்டு வருவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

விடுதி வைத்தியர் அல்லது தாதிய உத்தியோகத்தரின் ஆலோசனைக் கமைய இளநீர், பழச்சாறுகள், பழவகைகள், சத்துணவுகளான நன்கு அவித்த கடலை, பயறு, கஞ்சி போன்றவற்றை விடுதி நோயாளர்களுக்கு வழங்குவது வரவேற்கத்தக்கது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான உணவுப் பொருள்கள் சாப்பிடுவதால் நோயாளி சுகதேகியாக மாறும் சாத்தியம் ஏற்படுவதுடன் எமது பிரதேச உற்பத்திப் பொருள்களும் சந்தைப்படுத்தும் வாய்ப்புக்களும் அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-207)

# மத்திய வங்கிக்குத் தகவல்களை மறைத்த நிதிக் கம்பனி பணிப்பாளர்களுக்கு அபராதம்

கொழும்பு, ஒக்.3

மத்திய வங்கிக்கு வேண்டுமென்றே தகவல்களை மறைத்த பிரபல நிதிக் கம்பனியின் பணிப்பாளர்கள் நால்வருக்கு கொழும்பு பிரதான நீதிவான் தலா மூன்று லட்சம் ரூபா அபராதம் விதித்துள்ளார்.

2002 ஆம் ஆண்டில் மத்திய வங்கி கேட்ட தகவல்களை வேண்டுமென்றே மறைத்தமைக்காகவே இந்தத் தண்டனை வழங்கப்பட்டது.

கம்பனியின் பணிப்பாளர்கள் பற்றிய விவரங்கள், பதிவு இலக்கம், பணம் வைப்புச்செய்தோர் விவரம் உட்பட முக்கிய தகவல்களை இவர்கள் வெளியிடத் தவறியமை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த நீதிபதி இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார். (ச)

# பதில் நிர்வாக அலுவலர்கள் நியமனம்

தென்மராட்சி,ஒக்.3

அரச திணைக்களங்களில் முகாமைத்துவ உதவியாளர் சேவை தரம் I ஐச் சேர்ந்த சிலர் பதில் நிர்வாக அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த நியமனங்கள் மாகாண பொது நிர்வாக செயலகத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் தென்மராட்சி கல்வி வலயத்தில் பதவிநிலை அலுவலகராகக் கடமையாற்றும் பொன். தர்மேந்திரன் மாகாண சுகாதார அமைச்சுக்கும் பிரதம முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் திருமதி யோகேஸ்வரிகுமார் சாவகச்சேரி நகரசபைக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ச-207)

**31 ஆம் நாள் நினைவலைகள்**

மலர்வு: 30.08.2003 உதிர்வு: 03.09.2011

சிறீதரன் சாருஜன்



ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

அப்பப்பா, அப்பம்மா, மாமி (மதி), அண்ணா (நிஷாந்தன்)

செட்டியார் வளவு, சுன்னாகம்.

ஃபுபே செட்




ரூபா 3950/-லிருந்து

www.titusstores.com
டைடஸ் ஸ்டோர்ஸ்
புறக்கோட்டை, லிபர்டி பிளாஸா
2439422

**கடை வாடகைக்கு**

மாநகரசபை எல்லைக்குள் பிரதான வீதியில் (பஸ்ரியன் சந்திக்கும் சிறைச்சாலைக்கும் இடையில்) சகல வசதிகளுடனும் கூடிய விசாலமான கடை வாடகைக்கு விடப்படும்.

தொ.பே: 0779471069



மங்களகரமான தெரிவுகள்

திருமண அழைப்பிதழ்களின் ஆலயம்

போஸ்கோ

610/3, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 0370

03.10.2011 முதல் மீண்டும் வெளிவருகின்றது

**புலமைச்சுடர் 2012 - 2013**

ஒரு வார ஆக்கங்களைத் தாங்கி திங்கள் தோறும் வெளிவரும் முன்னோடிக் கையேடு

2012(தரம் 04), 2013(தரம் 03) ஆம் ஆண்டுகளில் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களை தயார்படுத்துவதற்கான சிறப்பு வழிகாட்டி

தொடர்புகளுக்கு:
புலமைச்சுடர் ஆசிரியபீடம் - 011 5738855 / 071 6850005
விநியோகப்பிரிவு - கொழும்பு 011 5737599 / 071 6850006
யாழ்ப்பாணம் 021 5677222 / 071 6182182

இலையலைத்தும் 15 ரூபா விலையில்.....

தேசிய ரீதியில் புகழ்பெற்ற சுடர் ஒளி கல்விச்சுடர் வளவாளர்களின் அரிய படைப்பு

இக்கையேட்டை அலங்கரிப்பவை

- கற்றல் குறிப்புகள்
  - தமிழ் மொழி
  - கணிதம்
  - சுற்றாடல்
  - ஆங்கிலம்
  - சிங்களம்
- தரம் 4, 5 படிமுறை மாதிரிப் பரீட்சை வினாத்தாள்
- கட்டுரைக்களம், பொது அறிவு
- மூளைக்கு வேலை விஞ்ஞான விளையாட்டு
- வாரம் ஐந்து வினா - விடை விளக்கம்
- சங்கமம்
- முதல்நிலை மாணவர்களின் அனுபவப் பகிர்வு

உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள பத்திரிகை முகவரிடம் முற்பதிவு செய்துகொள்ளவும்.

# மூவரையும் தூக்கில் போட முடிவு செய்தால் தூக்குக் கயிறை அறுத்து எறிவோம்

வை.கோ.முழக்கம்



பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய 3 தமிழர் களுக்கும் ராஜீவ் கொலை வழக்கில் எந்தவித தொடர்பும் இல்லை. ஆனால் இந்த மூன்று பேரை யும் தூக்கில் போட்டே ஆக வேண்டும் என்று மத்திய அரசு முடிவு செய்து விட்டது.

அவ்வாறு நடந்தால், நாம் தெருத்தெருவாகச் சென்று ராஜீவ் அரசு தமிழர்களுக்குச் செய்த கொடுமைகளை மக்க ளிடம் எடுத்துச் சொல்லுவோம் என்பதை மத்திய அரசுக்கு எச் சரிக்கிறோம். தூக்குக் கயிறை அறுத்தெறிவோம் என்பதில் எங்களுக்கு சந்தேகமே இல்லை. தூக்குத் தண்டனையை ரத்து செய்தே தீர வேண்டும்.

இவ்வாறு முழக்கமிட்டார் ம.தி.மு.க.செயலர் வைகோ.

மரண தண்டனை விதிக் கப்பட்ட மூன்று பேரின் உயிர் கள் காக்கப்பட வேண்டும், மரண தண்டனையை முற் றாக ஒழிக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து நேற்று சென்னையில் காயிதே மில்லத் கல்லூரிக்கு அருகில் பழ. நெடுமாறன் உண்ணா விரதம் மேற்கொண்டார்.

இந்த உண்ணாவிரதத்தை ஆரம் பித்து வைத்து பேசிய வைகோ மேலும் தெரிவிக்கையில்:

தமிழகத்தில் மரண தண்ட னையை முற்றாக ஒழிக்கவும், மூன்று தமிழர்களின் தூக்குத் தண்டனையை தடுத்து நிறுத் தவும், இன்று அண்ணல் காந்தி யடிகளின் பிறந்த நாளில் உண்ணாவிரத அறப்போராட் டம் அண்ணன் நெடுமாறன் தலைமையில் நடைபெறுகி றது. இந்த உண்ணாவிரதத்தை ஆரம்பித்து வைப்பதில் நான் பெருமைப்படுகிறேன்.

ஒகஸ்ட் 30 ஆம் திகதி தூக் குத் தண்டனையை தடை செய்ய வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பு வெளிவந்த நாளில் கட்சி பாகு பாடின்றி தமிழக மக்கள் அனை வரும் பெரும் திரளாக வந்தி ருந்தனர். எந்த அசம்பாவித மும் நடைபெறவில்லை. ஒரு குண்டூசி விழுந்தால் கூட சத்தம் கேட்டிருக்கும். அவ்வ ளவு அமைதியாகக் காத்திருந்த னர். ஆனால், இந்த வழக்கை சென்னை உயர் நீதிமன்றத் தில் நடத்தாமல், வேறு மாநிலத் தில் நடத்த மனு தாக்கல் செய் துள்ளார்கள். இதன் பின்னணி யில் யார் இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியும்.

இந்த மூன்று தமிழர்க ளுக்கும் அந்த சம்பவத்தில் சம் பந்தமே கிடையாது என்று நாம் உறுதியாகக் கூறுகிறோம்.

ஆனால் இந்த மூன்று பேரை யும் தூக்கில் போட்டே ஆக வேண்டும் என்று மத்திய அரசு முடிவு செய்து விட்டது. அப்படி நடந்தால், நாம் தெருத் தெருவாக சென்று ராஜீவ் அரசு தமிழர்களுக்கு செய்த கொடுமை களை மக்க ளிடம் எடுத்துச்சொல்லு வோம் என்பதை மத்திய அரசுக்கு எச்சரிக்கிறோம்.


தூக்குக் கயிறை அறுத்தெறி வோம் என்பதில் எங்களுக்கு சந்தேகமே இல்லை. தூக்குத் தண்டனையை ரத்து செய்தே தீரவேண்டும்.

ஜனாதிபதி தனியாக எந்த ஒரு முடிவையும் எடுக்க முடி யாது. மத்திய அரசு என்ன சொல்லுகிறதோ, அதைத்தான் ஜனாதிபதி செய்வார்.

இதற்கு பின்னால், சோனியா இருந்து இயக்குகிறார். அவ ருக்குத் தெரியாமல் ஒரு இம் மியளவும் நகராது.

மத்திய அரசு அவர்களை தூக்கில் போட்டே தீரவேண் டும் என்று சொன்னால், தமி ழக அரசு அதைத் தடுக்க உட னடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுவரை எங்கள் போராட்டம் தொடரும்- என் றார். (வ)

## நடிகர் நாகர்ஜூன் மீது வழக்குத் தாக்கல்



ஹைதராபாத், ஒக்.3

பெண் பத்திரிகையாளர் ஒரு வரை தகாத வார்த்தைகளால் பேசியதற்காக தெலுங்கு நடி கர் நாகர்ஜூன் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 29 ஆம் திகதியன்று திரைப்படம் ஒன்றின் ஷூட் டிங்கின்போது நாகர்ஜூனைச் சந்தித்ததாகவும், அப்போது அவர் தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும் சுனிதா சௌத்ரி என்ற பத்திரிகையாளர் பொலி ஸில் முறைப்பாடு செய்தார். மேலும் தன்னைக் கொலை செய்து விடுவதாக நாகர்ஜூன் மிரட்டியதாகவும் அவர் தனது முறைப்பாட்டில் கூறியிருந் தார்.

இதையடுத்து ஜூப்ளி ஹில்ஸ் பொலிஸார் நாகர்ஜூனுக்கு எதிராக வழக்குப் பதிவு செய் துள்ளனர். (வ)

## என்றும் போற்றத் தக்கவர்...



மகாத்மா காந்தியின் 143ஆவது பிறந்த தினமான நேற்று நாடு முழுவதும் காந்தி ஜெயந்தி விழா கொண்டாடப்பட்டது. பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியாகாந்தி, தமிழக முதல்வர் ஜெயலலிதா ஆகியோர் காந்தியின் உருவச்சிலைக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

## தற்கொலைப் பாதையில் மத்திய அரசு

பா.ஜ.க.குற்றச்சாட்டு


டில்லி, ஒக் 3

மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு தற்கொலைப் பாதையில் செல் வதாக பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் எல்.கே. அத் வானி குற்றம் சாட்டியுள்ளார்.

டில்லியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற கட்சியின் தேசிய செயற்குழுக் கூட்டத்தில் தனது நிறைவு ரையில் அவர் மேலும் தெரி விக்கையில்:

சுதந்திரம் அடைந்ததிலி ருந்து இப்படி ஒரு மோசமான சூழ்நிலை நிலவியதில்லை. அரசின் அனைத்து நிலைகளி லும் ஊழல் புரையோடியுள் ளது. அரசை வழிநடத்துவதற் கான தகுதியை மத்திய அரசு இழந்துவிட்டது.

விரைவில் தேர்தலை எதிர் கொள்ளத் தயாராக இருக்கும் படி தொண்டர்களைக் கேட் டுக் கொள்கிறேன்.




மத்திய அரசு செயலிழந்து விட்டது. அதன்மீது மக்கள் வெறுப்படைந்துள்ளனர்- என் றார்.

நல்ல அரசு, அரசியல் தூய்மை ஆகியவற்றை வலியுறுத்தி எதிர்வரும் 11 ஆம் திகதி அத் வானி ரத யாத்திரை மேற்கொள் ளவுள்ளார்.

இதன் மூலம் மக்களி டையே ஊழல் குறித்தும், விலை வாசி உயர்வு குறித்தும் விழிப் புணர்வை ஏற்படுத்த உள்ளதாக வும் அத்வானி தெரிவித்தார். (வ)

## காளகஸ்தி கோபுரக் கலசம் இடிந்து விழுந்ததால் பரபரப்பு

காளகஸ்தி, ஒக்.3



காளகஸ்தி சிவன் கோயி லின் நுழைவாயில் கோபுரக் கலசம் நேற்று முன்தினம் இடிந்து விழுந்துள்ளது. இது மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆந்திர மாநிலத்தில் அமைந் துள்ள ஸ்ரீ காளகஸ்தி சிவன் கோயில் ராகு, கேது பரிகாரத் தலமாக விளங்குகிறது.

கடந்த ஆண்டு கோயில் ராஜகோபுரம் இடிந்து தரை மட்டமானது. இது பரபரப்பை ஏற்படுத்தியது. அந்த இடத்தில் கடந்த ஒரு வாரத்துக்கு முன்பு புதிய கோபுரம் கட்டும் பணிகள் ஆரம்பமாகின. இந்த நிலையில் கோயில் நுழைவு வாயிலில் உள்ள கோபுரக் கலசம் நேற்று முன்தினம் காலை திடீரென இடிந்து விழுந்தது. இதனைக் கண்டதும் அங்கிருந்த பக்தர்கள் அச்சம் அடைந்தனர். ஆலய அதிகாரிகள் உடனே சென்று பார்வையிட்டனர்.

இதனால் ஊருக்கு ஏதாவது கெடுதல் நேர்ந்து விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

தெலுங்கானா விவகாரத்தில் ஆந்திரத்தின் நிலை இவ்வளவு மோசமானதைக் காட்டிக் கொடுக்கும் நிகழ்வாகவே கோபுரம் இடிந்ததை பக்தர்கள் கருதினர்.

இப்போது இந்த நிகழ்வால் பல்வேறு அனுமானங்கள் மக்கள் மத்தியில் உலா வருகின்றன.

## கனிமொழியின் பிணை மீண்டும் ஒத்திவைப்பு

டில்லி, ஒக்.3

ஸ்பெக்ட்ரம் வழக்கில் கைதாகி சிறையில் அடைக்கப் பட்டுள்ள கனிமொழி பிணை மனு மீதான விசாரணையை எதிர்வரும் 17ஆம் திகதிக்கு ஒத்திவைத்து, நீதிபதி ஓ.பி. சைனி உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கில், குற்றச்சாட் டுகள் பதிவு செய்யப்படாத வரை, பிணை வழங்க இய லாது என்பதால் இருதரப்பின ரும் வேறு திகதிக்கு விசார ணையை ஒத்திவைக்கும் படி கேட்டுக்கொண்டதாகத் தெரி கிறது.

மேலும், எதிர்வரும் 15 ஆம் திகதி சி.பி. ஐ., குற்றச்சாட் டுகளை பதிவு செய்ய வேண் டும் எனவும் நீதிபதி உத்தர விட்டார். (வ)

## பா.ஜ.க. துடுப்பு இல்லாத படகு!

காங்கிரஸ் சாடல்

டில்லி, ஒக்.3

பாரதிய ஜனதாக்கட்சி துடுப்பு இல்லாத படகு என்று காங்கி ரஸ் கட்சி சாடியுள்ளது. மன் மோகன் சிங் அரசு தற்கொலைப் பாதையில் செல்கிறது என்ற பா.ஜ.க. மூத்த தலைவர் அத் வானியின் பேச்சுக்கு பதிலளிக் கும் வகையில் காங்கிரஸ் கட்சி இவ்வாறு கூறியுள்ளது.

காங்கிரஸ்கட்சியின் செய் தித் தொடர்பாளர், அபிஷேக் சிங்வி, டில்லியில் நேற்று முன் தினம் சனிக்கிழமை மேலும் கூறுகையில்:

பா.ஜ.கவுக்கு மக்கள் மத் தியில் செல்வாக்கு இல்லை. எனவே காங்கிரஸுக்கு எதிராக கண்மூடித் தனமாக குற்றச்சாட் டுகளைக் கூறி வருகின்றனர். முன்பு ஜேர்மனியில் கோயல்ஸ் மேற்கொண்டது போல காங்கி ரஸுக்கு எதிராக பொய்யான பிரசாரத்தை மேற்கொண்டு நாட்டு மக்களை திசை திருப்ப பா.ஜ.க. முயற்சிக்கிறது.

பொய்யை ஆயிரம் முறை திரும்பத் திரும்பக் கூறினால், அது உண்மையாகிவிடும் என்று பா.ஜ.க.வினர் நினைக்கின் றனர். ஆனால் அது ஒரு போதும் நடக்காது.

பா.ஜ. கவின் நிலை இப் போது துடுப்பு இல்லாத பட கைப் போன்று உள்ளது. எனி னும் ஆட்சிக்கான போட்டியில் தாங்கள் இருப்பதாகக் காட்டிக் கொள்ள அவர்கள் முயற்சிக் கிறார்கள் என்றார் அவர். (வ)

உதயன்
03 ஒக்ரோபர் 2011 திங்கட்கிழமை

# சவேந்திர சில்வா கூறுபவற்றை அனுமதியின்றி பிரசுரிக்கக் கூடாது

## கோத்தபாய அறிவுறுத்து



சவேந்திர சில்வா எதைக் கூறினாலும் தனது அனுமதி இன்றி யாரும் பிரசுரிக்க கூடாது என்று கோத்தபாய ஊடகங்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

சவேந்திர சில்வா தனது வழக்குத் தொடர்பில் தனக்கு சாதகமான செய்திகளை ஊடகங்களில் பிரசுரிக்குமாறும் கூடுதலான ஆதரவு தருமாறும் பாதுகாப்பு அமைச்சின் ஊடக பிரிவுக்கு கூறியுள்ளார்.

ஆனால் அந்த கடிதத்தை கோத்தபாய பெரிதுபடுத்தவில்லை. அத்துடன் சவேந்திரவின் வழக்கு தொடர்பில் புதிய கருத்துக்கள் எதுவும் பிரசுரிக்க வேண்டாம் என்று கூறியுள்ளார்.

சவேந்திர சில்வா தனது நீதிமன்ற அழைப்பாணையை உத்தியோக பூர்வமாக பெற்றுக் கொண்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான கேணல் ரமேஷை சவேந்திர சில்வாவின் விசேட குழுவொன்று கைது செய்துள்ளது. அவர்களே விசாரணைகளையும் நடத்தியதாக கண்கண்ட சாட்சியான அரச தொலைக்காட்சியின் முன்னாள் ஊடகவியலாளர் சமன்குமார எடுத்திருந்த காணொளியொன்றின் மூலம் நிரூபணமாகியிருந்தது.

ஆனால் நடந்த உண்மைகளை மறைக்கும் வகையில் கேணல் ரமேஷ் சண்டையின்போது கொல்லப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது மட்டுமன்றி அவர் கொல்லப்பட வேண்டியவரே எனவும் நியாயப்படுத்தியது.

இவ்வாறான நிலையில் தான் கேணல் ரமேஷின் மனைவி மூலம் குற்றச்சாட்டு மிகவும் காத்திரமான ஆதாரங்களுடன் சவேந்திர சில்லவா மீது சுமத்தப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அதனால்தான் இந்த விடயத்தில் தொடர்ந்தும் புதிய கருத்துக்களைக் கூறினால் அது வழக்கு விசாரணைகளில் மேலும் பிரச்சினைகளை உருவாக்கும் என்பதனால் இந்த விடயத்தில் அமைதியாக இருக்குமாறு கோத்தபாய தெரிவித்துள்ளார். (ச)

## கால்நடை வள அமைச்சுக்கு புதிய செயலாளர்



கொழும்பு, ஒக். 3

கால்நடை அபிவிருத்தி அமைச்சின் புதிய செயலாளராக ஜனாதிபதியால் திலக் கேந்திரகம நியமிக்கப்பட்டுள்ளார்.

கால்நடை அமைச்சு உருவாக்கப் பட்ட காலம் முதல் அமைச்சின் அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றி வரும் திலக் கேந்திரகம அமைச்சின் புதிய செய லாளராக நியமிக்கப் பட்டுள்ளமை வரவேற்கத்தக்கதாகும் என்று கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளார். அமைச்சின் கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வரவேற்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தாவது: புதிய செயலாளராக பதவியேற்ற திலக் கேந்திரகம நிர்வாகத்திறமை கொண்டவர். அவர் இந்த அமைச்சுக்கு செயலாளராக நியமிக்கப்பட்டிருப்பது மிகவும் பொருத்தமான ஒன்று என்று நான் கருதுகிறேன். எனவே, இவருக்கு அமைச் சில் கடமைபுரியும் உத்தியோகத்தர்கள் முழு ஒத்துழைப்பை வழங்கி அவரோடு இணைந்து பணியாற்ற வேண்டும் - என்றார்.

# கொழும்பு - யாழ். தனியார் பஸ்கள் வெள்ளவத்தையில் புதிய இடத்தில்

## வெள்ளிக்கிழமை முதல் நடைமுறையில்

யாழ்ப்பாணம், ஒக்.3

கொழும்பு-யாழ்ப்பாணம் பயணிகள் பஸ்சேவைகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தொடக்கம் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷனுக்கு அண்மையில் உள்ள உணவுக் களஞ்சியசாலையில் இருந்து ஆரம்பமாகவுள்ளன.

நேற்று முன்தினம் சனிக்கிழமை கொழும்பு பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுரசேனநாயக்கவுடன் நடைபெற்ற பேச்சுக்களை அடுத்தே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட பிரதான அமைப்பாளர் இ. அங்கஜன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:

இந்த பஸ் சேவைகள் மாலை 6 மணி தொடக்கம் இரவு 10 மணிவரை இடம் பெறவுள்ளன.

ஒரு மணித்தியாலத்துக்கு 10 பஸ்கள் என்ற ரீதியில் இந்தச் சேவை நடைபெறும். இந்த பஸ்களுக்கு முற் பதிவு செய்தவர்கள் தமது பஸ்கள் புறப்படும் நேரத்தை அறிந்து இந்த இடத்துக்கு வருவதன் மூலம் பயணத்தை மேற்கொள்ள முடியும்.

கொழும்பு-யாழ்ப்பாணம் பஸ்களுக்கு நிரந்தர பஸ் தரிப்பிடம் இல்லாததையும் கவனத்தில் கொண்டு இரத்மலானையில் தரிப்பிடத்துக்கான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. பஸ் தரிப்பிட வசதி இல்லாத பஸ் உரிமையாளர்கள் இரத்மலானையில் தமது பஸ்ஸை நிறுத்தி வைக்கமுடியும். -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## 10 ஆம் ஆண்டு நினைவு தினம்



அமரர்

தொண்டர் கந்தையா

திருநாவுக்கரசு

(சிவயோக சுவாமிகளின் அடியவரும் வட இலங்கை சர்வோதய ஸ்தாபகரும் ஜீவதானியும்)

(03.10.2011)

மலர்வு 01.03.1939 உதிர்வு 03.10.2001

என் கடன் பணி செய்து கிடப்பதே
எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும்
மக்கள் இனமீன்ற தமிழ் நாடு தனக்கும்
என்னால் திகையளவு பயனேதும் - கிடைக்குமென்றால்
செத்தொழியும் நாளெனக்குத் திருநாளாகும்.

இன்று (03.10.2011) திங்கட்கிழமை வட இலங்கை சர்வோதய சேவைவளாக புஸ்பா மணி மண்டபத்தில் நடைபெறும் அன்னாரின் நினைவு தின நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்

வட இலங்கை சர்வோதயம்,
புங்குடுதீவு.

வட இலங்கை சர்வோதய,
குடும்பத்தினர்.

## நெஞ்சை விட்டகலாத 10 ஆம் ஆண்டு நினைவலைகள்

மறைவு 24.09.2001



க. பிரியபவதனி, அ. கமலேஸ்வரன், கு. இராஜேந்திரம்,
இ. நிருபா, இ. தெய்வநாயகி, க. வஜிதா [பிரதா]

திதி: 03.10.2011

அன்புடன் பழகிப் பண்புடன் வாழ்ந்து ஒரு மனதாய் எல்லோரும் இணைந்து
இன்ப வாழ்வு இனிப் போதுமென்று நீவிர் இவ்வுலகை விட்டுப் பிரிந்தீரோ?
நீங்கள் மறைந்தாலும் நினைவுகள் எம் நெஞ்சை விட்டு நீங்காதே!
ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி!

கோப்பாய் தெற்கு. ஜெகன் குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## நவரட்ணராஜா இரத்தினாம்பிகை



சுன்னாகம் வரியப்புலத்தைப் பிறப்பிடமாகவும் மலேசியாவை வசிப்பிடமாகவும் கொண்ட நவரட்ணராஜா இரத்தினாம்பிகை (01.10.2011) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நவரட்ணராஜாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராசதுரை மற்றும் இராசேந்திரன், யோகேந்திரன், இந்திராதேவி ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற ஞானாம்பிகை மற்றும் நாதாம்பிகை, கருணாகரன் (சந்திரகாசன்), பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அவரின் இறுதிக் கிரியைகள் நேற்று (02.10.2011) ஞாயிற்றுக்கிழமை மலேசியாவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கருணாகரன் (சந்திரகாசன்)

சுன்னாகம். (6840)

## கதிரவேல் தியாகராஜா

திருகோணமலை, திரியாய், 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாவும் தும்பளைவயல் எல்லையை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேல் தியாகராஜா கடந்த 27.09.2011 செவ்வாய்க்கிழமை திரியாயில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேல்- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சாருமதி (கிராம அலுவலர்) இன் அன்புக் கணவரும் சத்தியா, கிருபாகரன், பத்மலதா (யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் க.கமலேஸ்வரி, காலஞ்சென்ற சண்முகலிங்கம், சிவராசா, கந்தப்பிள்ளை, விக்னேஸ்வரி, சிறிஸ்கந்தராஜா, சூரியகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான இளமுருகனார் மருள்நீக்கியார் மற்றும் பரஞ்சோதி, இராமகிருஷ்ணன் வைத்தியநாதன், விவேகானந்தன், குமாரகுலசிங்கம், குகன், அம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனரும் வானதி (பிரான்ஸ்), கோகுலநாயகி, கோணேஸ்வரன், பவானி, திவாகரன், கோபிகா ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கடந்த 28.09.2011 புதன்கிழமை திருகோணமலையில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

5ஆம் வட்டாரம், திரியாய், திருகோணமலை
வயல் எல்லை, தும்பளை, பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர். (6836)

# டுனீஷியா, எகிப்தில் சர்வாதிகார ஆட்சிகளை காந்தியின் அஹிம்சை வழியே கவிழ்த்தது

## ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூன் புகழாரம்

நியூயோர்க், ஒக். 03

மகாத்மா காந்தியின் அஹிம்சை கொள்கை, டுனீஷியா முதல் எகிப்து வரையிலான கொடுங்கோல் அரசுகளை வீழ்த்த அந்த நாட்டு மக்களுக்கு பயன்பட்டுள்ளது என்று ஐ.நா. சபையின் செயலாளர் நாயகம் பான் கீ-மூன், மகாத்மா காந்திக்குப் புகழாரம் சூட்டினார்.

துப்பாக்கிக் குண்டை விட, மக்களின் குரலுக்கே வலிமை அதிகம் என்பதை இந்த நாடுகளின் மக்கள் நிரூபித்துள்ளனர் என்றார் அவர்.

மகாத்மா காந்தியின் பிறந்த நாள் (ஒக்ரோபர் 2) விழாவையொட்டி நியூயோர்க்கில் சர்வதேச அஹிம்சை தின நிகழ்ச்சி கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதில், ஐ.நாவுக்கான இந்தியத் தூதர் ஹர்தீப் சிங் புரி, பிரபலவரலாற்று ஆய்வாளர் ராமச்சந்திர குஹா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இக்கூட்டத்துக்குத் தலைமை வகித்து ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் பேசியவை வருமாறு:-

அமைதியான வழிமுறைகளைப் பின்பற்றுவதில் மகாத்மா காந்தி உறுதியுடன் இருந்தார். கடந்த ஆண்டு மத்திய கிழக்கு நாடுகளிலும், வட ஆபிரிக்க நாடுகளிலும் ஏற்பட்ட மக்கள் எழுச்சி, அஹிம்சையின் வலிமையைப் பறைசாற்றியது.

குறிப்பாக டுனீஷியா, எகிப்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த மக்கள், நெடுங்காலமாக ஆட்சியிலிருந்த மக்கள் விரோத ஆட்சி முறையை அகற்ற அஹிம்சை முறைகளைக் கையாண்டதன் மூலம், இதேபோன்று பாதிக்கப்பட்டுள்ள மற்ற சில நாடுகளின் மக்களையும் சிந்திக்கத் தூண்டினர். எனினும், இது சுலபமான பாதை அல்ல.

அஹிம்சைப் பாதையைத் தேர்ந்தெடுத்த துணிச்சல் மிக்கவர்கள் பலர், தங்களது எதிரிகளை வீழ்த்தியுள்ளனர். அஹிம்சை, தன்னை எதிர்கொள்பவரைப் பிரமிக்க வைக்கிறது. இதன் மூலமே அது வெற்றி பெறுகிறது.


போரைக் கைவிட்டு புத்த மதத்தை தழுவிய மாமன்னர் அசோகர், அமைதிக்காக தனது வாழ்வை அர்ப்பணித்தார். இந்தியாவின் இந்தப் பாரம்பரிய முறையை சுதந்திரப் போராட்டத்தை வழிநடத்த மகாத்மா காந்தி



பயன்படுத்தி வெற்றிபெற்றார்.

தென்னாபிரிக்காவில் மகாத்மா காந்தி பெற்ற அனுபவங்களே அவர் அஹிம்சைபாதையில்செல்ல தூண்டுகோலாக இருந்தது. அவரது பணி, மார்டின் லூதர் கிங் உள்ளிட்டோருக்கு வழிகாட்டியாக அமைந்தது.

எக்காலத்துக்கும் பொருந்தக் கூடிய அஹிம்சை வழிமுறை, கடந்த ஓராண்டாக உலகையே மாற்றியுள்ளது. அமைதிக்குப் பதிலாக ஆயுதங்களில் அதிக முதலீடு செய்துள்ள நாடுகளுக்கு இந்த மாற்றம் கடினமானதுதான். எனினும், அஹிம்சையை தேர்ந்தெடுத்துள்ள மக்களின் மன உறுதி தொடருமானால், வளமான எதிர்காலத்தை ஏற்படுத்த முடியும் என்றார் பான்-கி-மூன்.



பலஸ்தீனம், ரமல்லாவில் ஜனாதிபதி முகமது அப்பாஸ் தன் ஆதரவாளர்களை நோக்கி கையசைக்கிறார்.

# பூமிக்கு அருகில் சுற்றும் விண்கற்கள் கண்டுபிடிப்பு

லொஸ் ஏஞ்சல்ஸ், ஒக். 03

பூமிக்கு அருகில், சுற்றிக்கொண்டிருக்கும் விண்கற்களில், 90 சதவீதத்தை அமெரிக்காவின் 'நாசா' கண்டறிந்துள்ளது. மேலும், இந்த விண்கற்களால், பூமிக்கு ஆபத்தில்லை என்றும் 'நாசா' தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் 'நாசா' ஆய்வு மையத்தால், 'வைஸ்' என்ற விண்கலம், 2009இல் ஏவப்பட்டது. பூமிக்கு வெகு அருகில் சுற்றிக்கொண்டிருக்கும் விண்கற்கள், நட்சத்திர பால் வீதி, நட்சத்திரங்கள் உள்ளிட்டவற்றை ஆய்வதற்காக இது அனுப்பி வைக்கப்பட்டது.

அதன்படி, அந்த விண்கலம் மொத்தம் 981 விண்கற்கள் பூமிக்கு அருகில் சுற்றிக்கொண்டிருப்பதைக் கண்டறிந்துள்ளது. இந்த 981 கற்களில், 911 கற்கள் ஏற்கனவே கண்டறியப்பட்டவை. இதற்கு முன்பு நடந்த ஆய்வுகளின்படி 3,300 அடிக்கும் அதிகமான அகலம் கொண்ட இந்தக் கற்கள் எந்நேரம் வேண்டுமானாலும், பூமியைத் தாக்கும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், 'வைஸ்' விண்கலம், இந்த விண்கற்களின் சுற்றுப்பாதைகளைக் கண்டறிந்துள்ளதால், இவற்றில் பெரும்பாலானவற்றால் பூமிக்கு ஆபத்து எதுவும் இல்லை என்பதும் தெரியவந்துள்ளது.

அதேநேரம், இதுவரை 3,300 அடி அகலத்துக்குக் குறைவாக நடுத்தர அளவுள்ள விண்கற்கள் மிகக் குறைவான அளவிலேயே இருக்கின்றன எனக் கருதப்பட்டது. ஆனால், 330 அடியிலிருந்து 3,300 அடி அகலம் வரையிலான 19,500 விண்கற்கள் சுற்றிக்கொண்டிருக்கின்றன என்பதையும் 'வைஸ்' கண்டறிந்துள்ளது. இவற்றில் 5,200 விண்கற்கள் ஏற்கனவே கண்டறியப்பட்டவை.

# பிலிப்பைன்ஸில் ஒரு வாரத்துக்குள் இரண்டாவது பயங்கர சூறாவளி

## 30 பேருடன் பஸ் வயலில் கவிழ்ந்தது

மணிலா, ஒக். 03

கடந்த ஒரு வாரத்துக்குள் இரண்டாவது கடும் சூறாவளி பலத்த மழையோடு, வடபிலிப்பைன்ஸ் பிராந்தியத்தை சனிக்கிழமை மூர்க்கமாகத் தாக்கியது. இதனால் பல அனர்த்தங்கள் விளைந்துள்ளன.

லூனா நகரப் பகுதியில் 30 பேர் பயணித்த பஸ்ஸொன்று வயல்வெளியில் தலைகுப்புற வீழ்ந்தது. எனினும், ஒருவரும் காயப்படவில்லை. அயல் கிராமவாசிகளால் அனைவரும் உடனடியாக மீட்கப்பட்டார்கள் என ஏ.பி.செய்தி நிறுவனம் தெரிவித்தது.

இஸபெல்லா மாகாணத்தை இச்சூறாவளி உக்கிரமாகத் தாக்கியது. ஒரு மணித்தியாலத்துக்கு 195 கிலோ மீற்றர் (121 மைல்) வேகத்தில் இது வீசியது. தற்போது வீறுபெற்றுவரும் இச்சூறாவளி, நகர்ந்து சீன ஹெய்னான் தீவையும், வியட்நாமையும் தாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இஸபெல்லா மலைப் பிராந்தியத்தில் மண்சரிவுக்குள் ஒரு மினி பஸ் சிக்கியது. இதில் பெண்ணொருவர் பலியானார். பலர் காயமடைந்தனர். மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது. மரங்கள் வேரோடு பிடுங்கி எறியப்பட்டுள்ளன. வீட்டுக் கூரைகள் தூக்கி வீசப்பட்டுள்ளன.

நிஸாட் சூறாவளி கடந்த செவ்வாய்க்கிழமை நகர்ந்த மார்க்கமாகவே தற்போதைய சூறாவளியும் நகர்ந்துகொண்டிருக்கிறது. கடந்த செவ்வாய்க்கிழமை வீசிய சூறாவளி அனர்த்தங்களுக்கு 52 பேர் பலியாகியுள்ளனர். ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்துள்ளனர்.

# மெக்சிகோவில் ஒப்பந்த முறையில் திருமணம் புதிய சட்டம் வருகிறது

மெக்சிகோ சிட்டி, ஒக். 03

வட அமெரிக்க நாடான மெக்சிகோவில் தற்போது கலாசார சீரழிவு ஏற்பட்டுள்ளது. திருமணம் என்பது ஒரு பொழுதுபோக்காக ஆகிவிட்டது. தம்பதிகளிடையே அதிக அளவில் விவாகரத்துகள் ஏற்படுகின்றன.

அதற்கு ஓரின சேர்க்கையாளர்கள் திருமணம் காரணமாகக் கூறப்படுகிறது. இங்கு இந்தத் திருமணத்துக்கு சட்ட அங்கீகாரம் வழங்கப்படுகிறது. இதனால் தம்பதிகளிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு விவாகரத்து வரை செல்கின்றனர். அதைத் தடுக்க மெக்சிகோவில் திருமண சட்டத்தில் மாற்றம் கொண்டு வரப்படவுள்ளது.

அதன்படி திருமணத்தை ஒப்பந்த முறையில் செய்துகொள்ளலாம். தொடக்கத்தில் கணவன் - மனைவி இருவரும் சேர்ந்து வாழ 2 ஆண்டுகள் மட்டும் ஒப்பந்தம் அமுலில் இருக்கும்.

அதன் பின்னர் அவர்களுக்கு இடையே சுமுகமான உறவு தொடர்ந்தால் ஒப்பந்தம் நீடிக்கப்படும். இல்லாவிட்டால் இருவரும் பரஸ்பரம் பிரிந்து விடலாம். இதன் மூலம் நீதிமன்றத்துக்கு அலைந்து விவாகரத்து பெறுவது தவிர்க்கப்படும்.

இந்தச் சட்டத்திருத்தம் இன்னும் ஒரு வாரத்தில் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படவுள்ளது. அதை நிறைவேற்றுவதில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். ஆனால் இத்தகைய திருமணத்துக்கு கிறிஸ்தவ தேவாலயங்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.


# இரு முகங்கள், இரு வாய்கள் மூன்று கண்கள் கொண்ட பூனை

இரு முகங்கள், இரு வாய்கள், மூன்று கண்கள் கொண்ட பூனையைப் பார்த்திருக்கிறீர்களா? இதுபோன்ற அதிசயப் பிறவிகள் பிறப்பது சகஜம்தான். என்றாலும் அவை நீண்ட காலம் உயிருடன் இருப்பது பேரதிசயம் அல்லவா? அப்படி ஒரு பூனை அமெரிக்காவில், 12 ஆண்டுகளாக நன்றாக வாழ்ந்துகொண்டிருக்கிறது.

அமெரிக்காவின் மாசாசூசெட்ஸ் மாகாணத்தில், நோர்த் கிராப்டனில் இயங்கிவரும் கால்நடை மருத்துவக் கல்லூரியொன்றில், மார்ட்டி ஸ்டீவன்ஸ் என்ற பெண் பணியாற்றி வருகிறார்.

12 ஆண்டுகளுக்கு முன்னர் ஒருவர் இரு முகங்கள் உள்ள, பூனைக் குட்டி ஒன்றைக் கொண்டு வந்தார். அந்தப் பூனை பிறந்து, ஒரு நாள்தான் ஆகியிருந்தது. அதற்கு இரு முகங்களும், இரு வாய்களும், இரு மூக்குகளும், மூன்று கண்களும் இருந்தன.

அதிசயப் பிறவியான இது உயிர் பிழைக்குமோ பிழைக்காதோ என்ற சந்தேகத்தில் கால்நடைக் கல்லூரியில் விட்டுவிடலாம் என்ற முடிவோடுதான் அந்த நபர் பூனையைக் கொண்டு வந்திருந்தார். தற்செயலாகப் பூனையைப் பார்த்த ஸ்டீவன்ஸ், தான் அதை வாங்கி வளர்க்க ஆசைப்படுகிறார் எனத் தெரிவித்தார். வந்த நபரும், பூனையை ஸ்டீவன்சிடம் கொடுத்துவிட்டுச் சென்றார். அதன்பின் ஸ்டீவன்சிடம்தான் அந்தப் பூனை வளர்ந்தது. கடந்த, 12 ஆண்டுகளாக எவ்வித நோயும் பாதிப்பும் இல்லாமல் திடகாத்திரமாக உள்ள அந்தப் பூனைக்கு 'பிராங்க் அண்ட் லூயி' என்று ஸ்டீவன்ஸ் பெயரிட்டுள்ளார்.



பொதுவாக இதுபோன்ற அதிசயப் பிறவிகள், கொஞ்ச நாள் மட்டுமே உயிர் வாழும். சுவாசிப்பதில், உண்பதில், செரிமானம் ஆவதில், பல பிரச்னைகள் அடுத்தடுத்து தோன்றி, அவற்றின் உயிர்களைக் காவுகொண்டு விடும். ஆனால், அதிசயத்திலும் அதிசயமாக, பிராங்க் அண்ட் லூயி கடந்த, 12 ஆண்டுகளாக, திடகாத்திரமாக வாழ்ந்து வருகிறது. இரு வாய்கள், இருந்தாலும் ஒரு வாய் வழியாகவே உண்கிறது. மூன்று கண்கள் இருந்தாலும் இரண்டின் வழியாகத்தான் பார்க்கிறது. கடந்த, 12 ஆண்டுகளாக எவ்வித பாதிப்பும் இல்லாமல், லூயி வாழ்ந்து வருவதால், அடுத்தாண்டுக்கான கின்னஸ் சாதனைப் புத்தகத்தில், இடம் பெறப் போகிறது. (எ)

50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியில்

# மூன்றாவது தடவையாகவும் கிண்ணத்தை சுவீகரித்தது யாழ். பல்கலைக்கழக அணி




வலி வடக்கு ஒக்.3

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கிரிக்கெட் அணி தொடர்ந்து மூன்றாவது தடவையாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டுப் பேரவை நடத்தும் 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டியில் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டுப் பேரவை யாழ். மாவட்ட கிரிக்கெட் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திய 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணியும் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழக அணியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழக அணி 49.1 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 197 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

பங்குஜன் 68 உத்தம குமரன் 58 தீபன் 11 ஓட்டங்களை பெற்றதுடன் உதிரிகளாக 22 ஓட்டங்களும் பெறப்பட்டன.

பல்கலைக்கழக கிரிக்கெட் அணியைச் சேர்ந்த ஜனார்தனன் 10 ஓவர்கள் பந்து வீசி 27 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுட்டுக்களையும் நிசாந்தன் 10 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 30 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் ஜெயரூபன் 10 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் கிரிசாந்தன் 05 ஓவர்கள் பந்து வீசி 07 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

198 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பல்கலைக்கழக அணி 40.3 ஓவர் களில் 04 விக்கெட்டுக்களை இழந்து 200 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

ஜெயரூபன் 70 தசரிதன் 50 செல்ரன் ஆட்டமிழக்காது 30 ஓட்டங்களை பெற்றனர்.

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத் தைச்சேர்ந்த சுஜீபன் 06 ஓவர்கள் பந்து வீசி 11 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் ரம்மிய ராகுலன் 05 ஓவர்கள் பந்து வீசி 30 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் சாம்பவன் 09 ஓவர்கள் பந்து வீசி 36 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி சார்பில் அணித் தலைவர் ஜெயரூபன் போட்டியின் தொடர் ஆட்டநாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டதுடன் சிறந்த களத்தடுப்பாளராக செல்ரனும் சிறந்த பந்து வீச்சாளராக ஜனார்தனும் சிறந்த துடுப்பாட்ட வீரனாக கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த பங்குஜனும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

# தெல்லிப்பழை உதைபந்தாட்டம் கட்டுவன்புலம் 3 ஆம் இடம்

வலி.வடக்கு, ஒக்.3

தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 13 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை கட்டுவன் புலம் மகாவித்தியாலயம் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற மூன்றாம் இடத்துக்கான இந்தப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் தெல்லிப்பழை கட்டுவன் புலம் மகாவித்தியாலயமும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகிய போது இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொண்ட போதும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி தொடர்ந்து உற்சாகமான நிலையில் மோதிக் கொள்ளாத நிலமையே காணப்பட்டது.

முதல் பாதி ஆட்டத்தில் கட்டுவன் புலம் மகாவித்தியாலயம் 02 கோல்களை பெற்று முன்னணியில் நின்ற வேளையில் முதல்பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பிக்கும் போது இரு அணிகளும் கடும் உற்சாகத்துடன் மோதிய போதிலும் கட்டுவன் புலம் மகாவித்தியாலயம் மேலும் இரண்டு கோல்களைப் பெற்று முன்னணியில் நின்ற வேளையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் கட்டுவன் புலம் மகாவித்தியாலயம் 04:00 என்ற கோல்கணக்கில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை வெற்றி பெற்று வலய மட்டப் போட்டிகளில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.,

(எ-86)

# வடமாகாண பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள்

வலி. வடக்கு, ஒக்.03

வட மாகாணக் கல்வித் திணைக்களப் பாடசாலை மட்டத்தில் விளையாட்டை அபிவிருத்தி செய்யும் முகமாகப் பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் செயல் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வட மாகாண ஆளுநரின் பணிப்புரைக்கு அமைவாக முன்னெடுக்கப்பட்டுள்ள இந்தச் செயற்றிட்டத்தில் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகாவித்தியாலயத்துக்கு கோலூன்றிப் பாய்தலுக்கான கோல் வழங்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையே தேசிய மட்டத்தில் நடைபெறும் களப் போட்டிகளில் கோலூன்றிப் பாய்தல் போட்டியில் வட மாகாணப் பாடசாலைகள் அதிக எண்ணிக்கையான பதக்கங்களை பெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் தென்மராட்சிப் பாடசாலைக்கு கோல் வழங்கப்பட்டமையால் இந்தப் பாடசாலையும் கோலூன்றிப் பாய்தலில் தமது திறமைகளை வெளிப்படுத்த சந்தர்ப்பம் கிடைத்தமை மாணவர்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ளது.

# படையினர்- பொதுமக்கள் நல்லுறவுக் கிண்ண ருவென்ரி - 20 கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கடற்படை அணி, ஜொனியன்ஸ் வி.க, கழுகுகள் வி.க ,ஜொலிஸ்ரார் வி.க.வெற்றி

யாழ்ப்பாணம், ஒக.03

படையினர் பொதுமக்கள் நல்லுறவு வெற்றிக் கிண்ணத்துக்கான யாழ்.மாவட்ட கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான 20:20 கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடர் கடந்த சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் யாழ்.மத்திய கல்லூரி, வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானங்களில் இடம்பெற்றன.

இந்தக் கிரிக்கெட் ஆட்டங்களில் கடற்படை அணி, கழுகுகள் விளையாட்டுக் கழகம், ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகம் ஆகியவை வெற்றி பெற்றுள்ளன. கடந்த சனிக்கிழமை காலை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் கடற்படை அணியை எதிர்த்து பற்றிசியன் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கடற்படை அணியினர் 20 ஓவர்கள் நிறைவில் குருசிங்க 51 ஓட்டங்களையும், மெண்டிஸ் ஆட்டம் இழக்காமல் 46 ஓட்டங்களையும், புஸ்பகுமார ஆட்டம் இழக்காமல் 28 ஓட்டங்களையும், தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் பற்றிசியன்ஸ் விளையாட்டுக்கழக கஜமுகன் 2 விக்கெட்டுக்களையும், சுஜீவன், சஜித்திரன் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

159 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழக அணியினர் 15.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டினையும் இழந்து 88 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஜெந்திரன் 16, சஜிந்திரன் 13, நிலோசன் 12, சுஜீவன் 13, ஓட்டங்களைத் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் கடற்படை அணி சார்பாக இந்திக்க 3 விக்கெட்டினையும், அருணசிறி 4 விக்கெட்டினையும், மதுசிங்க, சில்வா, குருசிங்க, தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர். கடற்படை அணி 70ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

மாலை இடம் பெற்ற ஆட்டத்தில் ஓல்ட்கோல்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத் தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 202 ஓட்டங்களைப் பெற்றது.

மணிவண்ணன் 30, சயிலேஸ்வரன் 58, உமாதரன் 59, ஜனார்த்தனன் 23 ஓட்டங்களைத் தமது அணிசார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஓல்ட்கோல்ஸ் விளையாட்டுக் கழக அணி சார்பாக கஜேந்திரன் 2 விக்கெட்டுக்களையும், ஜெயசுதன், சிறிகுகன், தீலிபன் ஆகியோர் முறையே தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

203 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஓல்ட் கோல்ஸ் விளையாட்டுக் கழக அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது. மயூரன் 21, சிறிகுகன் 40, சிராளன் 36, மதுஷன் 10, ஜோய் சோகாண் 20 ஓட்டங்களை தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கைலேஸ்வரன் 4 விக்கெட்டுக்களையும், மணிவண்ணன் 2 விக்கெட்டுக்களையும், கார்த்திக் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர். ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 40 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

சனிக்கிழமை காலை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் அரியாலை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வல்வெட்டித்துறை கழுகுகள் அணி மோதிக் கொண்டது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய வல்வெட்டித்துறை கழுகுகள் விளையாட்டுக் கழக அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டினை இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அனுரதன் 37, சிவரூபன் 23, முல்லைத்திவ்வியன் 12, கோகுலன் 18 ஓட்டங்களைத் தமது அணிசார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் அரியாலை விளையாட்டுக் கழக அணி சார்பாக, கோகுலன் 3, விதுஷன், துசாந் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினை வீழ்த்தினர்.

126 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி யெனப்பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அரியாலை விளையாட்டுக் கழக அணி 19 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 115 ஓட்டங்களை தமது அணிசார்பாக பெற்றது. கோகுலன் ஆட்டமிழக்காமல் 60, கவிந்தன் 12, நிரோஷன் 14, கோபிராம் 11 ஓட்டங்களையும் தமது அணிசார்பாக பெற்றனர்.

பந்துவீச்சில் கழுகுகள் விளையாட்டுக்கழக அணிசார்பாக ரஞ்சித் 4 விக்கெட்டுக்களையும், கோகுலன், நிருஷாந்த தலா 2 விக்கெட்டுக்களையும் பிரசாத் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

சனிக்கிழமைமாலை இடம் பெற்ற ஆட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் விளையாட்டுக்கழக அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றது.

அகிஷன் 24, சதீஸ்கண்ணா 10, ஜக்ஷன் 19, பிரசாத் 10, ஓட்டங்களை தமது அணிசார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணி சார்பாக காண்டீபன், லவேந்திரா தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

85 ஓட்டங்களை பெற்றால் வெற்றிஎன பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழ அணி ஒரு விக்கெட்டை இழந்து 88 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் அன்புஜன் ஆட்டமிழக்காமல் 41 ஓட்டங்களையும், ரஜிந்தன் 35 ஓட்டங்களையும் தமது அணிசார்பாகப் பெற்றனர்.

(எ-23)

## மும்பையின் தொடர் வெற்றிக்கு முற்றுப்புள்ளி! வைத்தது வேல்ஸ்



மும்பை இந்தியன்ஸ் அணிக்கும், ஆஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் அணிக்குமிடையிலான ஆட்டத்தில் சவுத் வேல்ஸ் அணி 5 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அந்த அணி வீரர் ஸ்ரீவன் ஸிமித்தின் அபார ஆட்டத்தின் மூலம் இந்த வெற்றியைப் பதிவு செய்தது.

சம்பியன் லீக் தொடரின் குழு 'ஏ' ஆட்டம் நேற்று சென்னையில் நடைபெற்றது. மாலை இடம்பெற்ற ஆட்டத்தில், முதலிரு ஆட்டங்களிலும் வெற்றி பெற்ற மும்பை இந்தியன்ஸ் அணியும், ஆஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

பிளிசாட், கன்வார் ஜோடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கியது. முதலாவது பந்து பரிமாற்றத்தை ஸ்ரூவட் கிளார்க் வீசினார். முதலாவது பந்து பரிமாற்றத்திலேயே மும்பையின் முதலாவது இலக்கு வீழ்ந்தது. பிளிசாட் ஒரு ஓட்டத்துடன் வெளியேறினார். இரண்டாவது பந்து பரிமாற்றத்தை ஸ்ரெக் வீச அந்த பந்து பரிமாற்றத்தில் ஒரு நான்கு ஓட்டத்தை விளாசினார் கன்வார். தொடர்ந்து அதே பந்து பரிமாற்றத்தில் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து மூன்றாவது பந்து பரிமாற்றத்தை மீண்டும் கிளார்க் வீச ராயுடு 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். மும்பை 9 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்து தடுமாறியது.

அதன் பின்னர் இணைந்த பிராங்லின், பொலாட் ஜோடி துடுப்பாட்டத்தை தொடர்ந்தது. 18 ஓட்டங்கள் 4 ஆவது இலக்குக்காக பகிரப்பட்ட நிலையில் பொலாட் 8 ஓட்டங்களுடன் குமின்ஸ் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். சைமன்ஸ் 9 ஓட்டங்களுடன் ஸ்ரீவன் ஓ கவீயின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். 11.3 பந்து பரிமாற்றங்களில் 50 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்தது. தொடர்ந்த வந்த ராஜகோபால் சதிஷ் 14 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். இருப்பனும் மறு முனையில் பிராங்லின் நிதானமாக ஓட்டங்களைச் சேர்த்தார். அணித் தலைவர் ஹர்பஜன் 15 ஓட்டங்களுடன் இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் 20 பந்து பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 100 ஓட்டங்களைப் பெற்றது. பிராங்லின் ஆட்டமிழக்காமல் 42 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ஸ்ரூவட் கிளார்க், ஸ்ரீவுன் ஓ கவீ தலா 2 இலக்குகளை கைப்பற்றினர்.

பதிலுக்கு எட்டக் கூடிய இலக்கை விரட்டத் தொடங்கிய நியூ சவுத் வேல்ஸ் அணியும் ஆரம்பத்தில் தடுமாறியது. இரண்டாவது பந்து பரிமாற்றத்தை நெச்சிம் வீசி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் இருவரையும் ஆட்டமிழக்கச் செய்தார். மூன்றாவது பந்து பரிமாற்றத்தை மலிங்க வீச அந்த பந்து பரிமாற்றத்தில் அணித்தலைவர் ஹட்டிச் ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்தார். அதன் பின்னர் சிறிது நேரம் இணைப்பாட்டம் பகிரப்பட்டாலும் தொடர்ந்து ஆறாவது பந்து பரிமாற்றத்தில் நெச்சிம், டானியல் ஸ்மித்தை 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்கச் செய்தார். சஹாலா வீசிய அடுத்த பந்து பரிமாற்றத்தில் ஹென்றிகியூஸ் ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்தார். சவுத் வேல்ஸ் 6.2 பந்து பரிமாற்றத்தில் 28 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்திருந்தது.

அதன் பின்னர் ஸ்ரீவன் ஸ்மித், ரோகிரர் இணைந்து அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றனர். ஆரம்பத்தில் மெதுவாக ஓட்டங்களைச் சேர்த்த ஜோடி, மும்பையின் பலவீனமான பந்து வீச்சைப் பயன்படுத்தி ஓட்டங்களைக் குவித்தது. ஹர்பஜன்சிங்கினால் இலக்குகள் இழந்து வேல்ஸ் தடுமாறிய வேளையில் உரிய வகையில் களத்தடுப்பு அமைக்கப் படாததால் ஸ்மித், ரோகிரர் ஜோடி ஓட்டங்களைப் பெற்றது.

இறுதியில் 17 பந்து பரிமாற்றங்களில் 5 இலக்குகளை மாத்திரம் இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. ஸ்மித் 47 பந்துகளில் 5 நான்கு ஓட்டங்கள், ஒரு ஆறு ஓட்டம் அடங்கலாக 45 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றார். மறு முனையில் ஆடிய ரோகிரர் 26 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் நெச்சிம் 3 இலக்குகளை கைப்பற்றினார். ஆட்ட நாயகனாக ஸ்ரீவன் ஸ்மித் தெரிவானார். (15)

# வீழ்ந்தது சென்னை வென்றது ரொபாகோ

சம்பியன் லீக் ஆட்டத்தில் முதலாவது வெற்றியை மேற்கிந்தியத் தீவுகளின் ரினினாட் ரொபாகோ நேற்று பெற்றுக் கொண்டது. சென்னையை அதன் சொந்த மண்ணில் 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி கொண்டதன் மூலம் இந்த வெற்றியை பெற்றது.

சம்பியன் லீக் தொடரின் குழு 'ஏ' ஆட்டம் நேற்று சென்னையில் நடைபெற்றது. இரவு இடம்பெற்ற ஆட்டத்தில் சென்னை சூப்ப கிங்ஸ் அணியும், முதலிரு ஆட்டங்களிலும் தோல்வியைத் தழுவிய ரினினாட் ரொபாகோ அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ரினினாட் ரொபாகோ அணித்தலைவர் டரன் கங்கா முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.

லென்டல் சிம்மன்ஸ், பேர்கின்ஸ் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். சென்னையின் பந்து வீச்சை சமாளித்து அதிரடியாக ஓட்டங்கள் குவிக்க முடியாமல் திணறினர். முதல் ஆறு பந்து பரிமாற்றங்களில் 4 நான்கு ஓட்டங்கள் மட்டுமே பெறப்பட்டன. இருப்பினும் இலக்கு இழப்பின்றி சிறப்பான ஆரம்பத்தை அமைத்தனர். ஆட்டத்தின் ஒன்பதாவது பந்து பரிமாற்றத்தை அஸ்வின் வீச பேர்கின்ஸ் முதலாவது ஆறு ஓட்டத்தை விளாசினார். அடுத்த பந்து பரிமாற்றத்தை ஜகாத்தி வீச இரண்டாவது பந்தில் ஆறு ஓட்டம் விளாசினார். 56 பந்துகளில் அணி தனது அரைச்சதத்தை பூர்த்தி செய்தது. தொடர்ந்து அடுத்த பந்திலேயே பேர்கின்ஸ் 28 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள், 2 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 34 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்த பந்து பரிமாற்றத்தில் சிம்மன்ஸ் 20 ஓட்டங்களுடன் ரன் அவுட்டானார்.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களின் ஆட்டமிழப்பை தொடர்ந்து ரொபாகோவின் இலக்குகள் வேகமாக சரிந்தன. டரன் பிராவோ ஒரு ஓட்டத்துடனும், டரன் கங்கா 8 ஓட்டங்களுடனும், டினேஸ் ராம்டின் 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து வெளியேறினர். மத்திய வரிசையில் அட்ரியன் பரத் மாத்திரம் நிலைத்து நின்று ஆடி 23 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். இறுதி 5 பந்து பரிமாற்றங்களில் மாத்திரம் 4 இலக்குகளை இழந்து 49 ஓட்டங்கள் பெறப்பட்டது. ஒரு கட்டத்தில் 100 ஓட்டங்களையாவது அணி எட்டுமா என்ற நிலையிலிருந்த அணியை கெவன் கூப்பர் மாற்றியமைத்தார். சென்னை பந்து வீச்சாளர்களின் பந்து வீச்சை அதிரடியாய் பந்தாடினார். இறுதியில் கூப்பர் 10 பந்துகளை மாத்திரம் எதிர்கொண்டு 3 ஆறு ஓட்டங்கள், ஒரு நான்கு ஓட்டங்கள் அடங்கலாய் 28 ஓட்டங்கள் விளாசினார்.

இருபது பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் பொலஞ்சர் 3, ஜகாத்தி 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இலகுவான இலக்கை விரட்டத் தொடங்கியது சென்னை. ஹஸி, விஜய் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். ஆட்டத்தின் முதலிரண்டு பந்து பரிமாற்றங்களிலும் சென்னை அதிரடியைக் காட்டியது. மூன்றாவது பந்து பரிமாற்றத்தை சுனில் நரேன் வீச சென்னையின் அதிரடி அடங்கத் தொடங்கியது. மூன்றாவது பந்து பரிமாற்றத்தில் சென்னையின் முதலாவது இலக்கு வீழ்த்தப்பட்டது. விஜய் 6 ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்து வந்த ரெய்னா, நரேனின் இரண்டாவது பந்து பரிமாற்றத்தில் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மறு முனையில் சிறப்பாக ஆடிய ஹஸியும் 13 ஓட்டங்களுடன் ராம்போலின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். சென்னை 27 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்து தடுமாறியது.

சுப்பரமணியம் பத்திரிநாத், சஹா இருவரும் இணைந்து 4 ஆவது இலக்குக்காக சிறப்பாக ஆடினர். மெதுவாகவே இந்த ஜோடி ஓட்டங்களைச் சேர்த்தது. 21 ஓட்டங்களை 4 ஆவது இலக்குக்காக பகிர்ந்த நிலையில் சஹா 8 ஓட்டங்களுடன் கூப்பரின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து பத்திரிநாத் 15 ஓட்டங்களுடன் 'ரன் அவுட்' ஆனார். சென்னை 11.5 பந்து பரிமாற்றங்களில் 52 ஓட்டங்களுக்கு 5 இலக்குக்ளை இழந்தது.

அதன் பின்பு இணைந்த அணித் தலைவர் டோனி, பிராவோ நிதானமாக ஓட்டங்கள் குவித்தனர். டோனி மெதுவாக ஓட்டங்கள் சேர்க்க மறுமுனையில் பிராவோ அதிரடியாக ஆடினார். இருப்பினும் 16.3 பந்து பரிமாற்றங்களில் 75 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆறாவது இலக்கு சரிக்கப்பட்டது. டோனி 22 பந்துகளில் 7 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த மோர்கல் அதிரடியாக முயற்சித்த போதும் ரொபாகோவின் சிறப்பான பந்து வீச்சை சமாளிக்க தடுமாறினர். இறுதி இரு பந்துகளில் 25 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் கடைசி இரு பந்துகளிலும் மோர்கல் அடுத்தடுத்து இமாலய சிக்ஸர் விளாசினார். இருப்பினும் சென்னை 20 பந்து பரிமாற்றம் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 111 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதன் மூலம் 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

பிராவோ 22 பந்துகளில் 5 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 32 ஓட்டங்களையும், மோர்கல் 12 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 18 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர். பந்து வீச்சில் சுனில் நரேன் 4 பந்து பரிமாற்றங்கள் வீசி 8 ஓட்டங்கள் கொடுத்து 3 இலக்குகளை சரித்தார். ஆட்ட நாயகனாக சுனில் நரேன் தெரிவானார். (15)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



இல. 75, D8 உருத்திரபுரத்தை வசிப்பிடமாகக் கொண்ட கிளி/ புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை மாணவி

**செல்வி ஜீவரட்ணம் டிலக்ஷனா**

அவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 164 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் மேலும் பல கலைகளும்பெற்று உயர்வடைய பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்தும் உள்ளங்கள்:
அப்பா, அம்மா, சகோதரர்கள், உறவினர்கள்.

## மரண அறிவித்தல்

### திருமதி சோமாஸ்கந்தா கௌரியம்மா



யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, பிறவுண் வீதியைச் சேர்ந்த சோமாஸ்கந்தா கௌரியம்மா (30.09.2011 வெள்ளிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - நாகரத்தினம் தம்பதியரின் ஏக புத்திரியும், காலஞ்சென்றவர்களான அருளம்பலம் யோகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அருளம்பலம் சோமாஸ்கந்தா (ஓய்வுபெற்ற வர்த்தக வங்கி சிறாப்பர்) அவர்களின் அன்பு மனைவியும், குகச்செல்வி, காலஞ்சென்ற குகேந்திரரூபன் மற்றும் அற்புதரூபன், நிரூபன், சொரூபவதி (ஆசிரியை, யாழ். சன்மார்க்க மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத்தாயும், காலஞ்சென்ற கணேசபிள்ளை மற்றும் சிவகௌரி, பவானி, ராஜேஸ்வரி, ரகுபதி (ஆசிரியர், யாழ்.இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்றவர்களான பத்மநாதன், சரவணபவன், பசுபதி, சண்முகநாதன் ஆகியோரின் அருமைச் சகோதரியும், ராசம்மா, விநாயக விசாலாட்சி, கமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும், கிரிதரன், யாழினி, தனசுதன், சுபா, சுஜித்தன், கஸ்தூரி, பாபு, யதுஷன், விதுஷன், ரிபனி, ரெஜி, வித்தகன், லதாங்கி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பானுஜன், விசாளி, மிது, திவிஜேஸ் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2011) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 3 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

*224, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.*

*தகவல்:* குடும்பத்தினர்.

## தீவக அதிபர்களுக்கு இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.03

தீவக கல்வி வலய பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று காலை 9 மணிக்கு வலயக்கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யுனிசெவ் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ள இந்தக் கூட்டத்துக்கு வரும் அதிபர்கள் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் தரவுகள் மற்றும் அனைத்து விடயங்களுடன் வருமாறு கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-10)

## பல்கலையில் இன்று நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், ஒக்.03

பேராசிரியர் செல்லத்துரை சிவஞானசுந்தரம் நினைவுப் பேருரை இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

நினைவுப் பேருரையை ''நந்தியின் புனைகளின் ஈழ பின்- காலனிய சமூகம்' எனும் தலைப்பில் சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத் துறைத் தலைவரும் பேராசிரியருமான வி.அரசு நிகழ்த்துவார்.

இதில் ஆர்வலர்கள் அனைவரையும் பங்குகொண்டு பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது.

**விற்பனைக்கு**

*யமுனா பாறி ஆடும் குட்டியும் 1½ போத்தல் பால் கறக்கக் கூடியது. விற்பனைக்குண்டு.*

*158/4 தாசன் பாம், கோவில் வீதி, யாழ்ப்பாணம்.*

**வாடகைக்கு**

முல்லைத்தீவில் கடைகள், கடை அமைக்கக் கூடிய நிலம் என்பன வாடகைக்கு/ குத்தகைக்கு உண்டு
தொடர்பு- 0772489122

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவராசா பவளமலர்



உடுவில் உதயசூரியன் வீதியைப் பிறப்பிடமாகவும், நீர்கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவராசா பவளமலர் (இராசா) கடந்த 01.10.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவராசாவின் அன்பு மனைவியும், சிவபாக்கியம், காலஞ்சென்றவர்களான செல்வமலர், சந்திரவதி, தவராசா மற்றும் சந்திராதேவி (ஜேர்மனி), பத்மலீலா, சக்திமலர் ஆகியோரின் அன்புச் சகோதரி யும் தேவராசாவின் (பிரான்ஸ்) அன்பு மைத்துனியும், வஜித்தா (ஆசிரியை, நீர்கொழும்பு தோப்பு R.C.T.M. ), கௌசல்லியா (ஆசிரியை யா/மல்வம் T.M.S.), சுகிர்தா (சுதா - ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் சதீஸ்குமார் ( I.P.Z.,கட்டுநாயக்கா), இராகவன் (லண்டன்), றேன்சி டானியல் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியும், டேவின் சந்தோஸ், பொபினா றித்திக்கா, துஷாகரன், ஜெயதாரணி, பினோசன் (ஜேர்மனி), பினோசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (03.10.2011) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப. 4.00 மணியளவில் பூதவுடல் நல்லடக்கத்துக்காக தோப்பு சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 31, பிளான்ஸ் தோட்டம், தோப்பு, கொச்சிக்கடை, நீர்கொழும்பு*

*தகவல்:* சதீஸ்குமார் (மருமகன்)

### அருட்சகோதரி மேரி கிளாறிஸ் தேவசகாயம் (தி.கு)



வவுனியாவைப் பிறப்பிடமாகவும், யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவரும், பாஷையூர் திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் வசித்தவருமான அருட் சகோதரி மேரி கிளாறிஸ் தேவசகாயம் நேற்று (02.10.2011) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் இறைந்து விட்டார்.


அன்னாரது பூதவுடல் இன்று (03.10.2011) திங்கட்கிழமை பி.ப 3 மணிக்கு யாழ். திருக்குடும்ப மாகாண இல்லத்தில் இருந்து யாழ். புனித மரியன்னை பேராலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின்னர் யாழ். புனித மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

*தகவல்:*

*121, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.*

*அருட்சகோதரி யோலண்ட் மத்தியாஸ் மாகாணத் தலைவி.*

## 16ஆம் நாள் நினைவலைகள்



மலர்வு:
23.03.1949

உதிர்வு:
17.09.2011

அமரர்
**சின்னத்துரை-தனபாலசிங்கம்**
(முன்னாள் சுகந்தனி விளையாட்டுக் கழக உரிமையாளரும்
தற்போதைய Jaffna Rest and Bar) உரிமையாளரும்)

**என் வாழ்வின் ஒளியூட்டியே.....**

அத்தானே! என் அருமை அத்தானே
அந்நிய தேசத்திலே அழுகின்றோம் — நாம் இன்று
உம்மை காணமுடியாமல்
உறங்கவும் முடியவில்லை
துடிக்கின்றோம் — நாம் இங்கு
குஞ்சுகளை கோழி காப்பது போல்
எம்மை நீர் காத்தீரே
தந்தை தாய் இருந்தபோதும் — எம்
தாய் தந்தை ஆனவரே — எங்கள்
தாயுமானவரே
எங்கு சென்றீர்
எம்மை எல்லாம் தவிக்கவிட்டு
தூர தேசம் சென்றதேனோ
தவிக்கிறோம் துடிக்கின்றோம்
உம் முகம் பாராமல் — எம்
வாழ்வில் ஒளி இல்லை
அத்தானே நீர் இல்லையெனில்
எமக்கோர் முகவரி இருந்திடவும் வாய்ப்பில்லை
எம் வாழ்வை சிறப்பிக்க
மெழுகுவர்த்தியானவரே
நீர் தானே எம் முகவரியானீர்
நீர் தானே எம் வாழ்வின் ஒளியானீர்
நீர் தானே எம் வாழ்வின் வழிகாட்டியானீர்
உங்கள் பாத சுவடுகளிலே
எம் பாதங்கள் பயணிக்கும்
நீர் காட்டிய வழிதன்னிலே
எம் வாழ்வும் தொடர்ந்திருக்கும்
உங்கள் மீது ஆணை கொண்டோம்
உம் வழி தொடர்ந்திடுவோம்...!

அன்பு மச்சான்
கரிகாலன் (கரன் - கனடா)

## போர்க்குற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச விசாரணைகளுக்கு வெளிப் படையான ஆதரவை அமெரிக்கா வழங்க வேண்டும் என்றும், அதன்மூலம் இலங்கையில் இடம்பெற்ற குற்றச்செயல்கள் மற்றும் மீறல்களுக்குப் பொறுப்புக் கூறுவதற்கான நகர்வில் முதலடியை எடுத்து வைக்கமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒக்ரோபர் 29ஆம் திகதிக்கு முன்னர் ஐயாயிரம் பேரின் கையொப்பங்களு டன் இந்த மனுவைக் கையளித்தால், அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று வெள்ளை மாளிகை தமக்கு அறிவித்துள்ளது எனவும் ஜிம் மக் டொனால்ட் தெரிவித்துள்ளார்.

எனினும் மனித உரிமை அமைப்புக்கள் தெரிவிக்கும் போர்க் குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசு தொடர்ந்து நிராகரித்து வருகிறது. அவை அடிப்படை ஆதாரங்கள் அற்றவை என்று அவை கூறுகின்றன. (உ)

## வாக்காளராகப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தின் கீழ் இவர்களும் தமது பெயர்களை வாக்காளர் இடாப்பில் பதிந்து கொள்ள முடியும்.

யாழ். மாவட்டத்தில் இந்த விடயத்தில் தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான அமைப்பு (கபே) விசேட வேலைத் திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளது என்று அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் உதயனுக் குத் தெரிவித்தார்.

### வீடு வீடாகச் சென்று படிவம் விண்ணப்பிக்க ஏற்பாடு

கபே அமைப்பின் பிரதிநிதிகளும் தொண்டர்களும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் இதனை ஊக்குவிக்கும் முகமாக வீடு வீடாகச் சென்று விண்ணப்பப்படிவங்களை விநியோகிக்க வுள்ளனர். அதேவேளை இந்த அமைப்பினர் நகரங்கள் மற்றும் கிராமங்கள் தோறும் வாகனங்களில் பிரசார நடவடிக்கைகளிலும் ஈடுபடவுள்ளனர்.

வாக்காளர் இடாப்பில் தமது பெயர்களை மீள் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்களை இந்த நடமாடும் வாகனங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

### கையளிக்கும் முறை

விண்ணப்பப்படிவங்களைப் பெற்று அவற்றை பூர்த்தி செய்து அவ்வப்பகுதி கிராமசேவகர்களின் உறுதிப்படுத்தலுடன் பிரதேச உதவி தேர்தல் ஆணையாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

கிராம சேவகர்களிடம் உறுதிப்படுத்தலைப் பெறமுடியாதவர்கள் நேரடியாக உதவி தேர்தல் ஆணையாளர்களுக்கும் அனுப்பி வைக்க முடியும்.

இவ்வாறு நேரடியாக அனுப்பி வைப்பவர்கள் தமது சொந்த பிரதேச கிராம சேவகர் பிரிவின் பெயர், கிராமத்தின் பெயர், வீட்டு இலக்கம் என்பவற்றை தவறாமல் குறிப்பிட வேண்டும். இவ்வாறான விண்ணப்பங்கள் உதவி தேர்தல் ஆணையாளர் சம்பந்தப்பட்ட கிராம சேவகர்களுக்கு அனுப்பி கிராம சேவகர்களின் உறுதிப்படுத்தலைப் பெற்று வாக்காளர் இடாப்பில் பதிவதற்கான அதிகாரத்தை வழங்குவார்.

தங்களுடைய விண்ணப்பத்துடன்-

* சொந்த இடத்தில் இருந்து வெளியேறி இருந்த காலம்
* சொந்த இடத்திலிருந்து வெளியேறியதற்கான காரணம்
* 2010 வாக்காளர் கணிப்பீட் டின் போது தங்களுடைய கிராம சேவகர் பிரிவுக்கு வரமுடியா மைக்கான காரணம்

என்பனவற்றைக் குறிப்பிட்டு சம்பந்தப்பட்ட உதவி தேர் தல் ஆணையாளர்களுக்கு கடிதம் ஒன்றையும் சமர்ப்பிக்க வேண்டும்.

கிராம சேவகரிடமோ, உதவி தேர்தல் ஆணையாளரிடமே தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியாதவர்கள், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங் களை தமது அமைப்பின் பிரதிநிதிகளிடமோ அல்லது நட மாடும் பிரசார வாகனங்களிலோ ஒப்படைக்கலாம் என்றும் தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான (கபே) நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார். (ஒ-02)


## மரண அறிவித்தல்

### திருமதி மரியநாயகம் கிரிஸ்ரினா (பாக்கியம்)



குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மரியநாயகம் கிறிஸ்ரினா (பாக்கியம்) நேற்று (02.10.2011) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ராசதுரை மரியநாயகத்தின் அன்பு மனைவியும், ஜெயசீலி காலஞ்சென்ற ஜெகநாதன் மற்றும் ராஜன், ஜீவா, வசந்தி, மஞ்சு, சூரி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற செல்வம் (கட்டையன்) மற்றும் மரியசீலி, சிறுலுதாசன், விஜயன், முத்துக்குமார், ரவி (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற ஜோண் ஜாக்சன், மற்றும் ரீடா (பிரான்ஸ்), பப்ரிஸ்ரா (நோர்வே), ஜொய்சி (பிரான்ஸ்), டொனா (லண்டன்), விஜி (பிரான்ஸ்), நிருபன் (பிரான்ஸ்), ஜானுகா (லண் டன்), சிந்துஜன் (லண்டன்), ஜினா (கனடா), வெஜின் (கனடா), கில்டா (பிரான்ஸ்), சாந்தன், பிந்து (லண்டன்), சிறான், சிறோ, சாறா (கனடா), யோண் (லண்டன்), கிசோனியா, ரியூலின் (அமெரிக்கா), அனா (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியு மாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.10.2011) திங்கட்கிழமை பிற் பகல் 3 மணிக்கு நல்லடக்கத்துக்காக யாழ்/ புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 7/3, மத்திய கிழக்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம். இலங்கை.

தகவல்:
குடும்பத்தினர்.


## சரணடைந்த முன்னாள் போராளிகளில் 840 பேரின் கதி என்னவாயிற்று?

கொழும்பு, ஒக். 3

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்தவர்களில் இன்னும் 900 பேர் மட்டுமே விடுவிக்கப்படவுள்ளனர் என்று புனர்வாழ்வு மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. அப்பட்டியலில் காணப்படும் 840 முன்னாள் போராளிகளின் கதி என்ன?

இறுதி யுத்தத்தின் போது 11ஆயிரத்து 800 விடுதலைப்புலி உறுப்பினர்கள் சரணடைந்தனர் என்றும் இவர்களில் 8ஆயிரத்து 240 விடுதலைப்புலி உறுப்பினர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்று புனர்வாழ்வு அமைச்சு உத்தியோகபூர்வமாக கடந்த வாரம் அறிவித்திருந் தது.

புனர்வாழ்வு மறுசீரமைச்சின் கணக்குப்படி 3560 விடு தலைப்புலி உறுப்பினர்கள் அரசாங்கத்தின் தடுப்புக்காவலில் இருக்க வேண்டும். இவர்களில் 1700பேரை நேற்று அலரி மாளிகையில் விடுதலை செய்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது.

மிகுதி 1740 பேர் புனர்வாழ்வு மறுசீரமைப்பு ஆரம்பத்தில் தெரிவித்த கணக்கின் படி தடுப்பில் இருக்க வேண்டும். ஆனால் தற்போது 900பேர் மட்டுமே தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பதாக புனர்வாழ்வு மறு சீரமைப்பு அமைச்சு தெரிவித்திருக்கிறது. அவ்வாறானால் 840 போராளிகளுக்கு என்ன நடந்தது? என்று மனித உரிமை ஆர்வலர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (ஒ-10)

## ஊடகங்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்க சமஷ்டி நீதிமன்றத்தில் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இலங்கை ஜனாதிபதியிடம் இருந்து 30 மில்லியன் டொலர் நட்டஈடு கேட்டுத் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்குத் தொடர்பான அழைப்பாணை ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டது. ஆனால் ஜனாதிபதி மாளிகையோ வெளிவிவகாரத்துறை அமைச்சோ நீதி அமைச்சோ அதனைப் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டன.

இதையடுத்தே ஊடகங்களின் மூலம் அழைப்பாணையை ஜனாதிபதிக்கு எட்டச் செய்ய அனுமதிக்குமாறு புரூஸ் பெய்ன் அமெரிக்க சமஷ்டி நீதிமன்றத்திடம் அனுமதி கோரியிருந்தார்.

இந்த அழைப்பாணையை இலங்கை ஜனாதிபதி நீண்டகாலத்துக்குப் புறக்கணிக்க முடியாது என்றும், ஜனாதிபதியிடம் அழைப்பாணை சமர்ப்பிக்கப்பட்டதை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளும் என்று தாம் நம்புகின்றனர் எனவும் புரூஸ் பெய்ன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத் தொடருக்காக நியூயோர்க் சென்றிருந்த சமயம் அங்குள்ள குயின்ஸ்சில் புத்த விகாரைக்குச் சென்றபோது அழைப்பாணையை கையளிக்க அமெரிக்க அதிகாரிகள் முனைந்தனர் எனவும், ஆனால் அவரது பாதுகாவலர்கள் அந்த ஆவணத்தை கையளிக்க முடியாமல் தடுத்து விட்டதாகவும் சட்டத்தரணி மேலும் கூறியுள்ளார்.

''அழைப்பாணை பெறுவதை அவர் தவிர்ப்பது தெளிவாகியுள்ளதால், நீதிபதிகள் மகிழ்ச்சியடையவில்லை. எனவே இந்த அழைப்பாணையை பரிமாற ஊடகங்களின் ஒத்துழைப்பு அவசியம்'' என்றும் புரூஸ் பெய்ன் தெரிவித்துள்ளார். அழைப்பாணையை முழுமையாக வெளியிட முன்வருமாறு உலகிலுள்ள ஊடகங்களுக்கு குறிப்பாக இலங்கையில் உள்ள ஊடகங்களுக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார். (உ)


### பணியாளர்கள் தேவை

முல்லைத்தீவில் இயங்கிவரும் உணவகத்துக்கு உடனடியாகபணியாளர்கள்தேவை.சமையலாளர், வெயிற்றர், உதவியாளர், ஆண், பெண். சம்பளம் நேரில் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு- 0772489122


## மன்னார் படுகையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பந்தங்கள் பல்வேறு நாட்டு நிறுவனங்களிடம் வழங்கப்பட்டன.

அதில் ஒரு பிரிவில் எண்ணெய் அகழும் பணிகள் லண்டனில் பதிவு பெற்றுள்ள கெய்ன் நிறுவனத்தின் கிளை நிறுவனமாகிய கெய்ன் இந்தியா நிறுவனத்தின் துணை நிறுவனமாகிய கெய்ன் சிறிலங்கா நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. கடந்த ஒகஸ்ட் மாதம் அந்த நிறுவனம் தனது பணிகளை ஆரம்பித்தது. கடல்படுகையில் துளையிட்டு மேலதிக ஆய்வுகளை மேற்கொண்டது. அந்த நிறுவனமே இப்போது எரிவாயு வளம் இருப்பதை உறுதி செய்து ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளது

மன்னார் கடல்படுகையின் எஞ்சிய பிரிவுகளில் எண்ணெய் அகழ்வதற்கான ஒப்பந்தங்களை சீன தனியார் நிறுவனம் மற்றும் மற்றொரு இந்திய நிறுவனம் என்பவற்றிடம் அரசு வழங்கி உள்ளது. எனினும் கெய்ன் சிறிலங்கா நிறுவனம் தவிர்ந்த ஏனைய நிறுவனங்கள் திட்டமிட்டபடி தமது பணிகளைத் தொடங்கவில்லை.

தற்போது கண்டறியப்பட்டுள்ள எரிவாயு வர்த்தக ரீதியாகப் பயன்படுத்தத்தக்கதா இல்லையா என்பதை அறிய மேலும் அகழ்வு வேலைகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதாக கெய்ன் நிறுவனம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்திருக்கின்றது.

இலங்கை தனது எரிபொருள் தேவைக்காக மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதை நம்பியிருக்கின்றது. 2009ஆம் ஆண்டில் மட்டும் எரிபொருள் இறக்குமதிக்கென 3 பில்லியன் அமெரிக்க டொலர்களை நாடு செலவிட்டுள்ளது.

இதேவேளை, எண்ணெய் அகழ்வுப் பணிகளுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தாமல் இருப்பதற்காக நேற்றுக் கடலில் மீன்பிடிப்பதை நிறுத்தும்படி ஏற்கனவே கடல்தொழில் வளத்துறை அமைச்சுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்போது எரிவாயு இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ள நிலையில் மேற்குக் கரையையொட்டி வாழும் மீனவர்களின், குறிப்பாகப் பெரும் எண்ணிக்கையான மீனவர்களின் வாழ்வாதாரம் பறிபோகும் என்று மீனவர் சங்கப் பிரதிநிதிகள் கவலை தெரிவிக்கின்றனர். (உ)

## ஐ.தே.கவுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு தனது அரசியல் தீர்வு யோசனையை நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு சமர்ப்பித்தால் அதைப் பரிசீலித்து எமது நிலைப்பாட்டை நாம் தெரிவிப்போம். எப்படியிருப்பினும், அரசியல் தீர்வு விரைவாக வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே'' என்று ரணில் மேலும் கூறினார்.

அரசியல் தீர்வு, மனித உரிமை மீறல்கள் மற்றும் நிபுணர்கள் குழு அறிக்கை போன்றவை தொடர்பில் இலங்கை அரசு இந்தவருட முடிவுக்குள் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். இல்லையேல் இலங்கை மீது சர்வதேச நாடுகளின் தலையீடுகள் அதிகரித்துவிடும் எனவும் அவர் எச்சரித்தார். (உ-சி)


## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன் கு.துபாகரனின்
தந்தை

### தாமோதரம்பிள்ளை குமாரகுலசிங்கம்

அவர்கள் 02.10.2011 அன்று
இறைபதம் அடைந்த செய்தி
அறிந்து ஆழ்ந்த
வேதனையடைகின்றோம்.
அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா(HNDE)
தமிழ் மாணவர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் கணபதி வேலுப்பிள்ளை



கோண்டாவிலைச் சேர்ந்த
கணபதி வேலுப்பிள்ளை கடந்த
(01.10.2011) சனிக்கிழமை
காலமான செய்தி அறிந்து
மிகவும் வருத்தமடைகின்றோம்.

எமது உறவாய் பாசத்துடன்
பல்லாண்டு வாழ்ந்தீர்
இன்று எமை விட்டு உமது பிரிந்த
உறவுகளுடன் இறைவனடி சேர்ந்தீர்



உமது பிரிவால்
துயரடைந்திருக்கும் அனைத்து
உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

கோண்டாவில்.

கணபதி நாகலிங்கம்
குடும்பத்தினர்.

# வாக்காளர் இடாப்பு பதிவுக்கான சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 3

ஏற்கனவே வாக்காளர்களாகத் தம்மைப் பதிவு செய்துகொள்ளத் தவறியவர்கள், பதிவு செய்வதற்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை வடக்கு மக்கள் அனைவரும் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யத் தவறினால் - பதிவு செய்யப்படாவிட்டால் ஏற்படப்போகும் பாதகங்கள் ஏராளம். இதனை அனைவரும் புரிந்து கொண்டு செயற்படவேண் டும். இது விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூடிய கரிசனை எடுத்துள்ளது.

அதன் ஒரு கட்டமாக பிரதேச சபைகளின் உறுப்பினர் கள் மூலம் பொதுமக்களுக்கு தெளிவு படுத்தவும் விளக்கிக் கூறவும் ஏற்பாடாகியுள்ளது.

இது தொடர்பான விசேட கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 7 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடந்துவதற்கு முடிவாகியுள்ளது. அந்தக் கருத்தரங்குக்கு அனைத்து பிரதேச சபை உறுப்பினர்களும் அழைக்கப்படவுள்ளனர்.

கருத்தரங்கு நடைபெறவுள்ள இடம் குறித்து ஓரிரு தினங்களில் அறிவிக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

(ஒ)

**PAPER CLASS**

கணக்கீடு

2012 & 2013

திங்கள்,வெள்ளி-3p.m-4p.m

R.சுகிர்தன் B.Com.Acc.Spl

இன்று ஆரம்பம்:03-10-2011

**BEACON-யாழ் நகர்**

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பி கு.கஜந்தினியின் அன்புத் தந்தை

**தா.குமாரகுலசிங்கம்**

அவர்களின் பிரிவால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்கெடுப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

**நண்பர்கள், 30 ஆம் அணி, யாழ்.மருத்துவ பீடம்.**

## மரண அறிவித்தல்

*தாமோதரம்பிள்ளை குமாரகுலசிங்கம்*



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை குமாரகுலசிங்கம் நேற்று (02.10.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், தேவநேசத்தின் அன்புக் கணவரும், குமுதினி (HNB - திருகோணமலை), Dr.கலைவாணி (களுபோவில வைத்தியசாலை), ஹஜந்தினி (யாழ். மருத்துவபீடம் 4 ம் வருடம்), துபாகரன் (HNDE மட்டக்குளிய தொழில்நுட்பக் கல்லூரி, 4 ஆம் வருடம்), விதுரசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தா.ஞானப்பிரகாசம் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - யாழ். இந்துக்கல்லூரி), கலாநிதி தா.அமிர்தலிங்கம் (ஓய்வுபெற்ற பிரதி அதிபர், யாழ். அத்தியார் இந்துக்கல்லூரி, தா.கமலாம்பிகை (Poly - technical College, கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், த.புஸ்பகரன் (Jaffna service station - மருதனானர் மடம்), V. கமலநாதன் (Merchandiser Lucky Industries ஆகியோரின் அன்பு மாமனும், காருணியாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 03.10.2011 திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

K.K.S.வீதி,
இணுவில் மேற்கு, இணுவில்.

*தகவல்:*
குடும்பத்தினர்.

# சட்ட அறிவூட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக்.03

வடமாகாண உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளுக்கும், உத்தியோகத்தர்களுக்குமான சட்ட அறிவூட்டல் கருத்தரங்கு எதிர்வரும் 10, 11, 12 ஆம் திகதிகளில் கொழும்பு 07, இலங்கை மன்றக்கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கு வடபகுதியில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்ற பிரதி நிதிகள், அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்கள் ஆகியோருக்காக நடத்தப்படுவதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

**கடைகள் கைமாறிக் கொடுக்கப்படும்**

யாழ் நகரை அண்டிய ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள இல.769, 771 ஆகிய வாடகைக் கடைகள் (இன்ரநெற்கபே) பொருட்களுடன் கைமாறிக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0776284313, 021 2220212

**ஆடு விற்பனைக்கு**

2 போத்தல் பால் கறக்கக் கூடிய யமுனாபாரி ஆடும், குட்டியும் உடன் விற்பனைக்குண்டு.

T.P: 0773608830

## பாடசாலைத் தடகளம்

# வட மாகாணத்துக்கு மேலும் பதக்கங்கள்

யாழ்ப்பாணம், ஒக.03

தியகம மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வரும் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டியின் மூன்றாம் நாளான நேற்று வடமாகாணம் 4 வெண்கலம் , 2 வெள்ளி அடங்கலாக ஒரு வர்ண விருதையும் பெற்றது.

✱ 17 வயது பெண்களுக்கான கோல் ஊன்றிப் பாய்தல் போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவிகளான கே.டக்சனா, இ.மேரி பெளசினா, சி.குணசிகா ஆகியோர் 2.30 மீற்றர் உயரத்தினை கடந்து மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தினை பெற்றுக்கொண்டனர்.

✱ 19 வயது ஆண்களுக்கான குண்டு எறிதல் போட்டியில் உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் மாணவன் ஆர்.நிமலேந்திரன் 12.88 மீற்றர் தூரம் எறிந்து இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தினை தனதாக்கினார்.

✱ 21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி மாணவன் எஸ்.பாலசங்கர் 1.92 மீற்றர் தூரம் பாய்ந்து இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றார்.

✱ 21 வயது பிரிவு ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் இணுவில் மத்திய கல்லூரி மாணவன் எஸ்.செந்தூரன் 54.85 மீற்றர் தூரம் எறிந்து மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தினை வென்றார்.

✱ 17 வயது பிரிவு பெண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவி ஆர்.தர்சிகா 28.93 மீற்றர் தூரம் எறிந்து 4 ஆவது இடத்தினைப் பெற்று வர்ண விருதைப் பெற்றுக்கொண்டார்.

வடமாகாணம் முதல் இருநாள் போட்டிகளில் 3 தங்கம் 3 வெள்ளி , 2 வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுள்ளது.

தடகளப் போட்டியின் இறுதிநாள் இன்றாகும். இன்று மாலை பரிசளிப்பு வைபவமும் இடம் பெறவுள்ளன.

(10-23)

**தவறிவிட்டது**

குடும்ப அட்டை, வங்கிப்புத்தகம், வீட்டுத் திறப்பு, உறுதிக்கொப்பி உட்பட முக்கியமான ஆவணங்கள் கலட்டிப் பிரதேசத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.சன்மானம் வழங்கப்படும்.

T.P:-0213734194, 0778002788

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிளி / கனகபுரம் மகாவித்தியாலயம்
செல்வி கிஷோரினி திருவரசு
புள்ளிகள் 168



கிளி / கிளிநொச்சி மகாவித்தியாலயம்
செல்வி மதுஷா சதீஸ்
புள்ளிகள் 162

இவர்களிருவரும் 2011 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் கனகபுரம் கிராமத்தில் சித்தியடைந்தலமையயிட்டு பாராட்டுவதுடன் இவர்கள் கல்வியில் மேன்மேலும் சிறந்து விளங்க வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

**ஸ்ரீ காந்தா சனசமூக நிலையம், கனகபுரம்**

கனகபுரம் வாழ்மக்கள்.

**கார் விற்பனைக்கு**

இல WP KI (XXXX) Lancer 1.6 grey கலர் வைத்திய நிபுணரின் பாவனையில் உள்ள புதிய கார் கொழும்பில் விற்பனைக்கு உண்டு.

T.P: 0776547879

**PAPER CLASS**

யூனிவோர்ச்சல் கந்தர்மடம்

| | |
|---|---|
| கணக்கீடு<br>திரு.தவா<br>செவ்,வியா-6am | அளவையியல்<br>திரு.துரை<br>செவ்,வியா-5pm |
| பொருளியல்<br>திரு.சண்<br>செவ்,வியா-4 pm | அரசியல்<br>திரு.செந்தூரன்<br>திங்,புத-4pm |
| வணிகக்கல்வி<br>திரு.பிர்தீபன்<br>செவ்,வியா-5pm | |

*"அழகு தொடக்கம் ஆரோக்கியம் வரையிலான சேவைகள்"*

நிழல் அல்ல நிஜம்!!!

"SANEYA HERBAL CARE"

262 - செம்மணி வீதி, நாயன்மார்கட்டு ஆயுள்வேத வைத்தியசாலை நாயன்மார் கட்டு, நல்லூர், யாழ்ப்பாணம்.

★ ஒரே வாரத்திலே உங்கள் கருமைநிறம் நீங்கி அழகிய நிறம்! முகப்பருக்கள், முகச்சுருக்கம், பழைய பரு அடையாளங்கள், கரும்புள்ளிகள், தழும்புகள், கருவளையம் உதடுகருமை நீக்கம்,போன்ற சிகிச்சைகள்.

★ உடற்பருமன் கூட்டுதல், குறைத்தல் மற்றும் முகப்பொலிவுச் சிகிச்சைகள், உடலழகு சிகிச்சைகள்.

★ முடி உதிர்வு, இளநரை, பொடுகு, முடி கருமையாக்கல் சிகிச்சைகள்.

★ இடுப்பு, வயிறு, கை, கால், மார்பு தசைகள் குறைவதற்கான சிகிச்சைகள்.

★ ஆயுள்வேத பேசியல்கள்.

"முற்றிலும் ஆயுள்வேத சிகிச்சைகள்"
பக்கவிளைவு அற்றவை

முற்பதிவுகளுக்கு அழையுங்கள்

0774011129, 0777351954.

"WE CARE ALWAYS"

**உலக நாடுகளுக்கான ஆகாய, கடல் மார்க்கமான துரித கடிதங்கள் பொதிகள் சேவை**

மிக குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்பு பொருட்கள், புடைவைகள், CD Vedio க்கள் என்பன மிக விரைவாக அனுப்பிட DHL

* மிக விரைவாக உங்கள் உறவுகளின் இடங்களில் ஒப்படைக்கப்படும். (காப்புறுதி உண்டு)
* கடல் உணவுகள், மருந்துப் பொருட்கள் என்பன அனுப்பப்படும்.
* வெளி நாடுகளில் மேலதிக கட்டணம் அறவிடப்படமாட்டாது.

மற்றும் ஒரு சேவை
01/10/2011 இல் இருந்து
லண்டன் சுவிஸ் ஆகிய நாடுகளுக்கு 1kg - 400/=
கனடாவிற்கு 1kg - 500/=
(PICKUP SERVICE)

DHL கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.
650/= ரூபாவிலிருந்து.

**திருமுருகன்கொம்நெற்**

(வடமாகாணத்தில் அங்கீகாரம் பெற்ற DHL முகவர்)



**Head Office.**
259, K.K.s Road, Jaffna.
* No.18, main Road, Nelliyadi.
* No.05, Thirumurugan, Main Road, Kilinochchi.
* No.46, Adijapatham Veethy, Thirunelvely.
* TCN Express
2B, Nelsen place, Colombo 06. Hot Line - 021 2227835

**மலிவு விலையில் COMPUTERS**

3.2Ghz LGA775 Processor
1Gb DDR2 RAM
24X DVD Writer
256Mb Turbo VGA
HDD 80Gb Sata
Built in Sound
Built in Network
16'' View Sonic LCD
Speaker
Keyboard
Mouse
Mouse Pad

1 Year Warranty
Windows 7 Compatible

இவை அனைத்தும்
26,500/=

5Mp Web Camera 1250/=
7.2 Dengle(€173) 4250/=
Speaker 300/= to 800/=
Head Phone 300/= to 700/=
Key Board 350/= to 500/=
Mouse 250/= to 500/=

PC MATE
SYSTEMS
Computer Sales & Repair
176/14, Temple Road, Nallur
(கைலாச பிள்ளையார் கோவில் அருகில்)
021 222 4692 / 077 968 9043
077 053 0566

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.10.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.